ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

சமயப் பொதுநெறி கண்ட

சற்குருநாதர்



வெளியீடுவோர் :

வித்துவான். சு. மங்கையர்க்கரசி

11-B. நிமந்தகார ஒற்றைவாடை வீதி,

பெரிய காஞ்சிபுரம்-631502

மகா சட்டம்

அகண்டாகார சச்சிதானந்தப் பொருளாய் அனைத்திலும் நின்று நிலவும் இறைவனைத் தன்னுள்ளே அறிந்து, அவனோடு கலந்து உறவாடுவதற்காகவே நீதிகளும், சாத்திரங்களும் வகுக்கப்பட்டன. அச்சாத்திரங்கள் அவ்விறைவனைப் போன்றே பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் தன்னுள்ளே அனைத்தையும் அடக்கிக் கொண்டதாய், அறிவற்ற சடப்பொருளுக்கும், உயர்ந்த அறிவுள்ள ஞானிக்கும் அவ்வப்போது வேண்டிய நீதிகளைத் தன்னகத்தே கொண்டதாய், 'நவில்தொறும் நூல்நயம்போல' பயிலப் பயிலப் புது உண்மைகளைக் கொண்டதாய், எந்நாட்டினர்க்கும், எம்மதத்தினர்க்கும், எம்மொழியினர்க்கும், எக்காலத்திலும் பொருந்தக்கூடிய உண்மைகளை உடையதாய் விளங்குகின்ற ஒன்றே 'நீதி நூல்' எனப்படும். அதுவே 'சாஸ்திரம்' என்றும் பகரப்படும். அதுவே 'மகா சட்டம்' என்றும் இயம்பப்படும்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

சமயப் பொதுநெறி கண்ட சற்குரு நாதர்

(ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு)

★

ஆக்கியோன் :

பாலகவி **மி. கே. வேங்கடராமன்**

★

வெளியிடுவோர் :

வித்துவான். சு. மங்கையர்க்கரசி

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி

பெரிய காஞ்சிபுரம்-631 502.

விலை ரூ. 6-00

முதற் பதிப்பு - 1982
பிரதிகள் - 1200

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

பாலகவி. வேங்கடராமன், இரெட்டியப்பட்டி,
நாகலாபுரம் அஞ்சல்-627 904.
(நெல்லை மாவட்டம்)

★

வித்துவான். சு. மங்கையர்க்கரசி,
11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி,
பெரிய காஞ்சிபுரம்-631 502.

★

A. வெங்கடாசலம்,
உரிமையாளர், ஸ்மார்ட் பிரிண்டர்ஸ்,
161, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை-600 001

உரிமை ஆசிரியர்க்குரியது

மூவேந்தர் அச்சகம், சென்னை—14,
தொலைபேசி : 847189,

முன்னுரை

'செந்தமிழ் விளக்க வள்ளலார்', 'ஆட்சிச் சொற் காவலர்'
'செந்தமிழ் வித்தகர்', 'நற்றமிழ் நம்பி,' 'தமிழ்ச்சுடர்',
'சாந்த சீலர்'

உயர்தவத்திரு. கீ. இராமலிங்கனுர், எம்.ஏ., அவர்கள்

'பாயிரம் அல்லது பனுவல் அன்றே' என்பது இலக்கண விதி, **'கருணை மிகு வள்ளல்'** ஓர் அரும் பெருங் காப்பியம். அது இனிமையும் எளிமையும் சிவணி, உள்ள உருக்கமும், உறு சுவையும் பொதிந்த 4672–எழில்மிக்க பாடல்களால் ஆனது. அவற்றின் உட்கருத்தையும், செய்திகளின் செம்மையையும், காவியத்தை ஓதுபவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு பாயிரம்போல் அமைந்துள்ளது. இதைப் படித்து விட்டுக் காவியத்தை ஓத முற்படுவது உகந்த தாகும் என்று, சிலர் கூறிய கருத்திற்கு இணங்க இவ் வுரைநடை நூல் எழுதப் பெற்றதாயினும், இது தனித்த ஒரு நூலாகவும் பயன் கொள்ளத் தக்கது.

காவியப் பாடல்கள் அனைத்தையும் முனைந்து தொடர்ந்து பயின்று முடிக்க இயலாதவர்கள், இந்நூலைப் படித்துக் காவியத்திலுள்ள வரலாற்றையும், செய்திகளையும் இனிது தெரிந்து கொள்ளலாம். பாடல்களின் இனிமையையும் வளமையையும் சுவைக்க முடியாமற்போனாலும், அழகு கனிந்து, எதுகை மோனை நலம் துதைந்து, உள்ளத்தைக் கவரும் தன்மையதாக விளங்கும்

இந்நூலின் நடையினுல் ஈர்க்கப் பெறுவர். இதில் அருள் உணர்வும், பத்திப்பாங்கும் ஊற்றெடுத்துப் பொங்குகின்றன. எனவே, இதனைத் தனி நூலாக வெளியிடவேண்டும் என்னும் அவா உறுத்து உந்தியிருப்பது பொருத்தமானதே.

குருபரனுரின் அருட் செய்திகளை இயம்பும் 'வழிகாட்டும் வான்பொருள்' என்னும் முதல் நூலுக்கு இது வழிநூலாக இலங்குகின்றது. குரு தேவரின் அருள் நலத்தைப் பெறுவதற்கு இந்நூல் பெரிதும் துணையாக இருக்கும்.

இதன் ஆசிரியர் தவத்திரு, பாலகவி வேங்கட ராமன் அவர்கள் குரு பெருந்தகையாரின் வழிபாட்டுக்கும், அருள் வேட்டலுக்கும் தேவை யாகும் ஏராளமான மந்திரப் பாடல்களை இயற்றி யுள்ளார்கள். குரு பிரானுரின் பூசைக்கு அவை ஆகமங்கள் போன்று மிளிர்கின்றன. குருநாதரைப் பற்றி ஒரு பெருங் காப்பியம் வரைந்து வழங்கிய தோடு, அக் காவியத்துக்கு அணி செய்வதுபோல, இந்நூலை யாத்து அளித்து இருக்கின்ருர்கள். தமது உடல் பொருள் ஆவி மூன்றையும், தம் வாழ் நாள் முழுவதையும் ஆண்டவர் அருட்பணிக்கு அடைக்கலப் படுத்தியிருப்பதை அடியவர் பலரும் நனி அறிவர்.

இந்த நூலை அனைவரும் போற்றிப் படித்து, குரு பெருமானின் அருளுக்கு அடியராகி, எல்லா நலங்களையும் இனிது பூண்டு இன்புற வேண்டும் என்பது எனது வேட்கை.

'தமிழ் மணம்'
சென்னை-30.

கீ. இராமலிங்கம்
21—8—1982

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	தோற்றமும் இளமையும்	...	6
2.	மதுரை வாழ்க்கையும் பூரணர் காட்சியும்	...	14
3.	அருந்தவத் தொடக்கம்	...	27
4.	அன்னையார் அடக்கம்	...	30
5.	பூரண தவமும் பூரணர் அருளும்	...	35
6.	திருவருட் சட்டம்	...	42
7.	அருளுலாச் செய்தலும் அடியரைத் தேர்தலும்	...	61
8.	அண்ணலார் அடக்கமும் ஆலய அமைப்பும்	...	74
9.	சர்வ சமய சமரசம்	...	76
10.	அடியவர் இலக்கணம்	...	84
11.	அடியவர்தம் அளப்பரும் பெருமை	...	85
12.	அடியவர் உறவு	...	86

குருநாதர் துதி

1. அகம்புறம் அனைத்துமாகி அங்குமிங்கு மெங்குமாய்
சகம்பரந்த பாதலம் தழைந்தவின் தலங்களாய்
இகம்பரம் வழங்குமெங்கள் எந்தையாய் இறைவனுய்
அகம்பிறங்கு கோயிலுள் ளமர்ந்திலங்கும் ஆதியே.

2. கற்பனை யனைத்தையும் கடந்திலங்கு கர்த்தனே
சிற்பமாகிச் சித்திரத் தெழிலுமான தேவனே
உற்பவம் மரிப்பிலா ஒருவனே இறைவனே
பொற்பனைத்தும் நல்கிமெய்ப் புனிதமாக்கு புண்யனே.

3. உம்பரும் உணர்வதற் கரியனு யொளிருவாய்
நம்புமெய் யடியருள்ளம் நண்ணிவாழ் இயல்பினுய்
அம்பலத்தி லாடுநின்ற ஞுடல்காட்டி யாளுவாய்
செம்பொருட் டெளிவுணர்த்து தேசிகர் தலைவனே.

4. அஞ்சலென் றடியர்தம்மை யாண்டருள்செய் அத்தனே
செஞ்சொல்கூறி யன்பரைத் திருத்துதூய சீலனே
நஞ்சையொத்த நெஞ்சொடுள்ள நாயினேனை யாண்டருட்
செஞ்சரண் வழங்கியாள்க தேவர் வாழ்த்துசெம்மலே.

5. இருடிநன் னகர்க்கண்தோன் றிறைவன்பாதம் வாழ்கவே
திருடிஎன் னுளம்கவர்ந்த தேவன்பாதம் வாழ்கவே
பருதிகோடி போல்விளங்கு பரமன்பாதம் வாழ்கவே
சுருதியாவும் என்றுமேத்தும் தூயன்பாதம் வாழ்கவே.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அகண்டாகார சச்சிதானந்த சொரூபமே ! புறத்தே ஒடுக்கி, அகத்தே அமைதி பெற்றது போல், என்பொறி புலன்களும் கரணங்களும் ஒடுங்கி நின்று, உடலின் ஒவ்வோர் அணுவிலும் ஆன்ம ஜோதியைக்கண்டு, அதனோடு இயையும் பெரு வாழ்வு அளிப்பீர். இஃதன்றி யான் வேண்டுவது ஒன்றில்லை.

இறைவா ! இறைவா ! இறைவா !

குருநாதர் துதி

1. அகம்புறம் அனைத்துமாகி அங்குமிங்கு மெங்குமாய்
சகம்பரந்த பாதலம் தழைந்தவின் தலங்களாய்
இகம்பரம் வழங்குமெங்கள் எந்தையாய் இறைவனாய்
அகம்பிறங்கு கோயிலுள் ளமர்ந்திலங்கும் ஆதியே.

2. கற்பனை யனைத்தையும் கடந்திலங்கு கர்த்தனே
சிற்பமாகிச் சித்திரத் தெழிலுமான தேவனே
உற்பவம் மரிப்பிலா ஒருவனே இறைவனே
பொற்பனைத்தும் நல்கிமெய்ப் புனிதமாக்கு புண்யனே.

3. உம்பரும் உணர்வதற் கரியனு யொளிருவாய்
நம்புமெய் யடியருள்ளம் நண்ணிவாழ் இயல்பினாய்
அம்பலத்தி லாடுகின்ற னுடல்காட்டி யாளுவாய்
செம்பொருட் டெளிவுணர்த்து தேசிகர் தலைவனே.

4. அஞ்சலென் றடியார்தம்மை யாண்டருள்செய் அத்தனே
செஞ்சொ[illegible] திருத்துதூய சீலனே
நஞ்[illegible] நாயினேனை யாண்டருள்
செஞ்ச[illegible] தேவர் வாழ்த்துசெம்மலே.

5. இரு[illegible]தோன் றிறைவன் பாதம்
வாழ்கவே
திரு[illegible] தேவன்பாதம் வாழ்கவே
[illegible] பரமன்பாதம் வாழ்கவே
[illegible] என்றுமேத்தும் தூயன்பாதம் வாழ்கவே.



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அகண்டாகார சச்சிதானந்த சொரூபமே! புறத்தே ஒடுக்கி, அகத்தே அமைதி பெற்றது போல், என்பொறி புலன்களும் கரணங்களும் ஒடுங்கி நின்று, உடலின் ஒவ்வோர் அணுவிலும் ஆன்ம ஜோதியைக்கண்டு, அதனோடு இயையும் பெரு வாழ்வு அளிப்பீர். இஃதன்றி யான் வேண்டுவது ஒன்றில்லை.

இறைவா! இறைவா! இறைவா!

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

சமயப் பொதுநெறி கண்ட சற்குருநாதர்

(ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறு)

சுவாமிகள் அவதார காரணம்

பூவுலகின்கண் வாழும் உயிர்கள் இறவாப் பெருநிலை அடைய வேண்டும் என்பதே எல்லாச் சமயங்களின் பொது நோக்காகும். அவ்வக்காலத்துக்குப் பொருத்தமான முறையில், அவ்வப்போது திருஅவதாரம் செய்த மகான்கள் போதனை செய்துள்ளார்கள்.

பாரத நாட்டின் அடிப்படை ஆன்மிக தத்துவங்களை ஆன்றோர் உணர்த்தியும் வாழ்ந்தும் காட்டினர். பண்டைக் கால முதல் நம் நாட்டின் சிறப்புக்குக் காரணமே இந்த ஆன்மிக வாழ்வு தான்.

பல மகான்கள் ஆன்மிக வாழ்வு வாழ்ந்து காட்டியும், தம் சீடர்களுக்குப் போதித்தும் அருள் நெறியைப் பரப்பினர். வியாசர், திருமூலர், சைவ சமய குரவர்கள், ஆழ்வார்கள், பட்டினத்தார், தாயுமானவர், இராமகிருஷ்ணர், இராமலிங்கர் போன்ற பல மகான்கள் இதற்காக அரும்பாடு பட்டுள்ளனர்.

வடநாட்டில் இராமகிருஷ்ணரும், தென் நாட்டில் இராம லிங்கரும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொது நெறியை உலக மக்களுக்குப் போதித்தனர்.

விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் சுருங்கிவிட்டது. மிகச் சேய்மையில் உள்ள நாடுகளும் அண்மை நாடுகள் ஆகிவிட்டன. இந்நிலையில் எல்லா மதங்களைச் சார்ந்த பெருமக்களும், உலகம் முழுவதற்கும் ஒரே நெறி—ஒப்பற்ற நெறி—அனைவரும் கடைப் பிடிக்கும் எளிய நெறி—அன்பு நெறி—தூய நெறி—ஆடம்பர மற்ற உண்மை நெறி—அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க உயர்ந்த நெறி தேவை என்று பேராவல் கொண்டனர். அவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்யவே இரெட்டியப்பட்டி சுவாமிகள் அவதாரம் செய்தனர். அவர்தம் வரலாறு பற்றி அறிந்து கொள்வோம்.

உலகில் வாழும் எல்லா உயிர்களும் ஆன்மிக நெறியின்றி நல்வாழ்வு வாழ முடியாது. அந்த உயர்நெறியைச் சுவாமிகள் இனிது வகுத்து, 'அருட்சட்டம்' என்று பெயர் தந்து, அனைத்து உயிர்க்கும் பொது நெறியாக வழங்கியுள்ளனர். மக்களை உயர் நெறியில் திருப்பி, அருள் வாழ்வு வாழச் செய்வதற்காக மலர்ந்ததே இவ்வருட்சட்டம்.

திருக்குறள் எவ்வாறு உலகப் பொது மறையாய் விளங்கு கின்றதோ, அதுபோன்று இவ்வருட்சட்டமும் உலகப் பொது நெறியாய் விளங்குவது. இப்பெருநெறியினைத் தந்த பெரியாரது வாழ்க்கையையும், இப்பெருநெறியின் தத்துவங்களையும் உணர்த்துவதே இந்நூலின் நோக்கமாகும்.

பாண்டிய நாடு

புண்ணிய பூமியாம் பாரத நாட்டில் பொலிவுற்றொளிர்வது பாண்டிய நாடாகும். இயற்கையின் எழிலும் இன்னருள் வளமும் சிறந்து விளங்கும் பொதிகை மலையும், உயிர்களுக்கு உயர்நலம் விளைக்கும் பதிவிரதை என போற்றப்பெறும் தாம்பிரபரணி நதியும், தெய்விகத் தமிழின் திறனை உணர்ந்து எதிரேறச் செய்யும் பெருஞ்சிறப்பு வாய்ந்த வையை மாநதியும், தரணிவாழ் மக்களின் தாபம் தவிர்க்கத் தண்ணெனத் தவழும் தகவுசால் தென்றலும் இந்நாட்டின் மேன்மையை இனிதுணர்த்துகின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நானில வளங் களும், சிவபெருமானின் தனிப்பெருங்கருணையை இனிது விளக்கும் பதினான்கு சைவத் திருத்தலங்களும், ஆழ்வார் பெரு மக்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற பதினெட்டு வைணவத் திருப்பதிகளும், சிறப்புற்றுத் திகழும் பல விநாயகர் தலங்களும், முருகன் தலங்களும, சக்தி ஆலயங்களும அந் நாட்டின்கண்ணே நலம் பல விளைத்த வண்ணம் விளங்கும்.

மதுரை மாநகரம்

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பொற்கைப் பாண்டியன் முதலான முடிமன்னர்கள் நீதியை நிலை நாட்டியதும் நின்றசீர் நெடுமாறர், மங்கையாக்கரசியார், குலச்சிறையார், மூர்த்தி நாயனார், பெரியாழ்வார் முதலிய பேரருளாளர்கள் அருட் பயிரை வளர்த்ததும், நிலமகளின் திருமுகம் போலத் திகழ்வது மான மதுரை மாநகரம் பல்வளமும் சிறந்திலங்கும் அப்பாண்டிய நாட்டின் தலைநகராகப் பொலியும்.

1. தோற்றமும் இளமையும்

இருடியர்பட்டி

மதுரை மாநகரின் தெற்கில் 52 மைல் தொலைவில் சுவாமிகள், அவதரித்த திருத்தலம் உள்ளது.*

இருடியர்கள் பலர் அங்கிருந்து தவம் இயற்றி அருளெய்தலாலும், சிவபெருமான் உமையம்மையை மணந்தபோது அகத்திய முனிவர் தென்திசை நோக்கி வருவதுணர்ந்த இருடியர் பலர் நறுமலரும் செழுங்கனிகளும் கொண்டு அன்புடன் வரவேற்று அளவளாவி மகிழ்வுற்றதாலும், அத்தலத்திற்கு இருடியர்பட்டி எனும் பெயர் அமைந்தது என்பர். தற்காலத்தில் அவ்வூரை இரெட்டியப்பட்டி என அழைக்கின்றனர்.

கம்பு, தினை, கேழ்வரகு, சோளம், உளுந்து, மல்லி, மிளகாய், பருத்தி முதலிய விளைவை யளிக்கும் புன்செய் நிலம் அங்குப் பொலிவுற்று விளங்கும்.

சிவபெருமானும் கணேசரும் உகக்கும் தும்பை மலரும் அறுகம் புல்லும், சிவபெருமானும் திருமாலும் உகக்கும் துளசியும், சக்தியருள் எனத் திகழும் இன்வேம்பும் அத்தலத்தில் எங்கணும் திகழும்.

உயிர்களுக்கெய்தும் இன்னல் களைந்து, இம்மை மறுமை நலங்கள் வழங்கி, இனிது பாலிக்கின்ற சக்தி ஆலயம் அத்திருத் தலத்தின் ஈசான்ய மூலையில் எழிலுடன் விளங்கும்.

உழவு செய்வோரும், தொழில் புரிவோரும் அங்கு வாழ் வாற்றுகின்றனர். அது ஒரு சிறிய கிராமமாக இருந்தாலும் சமய சமரசம் கண்ட சற்குருநாதரை ஈன்றெடுத்த பெருமை யுடையதாகும் என்பதை நாம் உளம் கொண்டு போற்ற வேண்டும்.

ஈன்றோர் பெருமை

அருட்பொலிவோடு திகழும் சக்தி ஆலயத்தில் அனைத் துயிரும் நலமடைய நாள்தோறும் உயர் பூசையாற்றிவரும் வீரப்பத்திரப்பிள்ளை என்பவர் வேளாண் மரபைச் சார்ந்தவர். அவர் நல்ல உள்ளம் உடையவராய், எல்லோருக்கும் இதம் செய்

---

* மதுரையிலிருந்து அறுப்புக்கோட்டை புதூர் கடந்து, நாகலாபுரம் சேர்ந்து, கிழக்கே அரை மைல் சென்றால் இருடியர்பட்டியை அடையலாம்.

பவராய், ஊரில் எச்சிக்கல் ஏற்படினும் இனிய முறையில் தீர்த்து வைப்பவராய், அல்லலின்றி அமைதியுடன் பலரும் நல்வாழ்வாற்ற உதவுபவராய் விளங்கினர். தொண்டு, ஈகை, பணிவு, இன்சொல், ஒப்புரவு முதலிய உயர்குணங்களுடன், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போன்று திகழ்ந்து வந்தனர்.

அவரது வாழ்வரசியார் ஆவுடையம்மையார் கருணையுள்ளம் படைத்தவராய், ஏழைகட்கிரங்கும் இயல்புடையவராய், பலர்க்கும் உதவும் பாங்குமிக்கவராய் இலங்கினர். அன்பும் அறமும் பண்புறப் பேணி இவர்கள் இல்வாழ்வு நடத்தி வருங்கால், இறை திருவருளால் இருமூன்று மகவையீன்று, இன்னருட் பண்பு மிகுந்து பொலிந்தனர்.

ஒரு நாள் ஆவுடையம்மையார் உறங்கும்போது அருட்பெருஞ் ஜோதியொன்று தம் திருவயிற்றினுட் புகுந்ததாக ஒரு சிறந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்து, தம் கணவரிடம் கூறினர். அவரும் இது கேட்டு, நாம் முற்பிறவிகளிற்செய்த தவப்பயனே இஃதென உணர்ந்து போற்றி வந்தனர். இருவரும் தினமும் திருவருளை வழுத்தி, இக்கருவில் வளரும் தெய்வக் குழந்தையால், திருவருட் பேரொளி இந்நிலவுலகில் வளர்ந்தோங்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வந்தனர்.

திரு அவதாரம்

கலியுகம் 4957, நள ஆண்டு, புரட்டாசித் திங்கள், இரண்டாம் நாள் (16-9-1856) செவ்வாய்க்கிழமை, இரேவதி விண்மீனில், அமரர்கள் போற்ற, முனிவர்கள் வாழ்த்த, ஞானியர் வழுத்த, அறிஞர்கள் துதிக்க அண்ணலார் அருட்குழந்தையாக அவதரித்தனர்.

அறிஞர்கள் பலர் மகவின் முகத்தில் தோன்றும் அருளழகைக் கண்டு உவந்து, அருட்குழந்தை என அன்புடன் போற்றினர். பெற்றோரும் மற்றோரும் உற்றோரும் ஊராரும் எய்திய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உலகை உய்விக்கத் தோன்றிய அவ்வருட் சேய்க்குச் 'சுப்ரமண்யம்' எனத் திருநாமம் சூட்டி ஆர்வமோடும் அருமையாய் வளர்த்தனர்.

இளமை

சுப்ரமண்யம் மற்ற மகவுகளைப் போல் இல்லாமல் தனிமையான விளையாட்டுகளும் பேச்சும் உடையவராய்த் தோன்றினர். எந்தப் பிள்ளைகளோடும் சேர்ந்து விளையாட மாட்டார். தனிமையையே நாடுவார். வானை நோக்கி இருகை குவிப்பார். மூலையை

நோக்கி முழந்தாள் இட்டுப் பணிவார். கண்ணில் நீர் மல்கத் தேம்பித் தேம்பி அழுவார்; சிரிப்பார்; குதிப்பார்; கூத்தாடுவார். பூசையறையில் அடிக்கடி சென்று புகுந்துகொள்வார். மலர்களை வாரிப் பிள்ளையார்மீது சொரிவார். உள் மகிழ்வெய்தி மூலையில் அமர்ந்து இருகணும் மூடித் தியானம் புரிவார். மணியோசை கேட்டால் கைகூப்பித் தொழுவார். ஆனந்த நடன மாடுவார்.

இக்குழந்தையின் அதிசயிக்கத்தக்க செயல்களைக் கண்ட பெற்றோரும் மற்றோரும் ஊராரும் உறவினரும் சில சமயம் மகிழ்வர்; சில சமயம் வருந்துவர்; குணங்கெட்ட பிள்ளையோ எனக் கூறுவர்; மூளையில் ஏதேனும் கெடுதி இருக்குமோ என்பர். இது கடவுளின் அவதாரமோ என்றும் எண்ணுவர். இவ்வாறு கண்டவர் பலரும் பலவாறு கூற தெய்வத் திருக்குழந்தை இறைவன் நாட்டம் மிக்கதாய்க் கலைவளர் மதி போல் அருளெழிலோடும் அழகுற வளர்ந்து வரலாயிற்று.

பள்ளிப் படிப்பு

ஐந்தாவது வயதில் நல்ல நாள் ஒன்றில் சுப்ரமண்யத்தைப் பெற்றோர் மகிழ்வுடன் பள்ளியிற் சேர்த்தனர். ஆசிரியரும் உடன்பயில் மாணவர்களும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். உலகிற்கே அருட்பாடம் புகட்ட அவதரித்த சுப்ரமண்யம் மிக விரைவில் எழுதப் படிக்கக் கற்றனர். குருவுக்கும் மிஞ்சிய சீடனாக விளங்கினர்.

சதகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ் முதலிய அருள் நூல்கள் அங்குப் போதிக்கப்பெறும். ஒரு நாள் ஆசிரியர் திருவாசகத்தில் “வேண்டத் தக்க தறிவோய் நீ” என்ற அருட்பாடலை ஓதிப் பொருளையும் விளக்கினர். அவர் கூறிய பொருள் விளக்கத்தைக் காட்டிலும் உயர்ந்த பல நுண்பொருள்கள் சுப்ரமண்யத்தின் உள்ளத்தில் அருளால் தோன்றி ஆனந்தமூட்டின.

அம்மையின் அருள் பெறல்

சுப்ரமண்யம் இவ்வாறு கல்வி பயின்றுகொண்டிருக்கையில் ஒரு நாள் அவ்வூர் மக்கள் பலரும் சேர்ந்து, அங்குள்ள அம்மனுக்குப் பொங்கல் விழா நடத்தினர். பொங்கல் கொதிக்கும் போது திடீரென மேகங்கள் திரண்டு மழை பொழிய ஆயத்தமாயின. அதையுணர்ந்த மக்கள் பலரும் அச்சமிக வுற்றனர்! கலங்கித் தவித்தனர்.

மக்களின் தவிப்பினை உணர்ந்த அண்ணல் அம்மனிடம் சென்று, உளம் மிக உருகி, “அருளே வடிவாம் அம்பிகையே!

இவர்கள் உன்னை அன்புடன் இறைஞ்சி நடத்தும் இப்பொங்கல் விழா எவ்வகை இடையூறுமின்றி இனிது நடந்தேறக் கருணை பாலிக்கவேண்டும்'' என்று வேண்டியவண்ணம், கோயிலின் திருவாயிலருகில் வந்து, மழை முகிலை நோக்கி "நில்'' என ஆக்ஞையிட்டனர். விரைந்து வந்த மழை நின்றது. பொங்கல் விழா இனிது நிறைவேறியது. அனைவரும் அம்மையின் அருட் பிரஸாதத்துடன் இல்லம் சேர்ந்த பின், மழை நனி பொழிந்து அருள் வளத்தோடு பொருள் வளமும் கொழித்து ஆருயிர்த் தொகைக்கு ஆனந்தமூட்டியது. மக்களெல்லோரும் அம்பிகையின் கருணைப் பெருக்கை நினைந்துள முருகி, வியந்து போற்றினர்.

அன்னைக்காற்றிய பொங்கல் விழாவைத் தடுத்திடப் போந்த மழையினை நிறுத்தி, விழாவை இனிது நிறைவேற்றித் தனது வேண்டுகோளையும் நன்கு நிறைவேற்றிய அம்மையின் கருணையை வாழ்த்தி வழுத்திய சுப்ரமண்யம் உளமிக உருகி உயர் மகிழ்வெய்தினர்.

பள்ளியிற் பயிலும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் சுப்ரமண்யம் அம்மன் ஆலயத்திற்குச் சென்று, கண்களை மூடித் தியானத்தில் அமர்வார். நேரம் கழிவதே அவருக்குத் தெரியாது. அம்மையின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து நிலைத்து ஆனந்த மடைவர். பள்ளிப் படிப்பு முடிந்தபின் ஒரு நாள் மாலை ஆலயம் சென்று, தியானத்தமர்ந்த அவர் இரவு வெகுநேரம் வரை எழுந்திருக்காமல் அருளின்ப நிலையில் தோய்ந்து இருந்து விட்டார். பின்னர் எழுந்து வீட்டுக்கு வந்தபோது அனைவரும் உறங்கிவிட்டனர். அவர்களை எழுப்பிச் சிரமம் தர மனமின்றிப் பசியுடனேயே படுத்துக்கொண்டனர்.

அருளே வடிவாய் விளங்கும் அம்பிகை, அடியவர்க்கு வேண்டியதனைத்தும் விரைந்தளித்தோம்பும் கருணைத் தாயாதலின், ஒரு ஞானச்செல்வியாக வந்து, சுப்ரமண்யத்தின் அருகினில் அமர்ந்து, பாத்திரமொன்றில் தயிர் விட்டுப் பிசைந்த கம்பஞ்சோற்றினை அளிக்க, அண்ணலார் மகிழ்வொடும் ஏற்று அருந்தி, அம்பிகையின் பேரருளைப் போற்றினர். ஞானத்தின் முதற்படி இவர்க்குச் செம்மையாய் அமைந்தது. அன்று தொட்டுத் திருவருள் நிலையும் வளர்ச்சி யெய்தியது. இவர் பள்ளியிற் பயின்ற கல்வி சிறிதளவேயாயினும், ஓதாது அனைத்தும் உணர்ந்தவராயினர்.

சிலம்பச் சிறப்பு

இவர் சிறுவயதிலிருந்தே சிந்தித்துச் சிந்தித்து உயர்ந்த முடிவுகளை உணர்ந்துகொண்டார். நமக்கு உள்ள அறியாமையை உடம்பின் துணைகொண்டே போக்கிக்கொள்ள வேண்டியிருப்ப

தால் இதனைத் திடமாயும், செம்மையாயும், தூய்மையாயும் போற்றுதற்கேற்ற விதிகளை நாடினர். சிலம்பம் பயிற்சி செய்து வந்தார்.

"உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலர் வாக்கு உணரற்பாலது.

பிறர்க்கு அக்ரமமாகக் கெடுதியோ உயிர்ச்சேதமோ விளைக்காத இவ்வித்தையை உலகப் போக்காகப் பயிலாமல் உயர் நோக்கோடு பயின்ற இவர், மிக்க தேர்ச்சி பெற்று விளங்கினு ரேனும், வீண் சண்டை, வீரியப் பேச்சு முதலியன இன்றி அமைதியுடன் திகழ்வார்.

ஏர்த்தொழில்

உயிர்த்தொகையின் உளம் எனும் நிலத்தில் உண்மையன் பென்னும் உயர்கலப்பையால் உழுது, அருளென்னும் தூநீர் பாய்ச்சி, பயிர் என்னும் சட்டம் வளர்த்து, பரம்பொருள் என்னும் பயன் வழங்கப் போந்த குருபரனுர், நிலத்தின்கண் திருவடி வைத்து, இடக்கரத்தால் ஏர் பிடித்து, வலக்கரத்தால் கோல் பிடித்து, உழுது பயிர் செய்யத் தொடங்கினுர். ஒருகலம் விளைந்த நிலம் பல கலமாக விளைவளித்தது. அதுகண்ட பெற்றோரும், மற்றோரும் "சுப்ரமண்யம் கைராசி உடையவன்" என்று மகிழ்ந்தும் புகழ்ந்தும் கூறலாயினர். அருளாளர் அடி வைத்த இடமெல்லாம் பொன்னுவதில் அதிசயம் என்ன உளது?

ஏழைகட்கு இரங்கல்

உற்றுர் ஊரவர் புகழும் உரைகளைச் சுவாமிகள் உளம் கொள்ளவில்லை. தூத்துக்குடி முதலிய தொலைவான இடங் களிலிருந்து உணவு தானியங்களை அயலூர் வியாபாரிகள் வாங்கி வந்து அதிக லாபம் வைத்து விற்பதையும், ஏழை மக்கள் வாங்கி வயிறுர உண்ண இயலாமல் வருந்தி அரை வயிற்றுக் கஞ்சியும் இன்றித் தவிப்பதையும் உணர்ந்து ஏக்கமுற்றனர்.

பின்னே இவர் காணப் போகும் சமயப் பொது நெறிக்கு இங்கே விதை ஊன்றப் பெற்றது.

வாணிபம்

பிறர் துயர் காணச் சகியாத அருளாளர் மரபில் வந்த அண்ணலார், தூத்துக்குடிக்கு வண்டி கட்டிச் சென்று உணவுப்

பொருள்களை வாங்கி வந்து கொள்விலைக்கே விற்று, ஏழைகளின் துயரைத் துடைக்கலாயினர். இது கண்ட பெற்றோரும் உற்றோரும் 'பயனற்ற பிள்ளை'' என வெறுத்தனர்.

2. மதுரை வாழ்க்கையும் பூரணர் காட்சியும்

உயர் நாட்டம்

வீட்டாரின் வெறுப்பையும் சினத்தையும் உணர்ந்த அண்ணலார், உயிர் அனைத்தும் நன்கு திருந்த, இம்மையில் அருள் வாழ்வாற்றிப் பேரின்ப முத்தியும் எய்துவதற்கேற்ற எளிய நெறியை அருளிப் பக்திப்பயிரை வளர்க்கவேண்டும் என எண்ணம் கொண்டனர். அதற்கேற்ற இடம் சென்று ஊக்கமுடன் செயலாற்ற நாடினர். இவரைப் பக்குவம் செய்ய இறைவன் திருவுளம் கொண்டான். செந்திலம்பதியும் மதுரை மாநகரும், பொதிகை மால் வரையும் 'வருக' என அழைத்தன. 'இரெட்டியப் பட்டியை விட்டுப் புறப்படுக' என உடையவனின் அருளாணை கிடைத்தது.

அண்ணலார் புறப்படல்

இதுவரை வாழ இடம் தந்த இரெட்டியப்பட்டிக்கும், இல்லத்தில் எழுந்தருளியுள்ள விநாயக மூர்த்திக்கும், ஈன்று வளர்த்த பெற்றோர்களுக்கும், இறைவியமர்ந்தருள் திருக் கோயிலுக்கும் நன்றி செலுத்திய வண்ணம் அண்ணலார் புறப்பட்டுச் சென்றனர்.

செந்தூர் சேர்தல்

முருகவேளின் ஆறுபடை வீடுகளில் இரண்டாவதாயும், அமரரும், முனிவரும், அன்பரும், அறிஞரும் போற்றிப் பணிந்து இம்மை மறுமை நலம் அனைத்தும் எய்தும் அருள் திருத்தலமாயும் விளங்கும் திருச்செந்தூரை நோக்கி அண்ணலார் நடந்தனர். கோயில் அருகில் செல்கையில், முருகவேளின் வாகனமாகிய மயில் தோன்றி அருள் நடனமாடும் அற்புதக் கோலத்தை அண்ணலார் கண்டு ஆனந்தமெய்தி, அருள்மயமாகி ''ஆடி வருவாய் மயிலே'' என்னும் அருட்பாடலைப் பாடி ஓங்காரத்தினில் ஒன்றித் திகழ்ந்தனர்.

முருகவேள் தரிசனம்

பின்னர் கடல் நீராடி, நாழிக் கிணற்று நன்னீராடித் திருக் கோயிற்குள் சென்று சிந்தையொன்றி வழிபாடாற்றுகையில் ஞானக்கனியாம் ஆறுமுகப்பெருமான் தன் அருளுருக் காட்டி யருள, அண்ணலார் கண்டு ஆனந்த பரவசமெய்திக் "காக்கக் கடனுனக்குக் கந்த வடிவேலா'' என்னும் அருட்பாடலைப் பாடிப் போற்றி அருள் மயமாயினர்.

ஞானவேற்கந்தன் 'அஞ்சேல்' என்றருளினன். அண்ணலார் விழியிரண்டும் ஆனந்த அருவி பொங்க, உலகம் இனி உய்வது நிச்சயம் என உவகையுட் பாய அருள் ஞான நிறைவெய்தி அமைதி கொண்டனர்.

மதுரை நகர் அடைதல்

திருமுருகன் அருளில் தோய்ந்து திளைத்த நம் அண்ணலார், தாம் செய்ய வந்த பெருஞ் செயலை மேற்கொளற்குரிய திருத்தலம் யாதெனும் சிந்தனையோடு வழி நடந்து செல்கையில் உடையவன் திருவருளால் சிறந்த கருத்தொன்று தோன்றலாயிற்று.

பாண்டிய நாட்டின் தலைநகரமாய், அம்மை மீனாட்சியும் சோமசுந்தரப்பெருமானும் அருளாட்சி புரியும் அற்புதப்பதியாய் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் நிகழ்ந்த அருள் திருத்தல மாய் விளங்கும் மதுரை மாநகரமே அதற்குரிய இடம் என அருளால் உணர்ந்தனர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், திருவாதவூரர், மங்கையர்க்கரசியார், நின்றசீர் நெடுமாறர், குலச்சிறை நாயனர், மூர்த்திநாயனர் முதலிய பெருமக்கள் அருள் ஞான நிறைவெய்தி விளங்கிய நற்காட்சியை அருளாற் கண்டனர். ஒவ்வொன்றும் அப்போது நடப்பன போல் தோன்ற அண்ணலார் விரைந்து நடந்து ஆலவாய் அடைந்தனர்.

வானுற உயர்ந்து விளங்கும் கோபுரங்களையும், அருளெழிலும் பொருளெழிலும் துலங்க விளங்கும் மாடமாளிகைகளையும் கண்டு ஈடிணையில் திருவாலவாயிதுவோ எனச் சிரமேற் கரம் கூப்பி இறைஞ்சிப் போற்றினர்.

நகரெழில் கண்டு போற்றிய வண்ணம் வைகை நதியை அடைந்தார். அந்நதியின் உயர்வினை உன்னியவாறு நன்னீராடி னர். அங்கயற்கண்ணி ஆலயம் சென்று, அம்பிகையின் அருட் காட்சி கண்டு, உலையிடு மெழுகாய் உளமுருகிப் போற்றி உயர்

அருள் பெற்ருர். முக்குறுணி விநாயகரையும் சோமசுந்தரரையும் இறைஞ்சியேத்தி இன்னருள் எய்தினர். மதுரையம்பதியே தாம் கருதிவந்த செயலுக்குத் தக்க இடமெனும் முடிவுக்கு வந்தார்.

மதுரை வாழ்வு

உண்மையும், நேர்மையும் உடைய ஓர் இடத்தைச் சார்ந்து தொழில் புரிந்து வாழ்வாற்ற எண்ணினர். மீனுட்சியம்மன் சந்நிதிக்கருகில் சீமைச் சாமான் வியாபாரம் செய்து வந்த உ.செ.இ. உருண்டை மீரா முகைதீன் இராவுத்தர் கடையில் நேர்மையாகவும் நாணயமாகவும் வாணிபம் நடத்தப்படுவதைப் பற்றி ஊரவர் உரைப்பக் கேட்டு, அங்குச் சென்று கணக்கெழுதும் பணியில் அமர விரும்பினர். அவர்களைக் கண்டு உரையாடினர். அவர்களும் இவரது திருமுகப் பொலிவையும் அன்பு நிறைந்த இனிய உரைகளையும் கண்டு மகிழ்ந்து இசைவு அளித்தனர். கணக்கின் சில பகுதிகளை இவரிடம் தந்தனர். அவற்றைத் திறம்பட எழுதும் ஆற்றலையும், இவருடைய உள்ள நிலையையும், ஒளி வீசும் முகத்தையும், உண்மை உரையையும், எவரிடமும் அன்போடு பழகும் இன்னியல்பையும் கண்டு களித்த அவர்கள், சிலநாளில் கடையின் கணக்கு முழுவதையுமே இவரிடம் ஒப்புவித்தனர். அங்காடியின் தலைவர் பேருக்குத் தலைவராய் இருந்தார். கடையின் முழுப்பொறுப்பையுமே அண்ணலார் கவனிக்கலாயினர். வியாபாரம் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்றது. செல்வமும் அளவின்றிப் பெருகலாயிற்று.

தினசரி ஒழுக்கம்

அண்ணலார் நாள்தோறும் விடியற்காலை மூன்று மணிக்கு விழித்துக்கொள்வார். வைகையாற்றுக்குச் சென்று நீராடி, முன்னவனுர் ஆலயம் சென்று உள்ளத்தை ஒருமுகப்படுத்தி வழிபாடாற்றுவார். அருள் நிட்டையமர்ந்து பரஞானம் அபரஞானமாகிய திருவடிகளிலே இதயத்தைப் பதிய வைத்து இன்பம் துய்ப்பார்.

பின்னர், அங்கயற்கண்ணி ஆலயம் அடைந்து, அருள்வழிபாடாற்றி அங்காடிக்குச் செல்வார். இரவில் அவ்வாலயத்து முன் மண்டபத்திற் பள்ளிகொள்வார். துயில்வதற்குமுன்னும், நள்ளிரவிலும், தூய்மை நாடும் பிற நேரங்களிலும் அருள்நிட்டை பேணி ஆனந்தம் எய்துவார்,

திருமணம்

அண்ணலார் இவ்வாறு ஆலவாய் நகரில் அருள்வாழ்வாற்றி வர இரெட்டியப்பட்டியில் இவரைக் காணுமல் இவரது பெற்ருரும், உற்ருரும் வருத்தமுற்றுப் பல இடம் சென்று தேடி, பின் இவர் மதுரையில் இருக்கும் செய்தியறிந்து, வந்து கண்டு, இரெட்டியப் பட்டிக்கு வருமாறு அழைத்தனர். இவர் மதுரை விட்டேகமறுத்து விட்டதால், இவரது தமையனுர் திரு. முத்துக்கருப்பப் பிள்ளையின் குமாரர் திரு. பிச்சாண்டியாப் பிள்ளையை மதுரையிலேயே விட்டுச் சென்றனர். இவரது செய்தியை அவ்வப்போது அறிய வாய்ப்பாக இருக்குமென்று அவ்வாறு செய்தனர். அவர்களின் எண்ணம் முழுதும் மதுரையில் வாழும் அண்ணலிடமே இருந்தது.

அண்ணலின் தந்தைக்கு மூப்பும் நலிவும் தோன்றின. அண்ணலார்க்குத் திருமணம் செய்விக்க முயன்றனர். எட்டையாபுரம் சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்த வீரதீர கம்பீர முருகப்பிள்ளை என்பவர்க்கும் ஆவுடையம்மாள் எனும் அம்மையார்க்கும் அருந்தவப் புதல்வியான மாரியம்மை யென்னும் சீர்சால் நங்கையைத் தாரண ஆண்டு ஆனித் திங்களில் அண்ணலார்க்கு மதுரை மாநகரில் திருமணம் செய்வித்தனர். உள்ளத் துறவு மிகுந்த அண்ணலார் உடையவன் திருவுளப்படி இல்லறத்தார் ஆயினர்.

அருள் வாழ்க்கை

மணமகளை மதுரையிற் குடியேற்றினர். கணமும் வீணிற் கழியாத அண்ணலார் கடைக் கணக்குகளைக் கவனிக்கலாயினர். அம்மையார் நாளும் அறுசுவை உணவு தயாரித்து அண்ணலார்க்கு அனுப்புவர். அவர் அதனை அருந்தி, அங்காடி வேலைகளைக் கவனித்து அம்மன் ஆலயத்தில் அருந்துயில் கொள்வார்.

நாள்தோறும் அதிகாலையில் வழக்கம்போல் வைகை நதிக்கேகி நீராடி, வழிபாடாற்றி, எல்லா உயிரும் சுக வாழ்வாற்றவும் பேரின்பமெய்தவும் திருவருளை வேண்டி உருகுவார், அழுவார். அருள் நிட்டை பேணிப் போற்றி அங்காடிக்குத் திரும்புவார்.

உலகம் உய்யும் வழி காண வேண்டும் என்னும் நாட்டம் மிகுந்த அண்ணலார், தம் கடமையில் அணுவும் தவருது செயல் புரிவார்.

கடையில் செல்வம் அளவின்றிப் பெருகினும் உரிமை அணுவும் நமக்கில்லை என்ற உள்ளத்தோடும், ஆசை சிறிதும் இன்றி,

உடையவன் திருவடி மலரில் உண்மையான அன்பும் நேயமும் உடையவராய் அண்ணலார் அருள்வாழ்வாற்றி வந்தனர்.

தந்தையார் சிவபதம்

சுப்ரமணியத்திற்கும் திருமணம் செய்துவிட்டோம் என்ற திருப்தியுடன் அண்ணலின் தந்தையார் இரெட்டியப்பட்டியில் இறைவன் திருவடி நீழல் எய்தினுர். செய்தி கேட்டு அண்ணலார் இரெட்டியப்பட்டிக்குச் சென்று தம் தமையன்மார்களோடு உடனிருந்து தந்தையார்க்கு ஆற்ற வேண்டிய ஈமக் கடன்களை முறையுடன் ஆற்றி மதுரைக்கு வந்து சேர்ந்தார். முன்னிலும் திவிரமாகத் தமது தினசரி ஒழுக்கத்திலே திகழ்ந்து வரலானுர்.

இரெட்டியப்பட்டி சுவாமி திருநாமம்

அண்ணலார் தாம் ஆற்ற வந்த அரும்பணியை வெளிப்படையாகத் தொடங்குமுன் மறைவாக வாழ்ந்து வரும் நோக்கத்துடன் வாழ்வாற்றி வந்தாலும், அவருடைய திருமுகத்தின் ஒளியையும் திருநயனப் பொலிவையும், அருளியல்பையும், அடக்கத்தையும் கண்ட திருவாளர் பலரும் அவரிடத்தில் பேரன்பும் பெருமதிப்பும் உடையோராயினர். 'சாமி' எனச் செப்பிக் கைகூப்பலாயினர். அவரது ஊரை முன்சேர்த்து இரெட்டியப்பட்டி சாமி' எனப் போற்றத் தொடங்கினர்.

பரிபூர்ண விநாயகர் திருக்காட்சி

விநாயகரை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற பேரவா அண்ணலின் இதயத்தில் நெடுநாளாக இருந்து வந்தது. ஒரு நாள் விடியற்காலை வைகையாற்றில் நீராடி முன்னவனுர் நினைவில் தோய்ந்தவராய் உளமிக உருகி "வாவாகணேசா" என்ற அருட்பாடலைப் பாடியவண்ணம் நடந்து செல்லும் போதில் மண் முதல் விண்வரை பரந்து விரிந்த அருட்பெருஞ் ஜோதியொன்று அவர் கண்முன் தோற்றமளிக்க, அது கண்ட அண்ணல், இருவிழிகளிலும் ஆனந்த பாஷ்பம் பொங்க அப்பேரொளியை நாடியோடுகையில் அந்த ஜோதியின்கண் யானை முகமும் மூன்று கண்ணும் நான்கு புயமும் நீள் துதிக்கையும் உடைய கணேசர் திருவுருவத்தைக் கண்டு ஆனந்த பரவசராகி ஆலிங்கனம் செய்துகொண்டார். சிறிது நேரம் கழித்து உலக நினைவுற்று, தாம் கண்ட ஜோதியுருவைக் காணுது திகைக்கையில், தம் கழுத்தில் ஒரு மலர் மாலை திகழ்வதையும், தமக்குத் திருக்காட்சி தந்து பிரணவோபதேசம் செய்து

அருள்ஞான அமுத ஊற்றருளி அருள் மணம் புரிந்துகொண்ட விநாயகப் பெருமான் கற்சிலையாக மாறி எதிரில் அமர்ந்திருப்பதையும் உணர்ந்து ஆனந்தமுற்றவராய், இன்வேம்போடு அருகிலிருந்த அரச மரத்தடியில் மேடைமீது அப்பெருமானை அமர்த்திப் பரிபூர்ண விநாயகர் எனத் திருப்பெயர் சூட்டி, ஆற்றுநீர் ஆட்டி, நறுமலர் சாத்தி, அருள் வழிபாடாற்றினர்.

'ஐந்து கரத்தாய் அறுமுகற்கு நேர்மூத்தாய்
முந்த உதித்த முதல்வாஎன்—சிந்தை
குடியிருந்தே காக்கும் கோமான் உனையான்
அடிதொழுதேன் வந்தென்னை ஆள்'

என்று தொடங்கும் அருள் மறையைப் பாடிப் போற்றலாயினர். 'ராஜவிருட்சம் சிவமாய்' என்ற பாடலில் எல்லா உயிரும் முத்தி பெறப் பரிபூர்ணர் தோன்றியுளார் என்று தெளிவித்து, 'மதுராபுரி வடக்காய் வைகை நதித் தென்பால்' என்ற பாடலில் பெருமான் தோன்றியமர்ந்துள்ள இடத்தின் நான்கெல்லையைக் குறிப்பிட்டுப் பாடி உருகிப் போற்றியுள்ளனர்.

ஜோதி வடிவாய் முன்னவன் தோன்றிக் கற்சிலையாகி அமர்ந்ததையும், அவர் அருளில் திளைத்து அண்ணலார் திகழ்வதையும் கண்டு தொழக் கதிரவன் எழுந்தான். அருளொளியும் அன்பொளியும் அறிவொளியும் கலந்து இருளை யகற்றவும் அன்பர்கள் குழுமி இறைஞ்சி மகிழ்ந்தனர். உலகம் புனிதமுறும் என்று மகிழ்ந்த அமரர்கள் மலர்மழை பொழிந்தனர். அருள் நெறி. செழிக்கும் என முனிவரர் மகிழ்ந்தனர். பதினெண் தேவ கணங்களும் வானில் நின்று துந்துபி முழக்கினர். மூவர்கள் முன்னோன் திருவருள் போற்றினர். யாவருக்கும் கருணை செய அமர்ந்துள்ளாய் என அகிலம் துதித்தது. பரிபூர்ண கணபதிக் கரோஹரா என அண்ணலார் பரவவும், அருகிருந்த பக்தர் குழாம் ஆரவாரித்து ஆனந்தமுற்றது.

அந்நாள் முதல் அண்ணலார் நாள்தோறும் அதிகாலை நீராடி, பரிபூர்ண விநாயகர்க்கு அபிடேக ஆராதனைகள் செய்து போற்றலாயினர். மூன்றுநாள் வரையில் அண்ணலின் திருவுளம் பெருமான் அருளில் பரிபூர்ணமாகத் தோய்ந்திருந்ததால், உலகிற் செய்ய வேண்டிய செயல்கள் யாவையும் தம் நினைவின்றி ஒரு யந்திரம் போல இறைதிருவருளால் இயற்றி வந்தனர்.

பரிபூர்ணரின் கருணைப் பேரொளி அண்ணலின் திருமுகத்திலும், மொழிகளிலும், செயல்களிலும் தோற்றக் கண்ட தூயவர்கள், இது பரிபூர்ண ஜோதியின் அருள் ஒளியே என உணர்ந்து அண்ணலின் திருவடியே துணையெனச் சூழலாயினர்.

அண்ணலாரும் தினந்தோறும் அருந்தவமாம் பூசையாற்றி இறைவன் திருவருளை அன்பர்கட்கு மடுத்துத் தந்து ஆனந்த மூட்டினர்.

கற்றையான குழல் விளங்க, திருநீறும் சந்தனமும் குங்கும மும் திகழந்திலங்கும் திருமுகத்தில் அருளொளி விளங்க, பற்றற்ற உள்ளம் போன்ற பால் வெள்ளையாடையுடன், ஒற்றைக் கொம்பன் கழல்கள் உளம் கொண்டு போற்றும் அண்ணல், மற்றொன்றும் வேண்டாத மாண்புடன் விளங்கினர்.

திரள் திரளாய் மக்களினம் தினந்தோறும் வைகையின் தென் கரையில் திரண்டு, பரிபூர்ணரை வலம் வந்து, அருளண்ணலைத் தரிசித்து, அருள் திருநீறு பெற்று, குறை தீர்ந்து, நலம் பெற்றனர்.

அந்தகர் கண்ணொளியடைந்தனர், செவிடர்கள் செவித்திறம் பெற்றனர், ஊமையர்கள் பேசும் திறனடைந்தனர். மகவிலார் மகப்பேறு பெற்றனர். துயருற்றோர் துயர் தீர்ந்தனர். நலம் விழைந்தவர் நலமடைந்தனர்.

யாவும் இறை திருவருளால் நடப்பதென்னும் எண்ணத்துடன் பரிபூர்ணரின் பரங்கருணையைப் போற்றிய வண்ணம் அண்ணலார் அங்காடி வேலைகளைக் கவனித்து வந்தனர். இஸ்லாமியர்களின் கடையில் கணக்கெழுதி வந்ததால், அவர்களுடன் பழகவும், அவர் களின் மொழியாகிய இந்துஸ்தானியை நன்கறிந்து கொள்ளவும், அவர்களின் வேதமாகிய குரானை நன்காராய்ந்து அதனுள் திகழும் அரும்பொருள்களை உணரவும் வாய்ப்பாக இருந்தது. பிற்கால வாழ்வில் ஏற்படப்போகும் சூழ்நிலைக்கு அது பெருந் துணையாகவும் இருந்தது.

பம்பாய் வாணிபம்

அருளிற்சிறந்து விளங்கும் அண்ணல், கடையில் கணக் கெழுதி வந்ததால், அக்கடையின வாணிபம் பன்மடங்காகப் பெருக லாயிற்று. அதற்கேற்றவாறு செல்வ வளமும் சிறந்தோங்கித் திகழ்ந்தது. அதனால் அவர்கள் பம்பாயில் ஒரு வாணிபச் சாலை தொடங்கி, அதன் மூலம் வெளிநாட்டுச் சரக்குகளை அதிகமாக இறக்குமதி செய்யவும், நம் நாட்டுச் சரக்குகளைக் கப்பலில் ஏற்று மதி செய்யவும் வேண்டுமென எண்ணினர். அங்கிருந்து அக் கப்பல் வாணிபத்தைச் செவ்வனே நடத்தற்குரிய திறம் வாய்ந் தவர் நம் சுவாமிகளே எனத் தீர்மானித்தனர். தம் கருத்தை சுவாமிகளிடம் தெரிவித்தனர்.

எந்தச் செயலும் இறை திருவருளால் நடப்பதெனும் எண்ணம் உடைய அண்ணலார் ஏதும் மறுப்புக் கூறவில்லை. புல

திற மக்களைக் காணும் வாய்ப்பும், அவர்கள் பழகி உய்யும் பல சமயக் கொள்கைகளையும் அவ்வச்சமய உண்மைகளையும் உணரும் வாய்ப்பும் கிடைக்கும் என எண்ணியவராய் அங்காடிக்குரிய வரிடம் தம் இசைவைத் தெரிவித்தார். அவர்களும் ஆவன புரிந்தனர்.

அண்ணலார் சென்னை சென்று பம்பாய் சேர்ந்தனர். கப்பல் வாணிபம் தொடங்கினர். அருட்செல்வராகிய அண்ணல் நடத்தியதால் அவ்வாணிபம் சிறப்பாக நடைபெற்றது. செல்வமும் அளவின்றிக் குவிந்தது. அதன்கண் பற்றணுவும் அற்றவராய், மதுரையில் நடத்தியவாறே அண்ணலார் பம்பாயிலும் அருள்வாழ் வாற்றி வந்தனர். மதுரையிலும், திருநெல்வேலிப் பாளையங் கோட்டையிலும் வாணிபம் வளர்ந்தோங்கலாயிற்று. கணக்குகள் ஏராளமாகக் குவிந்துவிட்டன. அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதி முடிக்க சுவாமிகளால்தான் முடியும் என அங்காடிக்குரியோர் கருதினர்.

பம்பாயில் சுவாமிகள் ஒருநாள் நிட்டையில் அமர்ந்திருக்கை யில் மீனாட்சியம்மை தோன்றி ''நம்மை மறந்தனையோ?'' என வினவினர். ''தாயே! உம்மை மறக்க இயலுமா? விரைவில் வருகிறேன்'' என அண்ணல் தாயைக் கண்ட சேயென் உளமுருகிப் போற்றினர்.

உடனே மதுரைக்கு வரவேண்டும் என்ற செய்தி கடைக் காரர்களிடமிருந்து கிடைத்தது. அண்ணலார் சென்னை வழியாக மதுரை அடைந்தார். வரும்வழியில் கிறித்தவப் பாதிரிமார்களுடன் பழகவும், கிறித்தவ சமயத்தின் உண்மைகளை உணரவும் வாய்ப்புக் கிடைத்தது. எல்லாச் சமயமும் ஒரே முடிவைத்தான் கூறுகின்றன என்னும் முடிவுக்கு வந்தனர்.

ஆங்கில அரசினர் வகுத்துள்ள சட்டதிட்டங்களையும் அவை கள் செலாவணியாகும் முறைகளையும் நன்கு உணர்ந்தனர். சென்னையினின்று வரும் வழியில் உள்ள ஊர்களில் வியாபாரத் துறையில் இருந்த அலுவல்களைப் பார்த்துக்கொண்டு அண்ணலார் மதுரை சேர்ந்தனர்.

அண்ணலைக் காணாமல் வருந்தியிருந்த அன்பர்கள் அண்ணலார் வருகையறிந்து ஆனந்தித்தனர். இறைவழிபாட்டிலும் அன்பர் கட்கருள் புரிவதிலும் ஊக்கம் மிகுந்த அண்ணலார் கடைக் கணக்குகளையும் சரிவரக் கவனித்து வந்தனர்.

பரிபூர்ண விநாயகர் ஆலய அமைப்பு

பிரணவப் பொருளான பரிபூர்ண விநாயகர்க்கு ஆலயம் அமைக்க வேண்டும் என அன்பர்கள் நாடினர். தம் கருத்தை அண்ணலிடம் தெரிவித்து இசைவு பெற்றனர். தேவையான பொருள் திரட்டி, அண்ணலார் குறிப்பின் வண்ணம் கோயிலை அமைத்தனர். அடியவர் விருப்பப்படி திருக்குட முழுக்கை அண்ணலார் உடனிருந்து சிறப்பான முறையில் செய்வித்தனர்.

எங்கும் புகழ்

சுவாமிகள் கட்டளைப்படி தினசரி ஒழுக்கத்தைப் பேணி அருள்பெற வரும் அடியவர்களைக்காட்டிலும், குறை பல தீரவும், நிறை நலம் எய்தவும் வேண்டித் திருநீறு பெற்றுச் செல்ல வருவோர் மிகப் பலராயினர். தேள் கொட்டினாலும், பாம்பு கடித்தாலும், நோயுற்றாலும், மனக்குறை நேர்ந்தாலும், காரியங்கள் கைகூட வேண்டியிருந்தாலும், அச்சமுற்றாலும் அண்ணலிடம் சென்று அருள் பெறுவது மக்களின் வழக்கமாய்விட்டது.

எல்லோருக்கும் அருமருந்தும் பெருந்துணையுமான, இறைவனின் அருள் திருநீற்றை அண்ணலார் அள்ளித்தந்து கருணை பாலித்து வந்தார்கள்.

கடம்பவன நாதர் பிரதிஷ்டை

பரிபூர்ணர் திருக்கோயிலின் தென்புறத்தில் இருந்த வெற்றிடம் அக்கோயிலுக்கு வரும் வழியாக இருந்தமையால் அன்பர்கள் அதனை அக்கோயிலுக்கு உரிய இடமாக்கினர். கடப்பு மரங்கள் சில இருந்தமையால், அவ்விடம் 'கடம்பவனம்' எனப் பட்டது. அன்பர்கள் அங்கு 'கடம்பவன நாதர்' என்னும் திருநாமத்தோடு ஒரு சிவலிங்கத்தையும், 'கடம்பவனவல்லி' எனும் திருநாமத்தோடு ஒரு அம்மனையும் எழுந்தருளச் செய்ய வேண்டும் என விரும்பினர்.

அண்ணலிடம் அனுமதி பெற்றுச் செயல் நடத்தினர். சுவாமிகள் உள்நாட்டம் மிகுந்திருந்தாலும் அன்பர்கள் முயற்சிக்கு இயலும் அளவு துணைபுரிந்தனர். அன்பர்கள் திருவருளிற் சிறக்கும் வண்ணம் உகந்தவரையில் இயன்ற அளவு உதவி வந்தார்கள்.

கலியுகத்தில் நீதிக்கொடி நாட்ட, கைலையினின்று
சொக்கநாதர் பிட்டுக்கு மண்சுமந்த எல்லையில்,
ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு அருட்காட்சி அளித்து
ஆலிங்கனம் புரிந்து, அருள்நிறைவு தந்த
மதுரை ஸ்ரீ பரிபூர்ண விநாயகர்

(பக்கம்-18-பார்க்க)

சுவாமிகள் திருக்குற்றாலத்தில் சண்பகாதேவி அருகில் பன்னீராண்டு அருந்தவம் ஆற்றிய திருக்குகைகளுள் முதற்குகை (பக்கம் 28, 29 பார்க்க)

தவ வாழ்வு

ஒருநாள் அண்ணலார் வைகை நீராடி, பரிபூர்ணர் திருமுனுற்று பக்தி வடிவாய் நின்று, "பரமா, நின் திருவடிக் காட்சியை அருளிச் சிறியேனைச் செழுந்தவத்திலாழ்த்திக் கருணை புரிவாய்" எனக் கோரிக் "காணக் கிடைக்குமோ கணேசா நின் பாத சேவை" எனும் அருட்பாடல் பாடி உருகினர்.

பரிபூர்ணர் தம் ஜோதியொளி மணிமகுடம் துலங்க, துதிக்கையிசைந்தருள் சித்திக்க, வேதமெனும் சிலம்பொலிக்க விழுமிய தன்னுருக் காட்டி, பாதமல ரொளி காட்டி, தித்திக்கும் திருமந்திரத்தைப் பகர்ந்தருளினர். பரிபாஷை உணரும் வண்ணம், திரிகாலம் உணரும் வண்ணம் பகர்ந்த மந்திரம் அருள் வடிவாய் செவி வழியாய் உளம் புகவும் பரிபூர்ணர் அருள் வடிவப் பேரொளி விழி வழியாய் உள்ளே படரவும் 'கணேசர் பதத்தைக் கண்டு கொண்டாயோ மனமே' எனப் பாடி அண்ணலார் அருள் மயமாகி நிற்க, அவர் சிரமீது தம் துதிக்கை வைத்துப் பரிபூர்ணர் கருணை பாலித்தனர்.

அப்பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தையில் பதித்த வண்ணம் அங்காடிக்குச் சென்ற அண்ணலார் திண்ணையில் அமர்ந்தனர். அவர் மனம் இறைவனின் அருளார் சேவடியில் தோய்ந்திருந்ததன்றி வாணிபத்துறையை நாடவில்லை; ஆகாரத்தில் இச்சை செல்லவில்லை; தேகம் சுமையெனத் தோன்றியது. 'துறவாதி குணம் சொன்னாலும் கேட்பதில்லையே' என்னும் அருட்பாடலைப் பாடினர்.

வேலைகளைச் சுருக்கிக்கொண்டு உள்முகமான விழிப்புக் கொண்டனர். மவுனம் பூண்டனர். உடையவன் அருளை நினைந்து உள்ளுருகி உவகை கொள்வார்; கண்ணீர் வடிப்பார்; உடையவனே! என வாய்விட்டரற்றி அழுவார்; எனக்கருளும் கணக்குண்டோ என அழுதழுது கண்ணீர் ஆறுகப் பெருக்குவார். தணலில் அகப்பட்ட புழுப்போல் தவிப்பார். அருவுருவே அருளமுதே பரிபூர்ண என உருகி அழுவார். ஐந்து நாளாயிற்று. உணவு அணுவும் கொள்ளவில்லை. பேச்சு சிறிதும் இன்றி மவுனம் பூண்டனர்.

அண்ணலார் உண்ணவில்லை, நீரும் பருகவில்லை, பேசவில்லை, உட்கார்ந்தபடி உள்ளார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. அடியவரும், அன்பர்களும், ஊர் மக்களும் வந்து பார்க்கலாயினர்.

அங்காடியில் வியாபாரம் நடத்த இயலாத அளவிற்குக் கூட்டம் பெருகலாயிற்று.

அடியவர்களும், அங்காடித் தலைவர்களும் எது கேட்டாலும் தலையசையாமல், வாய் பேசாமல், சைகையும் காட்டாமல் சுவாமிகள் அமர்ந்துள்ளதைக் கண்டு 'சாமி!' என்றால், சில சமயம் சிரிப்பார்; சில சமயம் தலையசைப்பார்; சில சமயம் சினம்கொண்டாற்போல் பிரமிக்கப் பார்ப்பார்; சில சமயம் கண்களை மூடிக் கொள்வார்.

இவற்றைக் கண்ட சிலர், பைத்தியம் பிடித்துவிட்டது; இனித் திரும்பாது என்றனர். இது கேட்டுத் தரிக்க இயலாத அடியவரும் அன்பரும் சுவாமிகளைத் தனியே விட்டுச் செல்ல மனமின்றித் தவித்தனர். யாது செய்வது எனத் தெரியாமல் திகைத்தனர்.

அங்காடி வளர்வதற்கு நெடிதுழைத்த ஓர் உண்மையாளர்க்கு இவ்வாறு நேர்ந்ததே, இனி இவரைப்போல உண்மையாக அங்காடியைப் புரப்பவர் உண்டோ என உரிமையாளர்கள் பரிதவித்தனர். சுவாமிகளைக் காணவரும் கூட்டம் அளவின்றிப் பெருகலால் வாணிபத்திற்கிடையூருயிருப்பது கண்ட அங்காடித் தலைவர்கள், சுவாமிகளை வேறிடத்தில் அமர்த்திடலாம் என எண்ணினர். அடியவர்களிடத்தில் புகன்றனர்.

இப்படி இவர்கள் கூறும் சொற்கள், சுவாமிகளின் நிட்டை ஒரொருகால் சிறிதே கலைகையில் அவரது செவிகளிற் புகவும் 'இப்படியும் உண்டோ?' என எண்ணியவராய், 'கும்பிக்கிரையே தேடி கூவித் திரிந்தேன் இந்நாள், நம்பிக்கை போகும் காலம் நானிங்கிருப்பதில்லை' எனப் பாடி அங்கிருந்து புறப்பட எண்ணினர்.

யாரும் அறியாததொரு நேரத்திலே, தம்மை அன்புடன் வர வேற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளாய் வளர்த்துப் பக்குவம் செய்வித்த மதுரை நகராகிய தாய்க்கும், வைகை நதிக்கும், அங்கயற்கண்ணி ஆலயத்திற்கும், பரிபூர்ண விநாயகர் திருக் கோயிலுக்கும் நன்றி கூறி, உடையவள் திருவடியே உறுதுணை யென்ன உளம் கொண்டோராய் அருந்தவம் நாடி, அதற்குரிய தூய இடம் நாடி அண்ணலார் செல்லலாயினர்.

அடியவர் கலக்கம்

அடியவரும் அன்பர்களும் அங்காடித் தலைவர்களும் சுவாமிகள் அங்கிருந்து சென்றுவிட்டதறிந்து, எங்கெங்கும் தேடிக் காணாராய் வருத்தமிக உற்றனர்.

தேவியார் வருத்தம்

அண்ணலார் குடும்பப் பற்றின்றியிருந்தாலும் அவர்க்குச் சேவை செயும் வாய்ப்புக் கிடைத்ததே மாபெரும் பாக்கியம் என எண்ணி வாழ்வாற்றி வந்த கற்பரசியாம் மாரியம்மையார், 'அண்ணலார் எங்கேயோ சென்றுவிட்டார்' என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டு அடியற்ற மரம்போலானூர். சூழ்வுறுநற் கொழுகொம்பைப் பிரிந்து தனியே துவண்டு வாடும் பைங்கொடி போலத் துயர்க்கடலில் ஆழ்ந்து வருந்தினுர்.

அண்ணலின் தமையனுர் மகனும் பிச்சாண்டியாப்பிள்ளையும் அங்கங்கும் தேடி அண்ணலார் சென்றதெங்கே என அறிதற்கிய லாதவராய், மனம் பரிதவித்து, சிற்றன்னையாரை அழைத்துக் கொண்டு மதுரைப் பதியைவிட்டு இருடியர் பட்டி சென்று சேர்ந்தனர்.

அண்ணலார் திருச்செந்தூர் அடைதல்

தவத்தின் சிறப்பெலாம் உன்னிய வண்ணம், ஓங்காரத் தோடொன்றிய வண்ணம், பற்றற்ற அண்ணலார் நடந்து செல் கையில் மந்த மாருதம் வந்தெதிர் கொண்டிட, சுருதி யாவையும், தூய பிரணவமும் அருள் திகழ்ஆசியளித்து வாழ்த்தின. மோன மெய்த் தவத்தை முடித்து ஞான நன்னெறி ஞாலத்திற்கென வானவர் முனிவரர் வான வீதியில் நின்று வாழ்த்தினர். தாவரங்கள் தாதுகுத்து வரவேற்றன. அருளாளர் பலரும் ஆசி கூறி வாழ்த்தினர்.

திருவருள் திருவில் நாட்டமுற்றவராய்ச் செல்லும் மெய்ஞ் ஞான நம்பி திருவுளத்திற் சற்றே வாட்டமுற, முன்னவனுர் பேரருள் உள்ளிருந்து குறிப்புணர்த்த, அருளுணர்வுற்ற அண்ணலார் மனத்தினுக்கு நல்லுபதேசம் செய்தவண்ணம் நடந்தனர்.

ஒருநாள் இரவில் ஓரூரில் ஒரு திண்ணையில் அண்ணலார் தங்கியிருக்கையில் பசி தோன்றிட, வானின்று தோன்றிய பேரொளியொன்று அவருட் புகுந்து, அவர் திருமேனி முழுதும் படர்ந்து, அருள்திரு அமுதை அணுத்தொறும் பாய்ச்சியது. உடனே பசிப்பிணி ஓடி மறைந்தது. அண்ணலார் திருச்செந்தூர் அடைந்தனர்.

முன்னொருகால் போந்த முனிவர் வந்துளார் எனக் கோபுரத்தில் உள்ள புட்கள் ஒலிகாட்டி வரவேற்றிட அண்ணலார்

கடற்கரை சேர்ந்தனர். பொன்னெடுங்கோயிலை நோக்கிப் போற்றும் தன் அலைக்கையை நீட்டிப் போதமூர்த்தியாம் அண்ணலின் திருத்தாள் மலர் தொட்டு மாகடல் போற்றிட நற்கடல் நீராடி, நாழிக்கிணற்று நன்னீராடி, ஆழிநிகர் கருணை மிகும் அறுமுகன் கோயிலை • நோக்கி அண்ணலார் நிட்டையில் ஆழ்ந்தனர். வானம் சிறு துளிகள் தூவிப் போற்றியது.

அறுமுகப் பெருமான் காட்சியளித்து, திருஅவதாரம் முதல் வள்ளியம்மை திருமணம் வரையுள்ள கந்தபுராணக் காட்சிகளை அண்ணலார்க்குக் காட்டி அருள் பாலித்தனர். ஆறு நாட்கள் நிட்டையில் ஆழ்ந்த அண்ணலார் வேலவனின் அருள் திறம் போற்றி விடைபெற்று அருந்தவம் நாடிப் பயணம் ஆயினர். நீல நெடுந்திரைக் கை கூப்பி நெடிய ஆழி வழியனுப்பியது.

தவம் நாடி ஏகல்

அருந்தவம் நாடிப் புறப்பட்ட அண்ணலார்க்குப் பல இடங் களில் அருளுபதேசங்கள் கிடைத்தன. ஆங்காங்குள்ள அன்பர் கட்கு அண்ணலாரும் அருளுபதேசங்கள் அருளியவண்ணம் சென்றனர். ஓரூரில் ஓரிரவில் அண்ணலார் படுக்க நாடுகையில், பரிபூர்ணப் பெருமான் ஒரு மானிட வடிவில் தோன்றி, 'தூக்கம் வருகிறதோ?' என அருளாற் கேட்டு மறைந்தனர். அஃதுணர்ந்த அண்ணலார் திருவருளைப் போற்றி உளமுருகி, 'படுக்கையே தூக்கு' என்ற அருட்பாடலையும், 'நித்திரை செய்யாதே' என்ற அருட்பாடலையும் பாடி, மனதிற்கு நல்லுபதேசம் அருளி, 'என்னைத் தழுவி வந்தெனையாண்டாய்' என்ற அருட்பாடலைப் பாடி இறை யருளைப் போற்றியவண்ணம் நிட்டையில் தோய்ந்தனர்.

அங்கிருந்து புறப்பட்டுச் செலும் வழியில் ஒரூரில் அரசமரத் தடியில் கை சிதைந்திருந்த ஒரு வலம்புரி விநாயகரைக் கண்ட அண்ணலார் தம் வண்கரத்தால் தொட்டதும், எல்லாப் பலனும் அருள் கணபதியின் கை எழிலுடன் முளைத்திலங்கியது. அருகிலுள குளத்தில் நீராடி வந்த பெண்கள் இவர் மகிமையைக் கண்டு வியந்துருகிப் போற்றினர். புகழை விரும்பாத புண்ணியராம் அண்ணலார், இங்கிருந்தால் தாம் நாடிச் செலும் தவத்திற்கு இடையூறுறும் என எண்ணி ஒருவர்க்கும் சொல்லாமல் ஒரு நொடியில் பயணமாயினர்.

மற்றொரு நாள் ஒரூரில் ஒரு வீட்டுத் திண்ணையில் சோர்வுற்று அமர்ந்தனர். அறநெறியும் நல்லுளமும் உடைய அவ்வீட்டு

ஆச்சியிடம் தண்ணீர் கேட்டனர். அவ்வம்மை சிறிது சாதம் கரைத்து மோர்விட்டுக் கலந்து தந்தனர். அண்ணல் அதை அருந்தி ஒரு சிறிது மிச்சம் வைத்தனர். ஆச்சி அப்பாத்திரத்தை உள்ளே வைத்து அவசர வேலைக்காக வெளியே சென்றனர். அவ் வமயம் பசியுடன் வந்த அவர் கணவர் அக்கஞ்சியை அருந்தினர். நீண்ட நாளாக அவருக்கிருந்த பாண்டு நோய் உடனே நீங்கியோட முழுநலம் உற்றனர். உள்ளே வந்து அவரைப்பார்த்த ஆச்சியம்மை நம் கணவர் உடம்பு நலமுற்ற தறிந்து வியந்தனர். நோயகன்ற தறிந்த கணவரும் மகிழ்ந்து நடந்ததை நுவன்றனர். அண்ணலார் ஏதும் புகலாமல் அங்கிருந்து புறப்பட்டுவிட்டனர்.

செல்லும் வழியில் சிலர்க்கு அருள்நெறி கூறியவண்ணம் திருநெல்வேலி, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம் முதலிய ஊர்கள் கடந்து செழுந்தவத்தை நாடியவராய்த் தென்காசி சேர்ந்தனர். அங்கோர் அன்பர் ஒரு கிண்ணத்தில் பால் தந்து அண்ணலாரை உபசரித்து இன்சொல் கூறி அனுப்பி வைத்தனர். மாதவத்தை நாடிச் செல்லும் அண்ணலார்க்குத் தூய தவத்திற் கேற்ற திருத்தலம் சீர்பெற்றிலங்கும் திருக்குற்றாலமே என உடையவன் உணர்த்தியருளினன்.

3. அருந்தவத் தொடக்கம்

அண்ணலார் குற்றாலம் அடைதல்

அருந்தவசிகள் ஆற்றிய தவக்கனல் பொதிகையில் திகழ்ந்து, அங்கு வந்து தவம் புரிவோர்க்கு உதவுவதை அருளால் உணர்ந்த அண்ணலார் திருக்குற்றாலம் சேர்ந்தனர்.

சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலானோர் அருள் வளர்த்த திருத்தலமாய், அயன் மால் ஈசன் உருவாகி இறைவன் எழுந்தருள் தலமாய், சித்ரசபை உடையதாய், குறும்பலா, சண்பகாடவி முதலிய தருக்கள் திகழ்வதாய், காண்பவர் கண்ணையும் கருத்தையு மீர்க்கும் இயற்கைப் பேரெழிலுடையதாய் பஞ்சவிதத் தீர்த்தச் சிறப்புடையதாய், பல சிறந்த திருப்பெயருடையதாய் குழல் வாயம்மையொடு குற்றால நாதர் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருப்பதாய், சக்தி பீடங்களுள் சிறந்த ஒன்றாய், அத் தலத்திற் பிறந்தார்க்கும், கண்டார்க்கும், நினைந்தார்க்கும், புகழ்ந் தார்க்கும், இறந்தார்க்கும் இன்பமுத்தி யீயும் திறத்ததாய் விளங்கும் திருக்குற்றாலத்தின் அருளெழிலைக் கண்டு ஆனந்த பரவசமடைந்த அண்ணலார் அன்பின் உருவமாய் உருகினர்.

மலையின் மிசைபடர்ந்த பசுங்கொடிகள் அண்ணலார் வரவு கண்டு தலையசைத்து வரவேற்றன. 'நிலைதிரியா உளமுடையோய் வருக' எனக் குயில்கள் அழைத்தன. உலவில் எழில் காட்டி மயில்கள் நடனமாடின. வானம் சிறு துளிகள் தூவின.

உருகும் உள்ளம் உடைய அண்ணலார் உயர்மலையின் அருளெழில் கண்டு உளம் பூரித்து, அருள் பெறுவதற்குரிய அருந்தவம் பேணுதற்குத் தகுந்த இடம் இதுவே எனத் தீர்மானித்தவராய் ஒருமை மிகு நிட்டையில் ஓரிடத்தமர்ந்தனர்.

அருளுருவோடும் சண்பகாதேவி அவர் முன் தோன்றி "சேயே, நீ சிறிதளவும் கவலையின்றி என்னருகிற் சேர்க" என்றருளினர். மதுரை மாநகரில் மீனாட்சி வடிவில் வந்த தாயாரே நம்மை அழைக்கின்றார் என விழி நீர் பெருக, 'அருள்தாயே வருகின்றேன்' எனக் கூறியவண்ணம் அண்ணலார் விழிகள் திறந்தனர்.

சண்பகாதேவி கோயிலுக்குச் செல்லலாம் வருக எனச் சாது ஒருவர் அழைக்க, காந்தத்தால் ஈர்க்கப்பெற்ற இரும்பைப்போல அண்ணலார் அவர் பின் மகிழ்வுடன் மலையேறிச் சென்றனர். பொலிவுமிக்க பாம்பொன்று அவர்களின் முன் ஊர்ந்து சென்றது.

அன்பின் வடிவாய்ச் சென்ற அண்ணலார், யோகியர் பலரும் சித்தர்கள் பலரும் சிறந்த தவத்தில் திகழ்வதைக் கண்டவண்ணம் சண்பகாதேவி ஆலயம் சேர்ந்ததும் உடன் வந்த சாது மறைந்தனர். வந்தவர் பரிபூர்ணப் பெருமானே என உணர்ந்த அண்ணலார் உளமுருகிப் போற்றினர்; புளகாங்கித முற்றனர். வானம் நுண்துளிகள் தூவியது. வெண்ணெய் கலந்த அன்னம் சிறிது ஊறுகாயுடன் ஒரு கிண்ணத்தில் அண்ணலின் எதிரில் இருந்தது. "சீல! இதை அருந்துக" என அருட்குரல் ஒன்று ஒலித்தது.

இது சண்பகத்தாயின் கருணையே என உணர்ந்த அண்ணல் அவ்வன்னையின் அடிமலர்போற்றி, அன்னத்தை அருந்தி அருந்தவம் பேணத் தகுந்த இடம் எதுவென நாடி நிட்டையிலமர்ந்தனர். அருள் நாடும் அவர் உளத்தில் ஆனை ஒன்று வந்து, அருவியின் அருகே குகையைக் காட்டிற்று. பரிபூர்ணப் பெருமான் பேரருளைப் போற்றிய அண்ணலார், அவர் அருளைப் போலப் பொழியும் சண்பகாதேவி அருவியில் மூழ்கி தியானத்தில் ஆழ்ந்தனர். அவரருகிற் புலியொன்று வந்து வலம் செய்து சென்றது. பூரணன் அருளைப் பூரித்த அண்ணல் மகிழ் பொங்கிடக் கண் விழித்தனர். குகையை நாடினர், மண்டபத்தருகில் குகையொன்று கண்டனர்.

உள்ளே செல்ல எண்ணினர். குகையினுள் இருள் மண்டிக் கிடப்ப தறிந்து 'குருவே' என்று அலறினர். அப்போது பரிபூர்ணர் தம் வலத்தந்தத் தருளொளியை வீசவும், குகை முழுதும் பூர்ண வொளி மயமாகியது. அண்ணலார் உளம் குளிர்ந்து ஒளி வந்த திசையை நோக்கி அன்போடும் வணங்கிப் போற்றி, அவ்வொளி யின் துணைகொண்டு குகையைத் தூய்மை செய்து, மகிழ்வுசால் உளத்தொடும் அருந்தவம் நாடி அமர்ந்தனர்.

அருந்தவத்து ஆழ்தல்

எல்லா உயிரும் இம்மை மறுமை நலங்கள் எய்திப் பேரின்பம் பெற்றுய்யத்தக்க எளிய நெறியை விளக்கியருள வேண்டும் என்று பரிபூர்ண விநாயகரைப் பிரார்த்தித்த வண்ணம் கரமலர் கள் சிரமிசை கூப்பித் தொழுதுருகி அமர்ந்து, விழியிரண்டும் மூடி, நிட்டையில் ஆழ்ந்தனர். எட்டு வயது முதல் நிட்டையில் தோய்ந்து பழகியவராதலால் விரைவில் மனம் குவிய ஒருபத்து நாள் உயர்நிலை யெய்தினர்.

பொறி புலன்கள் ஒடுங்க, அகக்கரணங்கள் ஒடுங்கி, மூலா தாரக் கனல் எழும்பி ஆறுதாரம் கடந்து சந்திர மண்டலம் கடந்து, ஆயிர இதழ்க் கமலத்து அமர்ந்தொளிரும் பரம்பொருளின் அருள்மயமாயினர். தூய திருவருளமுது பெருகி அண்ணலாரின் மேனியில் அணுக்கள்தொறும் பாய்ந்திடவும் பசி தாகம் மேவா தாக, நாயகன்றன் சேவடியில் நன்றிணைந்து ஞானசுகம் துய்த் தனர்.

நானெனும் அகந்தையை நீக்கிய அண்ணல் மோன வடிவாகி முழுத்தவத்தில் மூழ்கினர். ஐம்பூதங்களும் கதிர் மதியும் விண் மீன்களும் வாழ்த்தின. வானவரும் முனிவரும் உயிர்த்தொகை யும் வாழ்த்தினர். சித்தர்கள் பலரும் ஆசியருளினர்.

மலையினின்றும் இழியும் அருவி ஓமென ஒலிக்கும். முகிலினங் கள் நுண்துளி தூவி ஓமென முழங்கும். தண்ணென வரும் தென்றல் ஓமெனப் படரும். வண்டின் குழுவும் ஓமென இசைக்கும்.

கதிர் வெப்பம் தாக்குமோ என முகில்கள் குடைபோல் கவிந்து நிற்கும். மதியருளும் அமுத வொளி வள்ளலார் திருமேனியை வணங்கி நிற்கும். தருக்கள் பலவும் அண்ணலின் தவப்பொலிவு மிகுகென வாழ்த்தும். எவ்வுயிரும் இன்பமுற

நோற்கின்றார் எனப் பறவைகள் போற்றும். அன்பொளியும் அறவொளியும் அருளொளியும் கலந்து அமைதியை நல்கும்.

தம் செல்வத் திருமகன் மெய்ஞ்ஞான நிலையெய்தவந்துளதால் உயர்ந்த செஞ்சொலின் சாரமெல்லாம் இவன்பால் சேர்க எனத் தமிழ்த்தாய் அருள்பாலித்தாள். 'அஞ்சற்க; அருள் நிறைவு பெறுவாய்' என அகத்தியனார் ஆசியருளினார். விஞ்சியெழும் சந்தன நறுமணம் அண்ணல் திருமேனியில் மேவித் தழைத்தது.

அண்ணலாரின் அகத்திலும் புறத்திலும் ப்ரணவப் பேரொலி சூழ்ந்து பேணியது. ஞானப் பேரொளி தூய்மை கூட்டியது. செழுந்தவச் செல்வம் ஜோதி மயமாக்கியது. அருள் திருவமுதம் சோர்வு நீக்கியது. எல்லா உலகமும் இனிது போற்றின.

ஆறு மாதங்கள் கடந்தன. அருள்மிக்க ஓர் அம்மை ஒரு நாளில் அருகுற்று அண்ணலின் திருமேனியைக்கண்டு, "பெருகு தவம் பேணி எலும்பும் தோலுமாய் ஆகிவிட்டனையே" என்று இரக்கத்தோடும் அருவி நீர் கொணர்ந்து பருகச் செய்து அருள் புரிந்தனள். தவத்திறன் வளர்கென ஆசியருளிச் சென்றனள். அண்ணலின் அருந்தவம் தொடர்ந்து நடந்தது.

4. அன்னையார் அடக்கம்

அன்னை நிலை அறிதல்

மேலும் ஆறு மாதங்கள் சென்றன. இரெட்டியப்பட்டியில் அன்னையாரின் திருமேனி நலம் குறைந்திருப்பதை உடையவன் அருளால் உணர்த்தவும், அண்ணலின் தவநிலை கலைந்தது. பூவுல கின்கண் அன்னைக்குச் செய்யவேண்டிய கடமையை நினைந்தனர். பட்டினத்தாரும் அன்னைக்கு ஆற்ற வேண்டிய கடமையை நிறை வேற்றிய செய்தி நினைவுக்கு வந்தது.

உடன்பிறந்த சகோதரர்கள் அன்னையாரை நன்கு பாதுகாப் பாராஹனும், தம்மைப் பத்து மாதம் சுமந்து பெற்று, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அன்னைக்குத் தம் கையால் தொண்டு செய வேண்டியது கடமை என எண்ணினர். "இரெட்டியப்பட்டிக்குப் புறப்படு" என உடையவன் திருவருள் உணர்த்தி ஊக்கியது. நாடி வந்த தவச்செயலைச் சிறிது காலம் தாழ்த்துச் செய்வோ மென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

இருடி நகர் அடைதல்

தவத்தினை நாடி வந்த உள்ளமும் உடம்பும் உடையவன் கருணையால் அருள் மயமாகித் திகழ மலையை விட்டுப் புறப்பட்ட அண்ணலார், தவத்தால் இளைத்த திருமேனியோடும், மெல்ல மெல்ல நடந்து, இடையிடையே ஓய்வெடுத்துக்கொண்டு திருவருள் துணையால் இரெட்டியப்பட்டியை அடைந்தனர்.

அன்னையார் அருகு சென்று 'அம்மா' என அன்புடன் தொழுது அடிமலரிற் பணிந்தனர். சேயினைக் கண்ட தாயார் செப்பவொண்ணுப் பெருமகிழ்வெய்தினர். இருவர் கண்களிலும் நீர்த்துளிகள் அரும்பின. வாய் பேச இயலாதவராய் விழி நீர் பெருக்கிய வண்ணம் பத்தினியாராகிய மாரியம்மையார் அண்ணலின் அடிமலரிற் பணிந்து நின்றனர்.

அருந்தவத்தால் இளைத்த திருமேனியுடன் வந்த அண்ணலாரை அடையாளம் கண்டு கொள்ள இயலாதவராய் இருந்த ஊர் மக்கள் உணர்ந்து வியந்து உவந்து போற்றினர்.

உற்றுரும் ஊராரும் அண்ணல் தாள்பணிந்து உருகி நின்றனர். பற்றற்ற அண்ணலார் 'எல்லோரும் இனிது வாழ்க எனப் பரிபூர்ணர் பதமலர் நினைந்து திருநீறருளினர். 'இரெட்டியப்பட்டி சாமி துணை' என்று எல்லோரும் அன்புடன் ஏற்று அணிந்து மகிழ்ந்தனர். பருதியென ஒளிரும் அண்ணலின் அருட்பொலிவைக் கண்டு பலரும் வியந்து போற்றினர். உடையவன்றன் பதமலரில் தோய்ந்த உளத்துடன் அண்ணலார் அன்னையார் அருகில் களிப்புடன் அமர்ந்து உரையாடினர்.

தினந்தோறும் அதிகாலை நீராடித் திருநீறணிந்து நிட்டையமர்ந்து, அருட்பாடல் பாடி உடையவனைப் போற்றியதும், அண்ணலார் அன்னையாரின் திருவடிகட்கு நன்னீராட்டி நறுமலர் சூட்டி தூய தீபம் காட்டி வழிபாடு செய்து, அருகில் அமர்ந்து அன்போடும் உரையாடுவர். அருள் நாடிவரும் அன்பர்கட்குத் திருநீறு தந்து கருணை புரிவர். இருக்குமிடம் தேடி வந்து வீட்டார்கள் உணவளிப்பர். அண்ணலார் அவ்வமயம் பயற்றம் பருப்பிட்ட கஞ்சியையே அருந்தி வந்தனர்.

மதுரையிலும் பிற ஊர்களிலும் உள்ள அடியவர் அன்பர்கள், அண்ணலார் இரெட்டியப்பட்டிக்கு உற்றதை அறிந்து வந்து வணங்கித் திருநீறு பெற்று அருட்பேறெய்தினர். ஐயங்கள் தவிர்ந்தனர். பிணி நீங்கப்பெற்றனர். குறை தீர்ந்து நலம்

அடைந்தனர். இது கண்ட ஊர் மக்களும் சுற்றுப்புறத்தவரும் அண்ணலின் மகிமையை உணர்ந்து போற்றி அருள்நலமெய்தினர்.

சித்தி விநாயகர் ஆலயம்

கூட்டம் அளவின்றிப் பெருகியதால் வீட்டில் இடம் காணுது போக, அண்ணலார் இதைப்பற்றிச் சிந்திக்கலானுர். ஒருநாள் அண்ணலார் ஊருக்கு மேற்கேயுள்ள கண்மாவின் ஓரமாகச் செல்கையில் ஆங்கிருந்த கருங்கல் ஒன்றை உற்று நோக்கிய வண்ணம், உடன்வந்த அன்பரைக் கொண்டு புரட்டச் சொன்னுர். அது ஒரு விநாயகர் சிலேயாகத் தோற்றம் அளித்தது. ஊருக்குக் கிழக்கே உள்ள புளியந்தோப்பில் அதனை அமர்த்தி, 'சித்தி விநாயகர், எனத் திருப்பெயர் சூட்டி, அதன் அருகே அமர்ந்தனர். ஊர் மக்கள் அம்மூர்த்திக்கு நாற்புறமும் மண்சுவர் வைத்துப் பருத்தி மிளாறு வேய்ந்து ஒரு கோயில் அமைத்தனர். அண்ணலார் அன்னையார்க்குத் திருவடிப் பூசையாற்றி அளவளாவும் நேரம் தவிர, மற்றைய நேரத்தில் அவ்வாலயத் தருகில் அமர்ந்து அன்பர் கூட்டத்திற்குத் திருநீறு வழங்கி, அருள் பாலிப்பர். நாளும் அம் மூர்த்திக்குப் பூசை ஒழுங்காய் நடக்கும். வெள்ளிதோறும் சிறப்புப் பூசை நடைபெறும். மாதந்தோறும் கடைசி வெள்ளியன்று மிக அதிகமான கூட்டம் சேரும்.

விஷக்கடி நீங்குவதும், பிணிகள் நீங்குவதும், பேய்கள் விலகுவதும், நாடிவரும் செயல்கள் கைகூடுவதும் கண்டு வியந்த பலரும் புகழ்ந்து பேசினர். கூட்டம் மேலும் பெருகியது. அவ்வூர் ஐயம் பெருமாள் பிள்ளே மனேவி ஆச்சியம்மை புன்செய்க் காட்டுக்குப் போயிருந்தபோது விடப்பாம்பு கடித்துவிட்டதால் அவ்வம்மை இறந்து போயினர். அவரை அண்ணலிடம் கொணர்ந்தனர். அண்ணலார் விநாயகர் கோயில் முன் கிடத்தித் திருவருளே நினேந்து திருநீறு தடவவும், இறந்த அம்மை உயிர் பெற்றெழுந்து, அண்ணலே வணங்கினர். அனைவரும் அறிந்து வியந்தனர்.

அருட்சட்டக் கடைக்கால்

அளவின்றிப் பெருகிவரும் அன்பர்களின் அல்லல் அகற்றிஅருள் பாலிக்கும் அண்ணலார், திருவருளால் தம்முள் உதிக்கும் உண்மைகளே உலகோர்க்கு உணர்த்தி, எல்லோரும் அருள்வாழ்வு வாழ்ந்து மெள்ள மெள்ளப் பக்குவமுற்று உய்யும்படி செய்ய விழைந்தனர். பலதிறப் பக்குவமுடைய பெருங்கூட்டத்தில் ஒருசிலரின் பக்கு

வத்தை அறிந்து அருகழைத்து, இகசுகமும் பரசுகமும் நன்கெய்த இக்கலியுகத்தில் நடந்துகொள்ள வேண்டிய வழிமுறைகளை அன்புடன் கூறி அருள்புரிவர். அவர்களும் பக்தியுடன் போற்றிப் பயன்பெறுவர்.

விடியல் நீராட்டம், வெந்நீர் நீக்குதல், தெய்வம் ஒன்றே என்று நம்புதல் உடையவன் அருளில் முழுநம்பிக்கையோடு செயல் ஆற்றுதல், சைவ உணவே உண்ணுதல், ஜாதி சமய பேதம் தவிர்த்தல், களவு பொய் சூது மதுபானம் முதலிய தவிர்த்தல், பிணிகளையும் துயர்களையும் திருவருள் துணைகொண்டே நீக்குதல், உடையவனை ஒருமை மனத்துடன் தியானித்தல், ஐவகையாம் பொறி புலனை அடக்கி விரதம் காத்தல், அன்பையே பேணல் ஆகிய நெறிமுறைகள் இனிய மொழியால் இதமுடன் போதிக்கப் பெற்றன.

உலக மக்கள் உய்யப் பயன்படும் என்று தாம் முடிவு செய்திருந்த உண்மைகளை இரெட்டியப்பட்டியில் சித்திவிநாயகர் திருமுன், அருள் நாடும் அன்பர்கட் குணர்த்தி அண்ணலார் அருட் சட்டத்திற்கு அடிப்படை போட்டு வைத்தனர்.

இடையிடையே பொதிகைத்தவம்

அன்னையார் பொருட்டு இரெட்டியப்பட்டியில் தங்கிய அண்ணலார் உளத்தைப் பொதிகைக் குகைத்தவம் ஈர்த்தவண்ணமாய் இருந்தது. அதனால் அண்ணலார் இடையிடையே பொதிகைக்குச் சென்று அம்பாசமுத்திரம், பாபநாசம், குற்றாலம் முதலிய இடங்களில் உள்ள குகைகளில் அமர்ந்து அருந்தவம் புரிவர். அன்னையின் நினைவு வருகையில் இரெட்டியப்பட்டிக்கு மீள்வர். இவ்வாறு ஓராண்டு கடந்தேறியது.

அன்னையார் அடக்கம்

அண்ணலாரின் இன்பம் கனிந்த அன்பும், தமக்குப் புரிந்த தெய்வத் திருப்பணியும், தவம் ஆற்றும் தனிப்பெருமையும் உன்னி உவந்த அன்னையார், மன்மத ஆண்டில் ஒருநாள் இறைவன் திருவடி யடைந்தனர். அண்ணன்மார் இருவரோடும் அண்ணலார் அன்னைக்கு ஆற்றவேண்டிய ஈமக்கடன்களை முறைப்படி ஆற்றினர். அன்னையின் திருமேனியைத் தீயிலிட்டுத் தூய்மை செய்யாமல், பூதேவியின் திருவயிற்றில் செவ்வையாய் அடக்கம் செய்து

யாவரும் இவ்வாறு மண் மறைவு செய்தலே சிறந்தது என விளக்கினர். அன்று தொட்டு அக்குடும்பத்தில் இறையடி நீழல் எய்துவோர்க்கு மண் மறைவு (சமாதி) செய்யும் பழக்கம் உண்டாயிற்று.

மண்டல மவுனம்

அன்னையார்க்குரிய இறுதிப் பணிக்ளை ஆற்றியதும், அண்ணலார் முன்பு தாம் தியானத்தில் அமர்ந்திருந்த இடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருவிழிகளையும் மூடினர். சற்றும் அசைவின்றித் தியானத்தில் ஒன்றி மெய்ஞ்ஞான நிலையில் தோய்ந்தனர். இரெட்டியப்பட்டி மக்கள் பொதிகையில் அண்ணலாரின் தவத்தைக் கண்டிலர் ஆதலின் அச்சமுற்று வருந்தினர். அன்னையாரை முத்திநிலையிற் சேர்க்கவோ, நன்னெறி தந்து ஞாலத்தைக் காக்கவோ இந்நிட்டையை அண்ணல் மேற்கொண்டனர் என யாரும் அறிகிலர்.

இப்படி ஒரு மண்டலம் கடந்தபின் ஒருநாள் அண்ணலின் விழிகள் சிறிதே திறந்தன. இதுதான் சமயம் என எண்ணிய குடும்ப நண்பராகிய வெள்ளையப்பத் தேவரும் மற்றும் பலரும் அண்ணலின் திருமேனியைப் பிடித்துப் பலவாறு உலுக்கி வருத்தினர். அண்ணலாரின் விழிகள் திறந்தாலும், உடையவன் திருவடிகளினின்று நீங்காத சிந்தையராய், உலக நினைவற்றவராய் மீண்டும் தவத்திலொன்ற நாடும் நிலையினராய் இருந்தமையால், உடுத்து அவிழ்ந்த ஒரு துணியை எடுத்துக் கிழித்தனர். இயல்புக்கு மாறுன செயல்கள் புரிந்தனர். உண்மையுணராத பலர் பைத்தியம் பிடித்துவிட்டது என்றனர். மதுரையில் நடந்த செயல்களை உணர்ந்தவர் பைத்தியமன்று என்றனர்.

அண்ணலார் எழுந்தனர். அருந்தவ வேட்கை மிகுதியால் இல்லத்தைவிட்டு வெளிக் கிளம்பினர். கண்மாய் வரை சென்று வருவர் என்று ஒரு சிலர் கூறினர். எவரையும் திரும்பிப் பாராமல் அண்ணலார், வேகமாய் நடந்து மறைந்தனர். உடன் சென்ற அடியவர் ஒன்றும் புரியாமல் திகைத்துத் திரும்பினர். ஊரவர் மடமையை எண்ணி வருந்தினர். ஊரவர்களும் உள்ளம் கலங்கினர். ஊர் மக்களில் பலர் நரம்பச் சிலந்தி நோய்க்காளாகி வருந்தினர் எங்கெங்கு சென்று தேடியும் அண்ணலாரைக் காணுது திரும்பினர். அண்ணலார் நம் குற்றங்களை மன்னித் தருளுவர் என எண்ணித் தேறினர்.

5. பூரண தவமும் பூரணர் அருளும்

மீண்டும் பொதிகைத் தவம்

அருளெழில் மிகுந்த திருக்குற்றாலம் அன்புடன் வரவேற்க, அண்ணலார் சென்று சேர்ந்தனர். சண்பகாதேவி ஆலயம் சென்றனர். அருவி நீராடி அம்மையைப் போற்றினர். முன்பு நிட்டையில் அமர்ந்த குகைக்கண் தவம் நாடி அமர்ந்தனர். அந்தக் குகை அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமாகியதால் பூர்ண அமைதி கிடைக்கவில்லை. அண்ணலார் அக்குகைக்கு நேரே மேல் நிலையில் இருந்த மற்றோர் குகைக்கண் சென்று அமர்ந்தனர். இறை திருவருளால் அங்கு அமைதி நிலவியது. அருள் நிட்டை கூடியது. புற உலகின் தொடர்பறுத்து, நித்தியானந்த பரிபூர்ணம் நாடி முறையோடும் அருள் ஞான நிட்டை மேற்கொண்டு முழுத் தவத்தில் மூழ்கினர்.

இயேசு நாதரும் முகம்மது நபியும் ஆசியருளல்

அப்போது இயேசு நாதரும் முகம்மது நபியும் தோன்றி, “குறைவின்றித் தவம் முடிப்பீர்; பொதுக் கருத்துகளைப் புவிக்குக் கொடுப்பீர்; பல்லுயிரும் எளிதாகப் பேணிப் பரமானந்தப் பெருவாழ்வில் நிலைத்துய்யத்தக்க பொதுநெறியை அருளி உய்யச் செய்வீர்; அருட்பெருங்கருணை அகம்புறம் எங்கும் துணையாகியமையும்; அருளாளர் குழு நும்மை அன்புடன் வாழ்த்தும்” என அருளி மறைந்தனர்.

அண்ணலாரின் அருந்தவச் சிறப்பு

அண்ணலார்க்கு ஞானவிழி தோன்றியது, இணையில் தவக் கனல் வளர்ந்தோங்கி எங்கும் பரவியது. பரஞானப் பொலிவு மிகுந்து அருட்புனிதம் புகட்டியது.

சேய்க்குற்ற நோய் நீங்கத் தாய் கடும் பத்தியம் மேற்கொள்வது போல், உலகுயிர்களின் பவப்பிணி நீங்க அருளண்ணலார் கடும் தவம் மேற்கொண்டனர். குகையினுள்ளிருந்து வந்த தவக்கனல் அம்மலைச் சூழல் முழுவதையும் தூய்மை செய்ததால் பறவைகளும் விலங்கினமும்கூடப் பகை நீங்கி விளையாடின.

ஐம்பூதங்களும் ஆருயிர்த்திரளும் அண்ணலாரின் தவ ஒளி கண்டு மகிழ்ந்து போற்றின. தேவர்களும் தேவ மாதர்களும் மேவி அருவி நீராடி அண்ணலின் தவநிலை கண்டு பரவிச்

சென்றனர். இத்தகைய அருந்தவம் இக்கலிகாலத்தில் யாரும் இயற்றல் அரிது எனச் சித்தர்களும் முனிவர்களும் உவந்து போற்றினர்.

எண்ணற்ற சித்திகள் இறை திருவருளால் அண்ணல்பால் அமைந்தன. சித்தி விநாயகர் மேலும் மேலும் அவர்க்கு அற்புத ஆற்றலெலாம் அருளி வந்தனர். மீண்டும் உயர் பெருந்தவத்தில் அண்ணலார் தோய்ந்தனர். விண்ணும் மண்ணும் வேண்டும் வரமெலாம் இனிது எளிதிற் பெறலாம் என விண்ணவர் எண்ணினர்.

அங்கயற்கண்ணம்மை அருட்காட்சி

அருந்தவம் புரியும் அண்ணலின் திருமுன் அங்கயற் கண்ணம்மை தோன்றி, 'இவ்வாறு உடலை வருத்தும் அரும்பெரும் தவத்தை ஏன் புரிகின்றனை?' என அன்பொடும் வினவினர். உலகுயிர் அனைத்தும் பேரின்ப வாழ்வாற்ற வழி செய்ய வேண்டு மென்றே இவ்வருந்தவம் புரிகிறேன், என இருவிழிகளிலும் ஆனந்த பாஷ்பம் பொங்க அம்மையின் திருவடி மலர்களை வணங்கிக் கூற, "நினது செயல் வெல்க" என அருளாசி வழங்கி, அம்மையார் மறைந்தனர்.

அண்ணலார் மேலும் தவத்தில் மூழ்கினர். உயர் தூய மோன நிலை எய்தினர். இவர் காற்றுப் பட்டதும் இறந்த உயிர்கள் பிழைத்தெழுந்தன. இஃதுணர்ந்த அண்ணலார் சற்றும் மயங்காது மேலும் அருந்தவம் ஆற்றினர். திருவருளை யெய்தவே தவம் புரிய வேண்டும்; சித்துகளியற்றிப் பிறவிகளைப் பெருக்குவதற்கன்று என்ற திடமுடன் திகழ்ந்தனர்.

அகந்தையை வெல்லல்

மூன்று குணங்களும் நானெனும் அகந்தையும் கூடிப் பேயுருவில் வந்து தோன்ற, அண்ணலார் 'இங்கு நெருங்காதே; செல்க' எனச் செப்ப, அவர் ஞானவொளியின் முன் நிற்க வொண்ணுது அகங்காரம் பொடியாகிச் சிதைந்தது.

மாயையை வெல்லல்

மாயை ஒரு பெண்ணுருக் கொண்டு அண்ணல்முன் தோன்றி இனிய பல உரை கூற, தூய இவர் ஒளி பட்டதும் அம்மாயையின் சக்தி துகளாய்ப் போகவும், ஒற்றைக்கொம்பன் அருளொளி

தோன்றவும், அவர் கழலடி விளங்கவும், பற்றெலாம் அறப் பரத்தை விழைந்த இவர் இறுகப் பற்றிக்கொண்டனர்.

பரிபூர்ணர் அவதாரக் காட்சியும், அன்னையுடன் நடனமிடும் காட்சியும்

ஓங்காரத்தின் தெய்விகம் திகழொளி செறிந்து தோன்றவும் பரிபூர்ணர் அவதாரத் திருக்காட்சி கண்டு உலகவர் உணரும் வண்ணம் அருட்பாடல் பாடினர். உமையம்மையோடும் பரிபூர்ணர் மகிழ்ந்து நடனமிடும் அற்புதத்தையும், அவ்வாறு அவர் விளங்கும் கோபுர வாயிலையும், சதங்கை ஆர்ப்பையும் அருளாற் கண்டு 'ஆத்தாளுடன் கூடி' என்ற அருட்பாடல் பாடிப் பரவினர்.

திரிபுர தகனம்

அக்கணத்தில் அண்ணலார் அகத்திற்குள்ளே முக்குண வடிவாயும், மும்மல வடிவாயும் இருந்து வந்த திரிபுரங்களையும் பரிபூர்ணப் பெருமான் அடியோடு தகனம் செய்தனர். அஃது உணர்ந்த அண்ணலார் 'திரிபுர தகனம்' எனும் அருட்பாடல் பாடிப் போற்றினர்.

அருள்நிலை அடைதல்

மலைக்குகையில் அவர் கையில் பரிபூர்ணர் தூல குருவாய்த் தோன்றி உபதேசம் அருளினர். இறுதிவரை அவர்க்கு சூக்ஷும குருவாயும், காரண குருவாயும் திகழ்ந்து கருணை புரிந்து அகம் புறமும் கலந்து பொலிந்தனர். அண்ணலார் பரஞான பரிபூர்ண மான திருவருள் மயமாய் விளங்கினர்.

மனம் என்பது ஒரு குகை. அதில் மல்கியுள்ள இருளைப் போக்க நாள்தோறும் பரிபூர்ணர் திருவடித் தாமரையைப் பதிய வைத்து, பின்னர் ஆன்மா குகையினுள் அமர்ந்து தூயதவம் பேணி நின்றால், உன்னுதற்கரிய அருள்ஞான முத்தியுறும்; பேரின்பம் ஓங்கும் என்ற உயர்கருத்தினை அண்ணலார் தம் அருந் தவத்தின் மூலம் உலகுக்கு உணர்த்தினர்.

மும்மூர்த்திகள் தரிசனம்

அயன் அரி அரன் எனும் மும்மூர்த்திகளும் அண்ணல்புரி அருந்தவத்தின் திறன் கண்டு மகிழ்ந்து போந்து, "நீ என்ன பேறு

விழைந்தனை'' என வினவினர். 'உயிர் அனைத்தும் பேரின்பம் பெறு நெறியே விழைந்தனன்' என அண்ணலார் கூறினர். பரிபூர்ணரே அருள்வார்; எமக்கியலாதெனப் பகர்ந்து மூவரும் மறைந்தனர்.

பரிபூர்ணர் தரிசனம்

மதுரை மாநகரில் வைகையின் தென் கரையில் காட்சி தந்து, மாலை சூட்டிப் புதுமணம்கொண்டு அருட்கருணை புரிந்தாண்ட பரி பூர்ண மூர்த்தி அண்ணலின் அருந்தவத்திற்கு உவந்து அருள் பாலிக்க உன்னி அமரர்களை முன்னதாக அனுப்ப, அவர்கள் குகையருகில் வந்து சூழ்ந்தனர்.

இறையருளில் நீங்காப் பேரன்போடும் அருந்தவம் ஆற்றும் அண்ணலின் முன்னர் வைகாசிப் பௌர்ணமியில் பரிபூர்ணப் பெருமான் தோன்றியருளினர். உள் மலர்ந்த உயர் அன்பால் அத்தன் அடிமலர் பற்றி உருகி ஒப்பிலா நட்பொடும் மிக மிக அழுது, ஞாலம் உய்யும் வண்ணம் அண்ணலார் கதறினர்.

பரிபூர்ணப் பெருமான் விஸ்வரூப தரிசனம்

தீரணிவாழ் உயிர்கட்குச் சட்டநெறியருள அருந்தவம் புரிந்த அண்ணலார்க்குப் பரிபூர்ணப் பெருமான் தமது விஸ்வரூப தரிசனத்தைக் காட்டியருளினர். எல்லா உலகமும், எல்லா உயிர்களும், எல்லாத் தேவர்களும் எல்லாப் பொருள்களும் அப் பெருமாளின் அருள் திருமேனிக்குள் அமைந்து விளங்கும் அற்புதத்தை ஞானக் கண்ணுற் கண்டு களித்த அண்ணலார் ஆனந்த பரவசராகி அருட்பாடல்கள் பாடிப் பரவினர்.

குருநாதர் பரிபூர்ணர் உரையாடல்

அக்கணத்தில் பரிபூர்ணர் தம் விஸ்வரூபத்தை மாற்றி, தொன்மை யுருவுடன் தோன்றி, அருட்கண்ணல் நோக்கி, தக்க பக்குவ முற்றொளிரும் அண்ணலை விளித்து, 'உனக்கு வேண்டியதென்ன' என அன்புடன் கேட்டனர். உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் ஜனன மரணம் கடந்த முத்திபெறற்கு எளிய நெறியொன்று சாற்றி யருளவேண்டும் என அண்ணலார் கூறினர்.

பரிபூர்ணர் : உனக்கு முத்தி தருகின்றோம்! உலகு திருந்திட நீ ஏன் உழைக்கிறாய்?

அண்ணலார் : எனக்கு மட்டும் முத்தியெனில் யான் விரும் பேன்; எல்லோர்க்கும் தர வேண்டும், வேறெதுவும் யான் விரும்பவில்லை.

பரிபூர்ணர் : மண்ணுலகும் விண்ணுலகும் செய்த தவப் பயனால் நீ வந்துதித்தாய். இதுவரை எவரும் செய்தறியாத முறையில் அருந்தவம்புரிந்துள்ளாய். உலகப் பற்றறுதல் தவத்தின் முதற்படி. அமரர் காட்சி பெறுதல் இரண்டாம் படி. குண்டலி ஏறுதல் மூன்றாம் படி. காரண குருவை உள்ளே தரிசித்தல் நான்காம் படி. அருளமுதம் அருந்தல் ஐந்தாம் படி. ஆயிர இதழ்க் கமலத்தில் அருளுருவோடு அமர்தல் ஆறாம்படி. அங்குள்ள பரமாத்மாவுடன் ஆத்மா கலந்து, இரண்டும் ஒன்றாகும் துரிய வெளியினில் உலகைக் கடந்து நிற்றல், எங்கும் பேரின்பம் அனுபவித்தல், எங்கும் எப்பொருளுள்ளும் இறைவனைக் காணல், எங்கும் மங்களம் பொலிய அருள் வாழ்வாற்றல்—இவை ஏழாம் படியாகும். மிக உயர்ந்த இவ்வேழாம்படியில் நீ விளங்குகிறாய்.

முற்பிறவியில் நம் சாரூப நிலையில் கயிலையில் திகழ்ந்தாய். உலகினில் தோன்றிய அருளாளர் களவனைத்தும் நனவாகும் சமயமிது. ஆதலால், இகநலமும் பரநலமும் தருநெறியை அருளவே உன்னை இங்கனுப்பி வைத்தோம்.

தன்னிகரில் சாயுஜ்ய நிலை எய்தத் தகுதி மிகப்பெற்றிருந்தும், அதனை யெய்த விழையாமல், வையம் உய்ய விழைந்து நின்றாய்; நின் உயர்ந்த திருவுளம் கண்டு அகமகிழ்ந்தோம். பன்னரிய அருட்சட்ட நெறி எங்கும் பரவி இன்பம் வழங்கும்.

இதுவரையில் நின்னுளத்தில் எண்ணியிருந்த திட்டம் இனியதே ஆகும்; மதம் அனைத்தின் சாரம் அதுவே; அதுவே வாழும் நெறி; இதமுற நன்றதனை உலகுக்கு இயம்பிடுவாய். எவ்வுயிரும் பேணச் செய்வாய்; உதவு பெருந்துணையாகி உயிர்கள் தொறும் உள்ளும் புறமும் மேவிக் காப்பாய். தூய அருளரசாட்சி உனக்கு அளித்தோம்; புவியிலுறு துன்பம் தீர்த்து எவ்வுயிரும் பரமானந்தம் பெறப் புரிவாய் எனக் கூறியருளினார்.

அருட்சட்டம் அருளப் பரிபூர்ணர் உறுதிதரல்

“நாயகனே! உறுதி கொடுத்தருள வேண்டும்” என அண்ணலார் போற்றினர். பரிபூர்ணப் பெருமான் அண்ணலார் கரத்தில் தம் கரம் வைத்து “அருட் சட்டம் பேணும் அடியவர் அனைவரையும்

என்றும் காத்தருள்வோம்'' என உறுதி மொழி கூறி மறைந் தருளினர்.

தாம் விழைந்தவாறே பரிபூர்ணர் அருள் புரிந்ததை எண்ணி எண்ணி இயம்பவொண்ணுப் பெருமகிழ்வுற்று ஆனந்தக் கண்ணீர் பெருக, எண்ணில் உயிர்களின்பாலும் நினக்குள்ள பெருங்கருணே யென்னே!'' என்று உயரன்போடும் ஏத்திய வண்ணம் அண்ண லார் பொலிந்தனர். பரிபூரணப் பெருமான் அண்ணலாருக்குள் பரிந்து புகுந்தனர். அந்நாள் முதல் அண்ணலார் செயலெலாம் இறை செயலாய் அமைய, அருட் பாடல் பல பாடித் திருவருளின் திறத்தைப் போற்றிய வண்ணம் எந்நாடும் எவ்வுயிரும்இனிதுய்யும் என முழுமகிழ்வோடும் அண்ணலார் எழுந்தனர்.

அகத்தியனுர் அருளாசி

குகையின் வாயிலில் அகத்திய மாமுனிவர் வந்து நின்று, 'கலியுகத்தில் ஐயாயிரம் வருடம் கடந்த பின்னர் அருட்சட்டம் இருட்படலம் நீக்கும் ஒளிச்சுடராக உலகெங்கும் விளங்கும் எனக்கூறி அருளாசி வழங்கினர்.

சண்பகத் தாயின் ஆசியுரை

தவம் முடித்துப் புறப்பட்ட அண்ணலின் திருமேனி தவப் பொலிவோடு திகழ்ந்தாலும், பூமி மீது நடப்பதற்கும் இயலாத நிலேயில் மிகமிக இளேத்திருந்ததால், மெல்ல மெல்ல நடந்து சண்பகாதேவி ஆலயம் சேர்ந்தனர். சிலநாள் தங்கிய பின்னர் செல்லலாம் என எண்ணி அமர்ந்தனர். நல்ல புண்ணியம் உடைய சிலர் உள்ளன்போடும் பக்குவத்தோடும் ஊட்டி வந்த உணவாலும், பரிபூர்ணர் திருவருளாலும் சிறிது நடக்கும் சக்தி பெற்றனர்.

தாம் பெற்ற அரும் பொருளேத் தம் மக்களுக்குத் தந்து அவர் மகிழ்வைக் காணத் துடிக்கும் ஒரு நற்ருய் போல, தாம் பெற்ற அரும் பொருளாம் சட்ட நெறியைத் தகுதியுடையவர்க்கு அருள வேண்டும் என்னும் பேரார்வமுடன் அடியவரைத் தேட அண்ண லார் கருதினர்.

தம்மிடம் வந்த அண்ணல் அருட்பேறு அடைந்ததை உன்னி அகமிக மகிழ்ந்த சண்பகாதேவி, பொதிகை தரும் தமிழ், தென்றல், சந்தனம்போல் அருட்சட்டம் மண்ணிலும் விண்ணிலும் உறையும் பலர்க்கும் பயனருளி விளங்கும் எனக் கூறி, சகல

உயிர்க்கும் இதமும் மகிழ்வும், புனர் வாழ்வும் சமுதாயத்தில் மிகப் புதிய திருப்பமும், தண்ணருள் தோய்வும், ஆன்ம விளக்கமும், தூய சுகமும், இறையிணைப்பும் நல்குவதாய், உலகுயிர்களால் விரும்பப் பெற்றுத் தகவுற இவ்வருட்சட்டம் செழிக்குமாக! என முழு மகிழ்வோடும் நல்லாசி யருளினர்.

அண்ணலார் காசியை அடைதல்

எல்லாம் உடையவன் செயல் என எண்ணிச் செல்லும் அண்ணல் எப்பொருளும் விரும்பாமல், எவரையும் நோக்காமல், உடம்புக்குத் தேவை யாதெனப் பொருட்படுத்தாமல், ஒளி செல்லும் இடமெங்கும் இருள் நீங்கல் போல், தன்னிகரில்லா மெய்ஞ்ஞான ஒளியால் அஞ்ஞான இருளை அகற்றிய வண்ணம் நடந்து சென்றனர்.

மலைவளம் செறிந்திலங்கும் ஆலப்புழை, கோட்டயம், எர்ணுகுளம், கள்ளிக்கோட்டை, திருச்சூர், மைசூர், மங்களூர் முதலிய ஊர்களைக் கடந்து, மகாராஷ்ட்ரம், மத்தியப்பிரதேசம் வழியாகச் சென்று காசி மாநகரை அடைந்தனர்.

பெரியரெலாம் பேணிப் போற்றும் அருமை நிறை அந்நகரில் திகழும் வெண் கொடிகள் அவரை ஆர்வமுடன் வரவேற்றன. அருளும், பொருளும், அறமும், பக்தியும் செறிந்திலங்கும் அத் திருத்தலம் சேர்ந்த அண்ணலார் மகிமை மிக்குடைய கங்கா நதிக் கரை சேர்ந்தனர்.

கங்கா தேவியின் அருள் பெறல்

மதுரை மாநகரில் வைகையின் தென்கரையில் பரிபூர்ணரின் அருட்காட்சி கண்டமை நினைவுக்கு வந்தது. உமை யம்மையை இடப்பாகத்தில் அமர்த்திக்கொண்ட சிவபெருமான், கங்கா தேவிக்குத் தம் திருமுடியில் இடம் கொடுத்த பெருமையையும் உயிர்களுக்கு இகம்பரம் நல்கும் அருட்சட்டத்தின் அடிப்படை யாயும், நுழைவாயிலாயும் திகழ்வது தண்ணீரே என்பதையும், அருட்சட்ட அடியவர் முதலில் வணங்குதற்கு உரிய தெய்வம் கங்காதேவியே என்பதையும் எண்ணிய அண்ணல் கங்கையைப் போற்றினர்.

“தாயே! நும்பால் தோய்ந்து மூழ்கின் உடலும் உள்ளமும் நலம் பெறச் செய்வதுபோல், அதிகாலை பிரம முகூர்த்தத்தில் எந் நீரிலேனும் மூழ்கும் உயிர்களுக்கும் உன் அற்புதச் சக்தியை அருளி,

இகத்திற்கும் பரத்திற்கும் வழி காட்டியருள வேண்டும்'' என வேண்டினர்.

அலைகளினூடே கங்கா தேவி அருட்காட்சி யருளினர். "உல குயிர்கள் உய்யவேண்டும் என அரும்பாடு பட்டு அருட்சட்டத் திருநெறியை அருளாற் பெற்றாய்; இந்த நெறி உலகில் நன்கு தழைத்தோங்கும்; வைகறைப் போதில் நீரில் மூழ்கிடுவோர் அனை வரும் சார் பிணிகள் நீங்கி, இம்மை நலங்கள் எய்தி இன்புறவும் மறுமைக்கும் உகந்த அருள் வாழ்வாற்றவும் நாம் என்றும் துணை புரிவோம்; அஞ்சவேண்டாம்'' என்று கூறி அருளாசி அருளினர். அருளண்ணல் திருமேனி மீதில் மலர் மழை பொழிவது போலச் சிறு திவலைகளைத் தூவி யருளினர். அண்ணலார் அந்தக் கணத்தில் அடைந்த பேரானந்தத்தை அளவிடற் கியலுமோ?

மறுநாள் காலை அண்ணலார் கங்கா நதியில் நீராடினர். விசுவேசப் பெருமானும், விசாலாட்சி யம்மையும், துண்டி ராஜ கணபதியும் ஆகாய வீதியில் தோன்றி அருளாசி யருளினர்.

ஆந்திர நாடடைதல்

அருட்சட்டத் திருநெறியைத் தக்க அடியார்க்கருள வேண் டும் என்னும் பேரார்வத்துடன் காசியை விட்டுப் புறப்பட்ட அண்ணலார் கயா, ஔரா, கரக்பூர், பலாசூர், கட்டாக் முதலான ஊர்களைக் கடந்து ஆந்திர மாநிலம் சேர்ந்தார்.

கோதாவரி, கிருஷ்ணு நதிகள் பாய்ந்து வளம் மிகப் பெருக்கும் இடங்களில் அமைந்த பல திருத்தலங்களைக் கண்டார். ஆந்திர நாட்டில் உள்ள அருளாளர்களையும், அருட்கவிஞர்களையும் கண்டார். இந்த நாட்டில்தான் முதன்முதலில் அருட்சட்ட நெறியை ஏற்கத் தக்க அடியார் உள்ளார் என உடையவனின் அருட்குறிப்புத் தோன்றியது. அருட்சட்ட நெறியின் முறைகளை யெல்லாம் அண்ணலார் தம் அகத்தின்கண்ணே அமைத்துக் கொண்டார்.

6. திருவருட் சட்டம்

அருட்சட்ட மாண்பு

எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும் எல்லா இனத் தவரும், எல்லா மதத்தினரும், கற்றார் கல்லார், செல்வர் வறிஞர், இளையோர் முதியோர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி,

எல்லோரும் எக்காலத்தும், எவ்விதப் பொருட்செலவுமின்றி, எளிது கடைப்பிடித்து ஒழுகி, இம்மை நலம், மறுமை நலம் ஆகிய யாவும் இனிது எய்தத்தக்க பொது நெறியைச் 'சட்டம்' என்ற பெயரால் திருவருளால் வகுத்து வழங்கவேண்டும் எனத் திருவுளம் கொண்டனர்.

பேரின்ப முத்தியை அடையவேண்டும் என விரும்பும் எல்லோரும் அனைத்தையும் துறந்து துறவு நெறியை மேற் கொள்ள இயலாதாகையால், இல்லறத்தாரும் இனிது பேணிப் பயனெய்தும்படி அவ்வருள் நெறி யிருத்தல் வேண்டும் எனக் கருதினர்.

'சட்டம்' என்ற பெயர்க் காரணம்

அரசாங்க அலுவலகங்களில் நீதி மன்றங்களில் சட்ட அமைப்பின் வண்ணம் ஒழுங்காகச் செயல்கள் நடைபெறு வதையும், மீறுபவர் தண்டனைக்குள்ளாவதையும் அண்ணலார் உணர்ந்தனர்.

கதிரும் மதியும், கனலும் புனலும், மழையும் காற்றும், மலையும் நதியும் முறை பிறழாமல் திகழ்வதையும், எவ்விதக் கைம்மாறும் எவரிடமும் எப்போதும் எதிர்பாராமல் செயல் புரிவதையும் உணர்ந்தனர்.

அரசியல் சட்டம் மாறினாலும், இயற்கைச் சட்டம் மாறாமல் என்றும் ஒரு படித்தாய் இலங்குவதையும் உணர்ந்தனர்.

அருட்சட்டம் எந்தக் காலத்தும் இனிது விளங்கி, பொருளும் அருளும் தவமும் புனித சக்தியும் வழங்கி, பிறவிக் கடல் கடத்திப் பேரின்ப முத்தி அருளவேண்டும் என நினைந்து இப்பொது நெறிக்குச் 'சட்டம்' என்ற பெயர் சூட்டினர்.

சட்ட நெறியிலுள்ள சிறப்பான அம்சங்களின் சுருக்கம்:

1. நாள் தவறு நீராட்டம்

ஒவ்வொரு நாளும் அதிகாலை நான்கு மணிக்கு மேல் ஐந்து மணிக்குள் பச்சை நீரில் முழுகவேண்டும். தலையும் நனைய நீராட வேண்டும்.

அந்த நேரத்தில் தண்ணீருக்கு 'அதிக சக்தி இருக்கிறது என அருளாளர்கள் உணர்ந்தனர். அருமறையும் இதனை விளக்கு கிறது. இக்கால விஞ்ஞானிகளும் இக்கருத்தை ஒப்புக்கொள்ளு

கின்றனர். அந்நேரத்தில் தண்ணீரில் மூழ்குவதால் நாடி நரம்புகளுக்குப் புதிய சக்தி உண்டாகும். இரத்தம் சுத்தமாகும். மூளை கூர்மையுறும். பிணிகள் விலகும். புதுப் பிணிகள் வாராமல் அகலும். பரமன் அருள் நம் மேற்படிந்து பயன் மிக்கூட்டும். காலம் கடந்து நீராடுவதால் முழுப் பயன் பெற இயலாது.

அருட் சட்டத்தில் விடியல் நீராட்டம் முதன்மை யானது. இவ்வொன்று அமைந்துவிட்டால் மற்றவை ஒவ்வொன்றும் தானுகக் கைகூடும் என அண்ணலார் கூறுவர்.

2. வெந்நீர் வேண்டாம்

குடிக்கவோ குளிக்கவோ' எக்காரணம் கொண்டும் வெந்நீரைப் பயன்படுத்த லாகாது.

இயற்கையாக உள்ள தண்ணீரிலிருக்கும் உயிர்ச்சத்து உடம்புக்கு இனியது. செயற்கையில் காய்ச்சுவதும் வேறு பொருள் சேர்ப்பதும் தீதாகும். காய்ச்சுகையில் தண்ணீரில் உள்ள உயிர்ச் சத்து சிதையும். அச்சமுற்ருல், இறைவன் அருள் அதில் படிவது போல, சிறிது திருநீறிட்டுப் பயன்படுத்தலாம். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போதும் வெந்நீரைப் பயன்படுத்தலாகாது. எண்ணெயைக் காய்ச்சுவதும் கூடாது. மழை தண்ணீராகப் பொழிவதால் உயிர்கட்கு வாழ்வமைகிறது. கடல் தண்ணீராக அமைந்துள்ளதால் எண்ணற்ற உயிர்கள் அதன்கண் வாழ்கின்றன. பயிர் வகைகளும் தாவரங்களும் தண்ணீரால் வாழ்வும் வளர்ச்சியும் பெறுகின்றன. கோயில்களில் மூர்த்திகட்குத் தண்ணீரையே அபிஷேகிக்கின்றனர். இவற்றை யெல்லாம் நன்கு உணர்ந்து தண்ணீரையே பயன்படுத்த வேண்டும் என அண்ணலார் கட்டளையிட்டனர்.

வெந்நீரால் கொப்பளித்தல், ஒத்தடம் கொடுத்தல் முதலியன கூடாது. நோயுற்ற காலத்தும் மகப்பேறு காலத்தும் தண்ணீரையே உபயோகித்தல் வேண்டும்.

3. வழிபாடு

அதிகாலை நீராடி முடிந்ததும், விநாயகர் கோயிலுக்குச் சென்று, மும்முறை வலம் வந்து, மனமுருகி வழிபட்டு வணங்க வேண்டும். எந்த மதத்தினராயினும் தத்தமக்குரிய வழக்கப்படி வழிபாடு செய்யலாம். வழிபாடு முடிந்தபின் தண்ணீரில் சிறிது திருநீறும் துளசியும் இட்ட தீர்த்தம் உள்ளுக்குப் பருகவேண்டும். இதனுல் உடல் நலமும், உளநலமும், அருள் நலமும் உண்டாகும்,

4. ஒருவனே தெய்வம்

உலகெலாம் படைத்துக் காக்கும் ஒரு பரம்பொருளைப் பல மதத்தினர் பல உருவங்களில் பல திருப்பெயரால் வழிபட்டுப் பயன் அடைகின்றனர். ஆனால் பரம்பொருள் ஒருவரே என்ற தீர்மானமான எண்ணம் கொள்ளவேண்டும். எந்த மதத்தினரையும், எந்த மதத்தினர் வழிபடும் தெய்வத் திருவுருவத்தையும் திருப்பெயரையும் தாழ்வாக எண்ணுதல் பேசுதல் கூடாது.

மரக்கறி உணவு

அருட்சட்டம் மேற்கொள்வோர் தூய்மையான மரக்கறி உணவையே புசிக்கவேண்டும். மாமிச உணவை அடியோடு தவிர்க்க வேண்டும். சைவ நல்லுணவே சத்வ குணத்தை உண்டாக்கும்; சன்மார்க்கத்தில் கூட்டுவித்து, தெய்வ நலம் வளரச் செய்யும்.

மாமிச உணவு அருந்திப் பழகினோர் அருட்சட்டம் ஏற்க நேர்ந்தால், சட்டத்திற்கு வந்தபின் சைவ உணவே கொள்ள வேண்டும். அசைவ உணவை வெறுத்து, சைவ உணவையே ஏற்கும் பழக்கத்தை ஆண்டவன் திருவருள் கூட்டிவைக்கும். மனம் உருகிப் பிரார்த்தித்தால் நிச்சயமாக அருள் துணை கிடைக்கும்.

5. பஞ்ச மாபாதகம் தவிர்த்தல்

கொலை, காமம், பொய், திருடு, கள் குடித்தல் எனும் பஞ்ச மாபாதகங்களையும் தவிர்த்தல் வேண்டும். எத்தகைய உயிர்க் கொலையும் செய்தல் ஆகாது. பசி நீக்குதற்கும் எளிய, இன்றியமையாததன சுத்த சைவ உணவையே கொள்ளவேண்டும். வேறெந்த வகையிலும் செடி கொடிகளையும் துணித்தல் கூடாது. விஷ ஜந்துக்களையும் கொல்லுதல் கூடாது.

பொய் பேசுதல், கள் குடித்தல், சூதாடுதல், திருடுதல், புகை பிடித்தல், புகையிலை கஞ்சா அபின் முதலான போதைப் பொருள்களை உபயோகித்தல், பொல்லாரோடு உறவாடுதல்—இவற்றை அடியோடு தவிர்த்தல் வேண்டும்.

இல்லறத்தவரும் இம்மை மறுமை நலம் எய்தி உய்யவேண்டும் என அண்ணலார் அருட்சட்டம் வகுத்தளித்துள்ளார். இல்லறத்தார்க்குரிய இச்சை இருப்பினும், இறையருள் நாடி இறைஞ்சி வந்தால், இறைவன் திருவடி யிச்சை தவிர ஏனைய எல்லா இச்சைகளும் திருவருளால் அகன்றேகும்.

6. மருந்து அருந்தாமை

எந்நோய் வரினும், எத்துயர் வரினும், எத்தகைய சிக்கல் ஏற்படினும், ஒரு மருத்துவரையோ, ஒரு மனிதரையோ தஞ்சம் என்று அடையாது, எல்லாம் வல்ல இறைவனையே தஞ்சம் எனப் பற்றி, உறுதியாக நின்று உயர் பயன் பெறவேண்டும்.

நாம் செய்த வினைப்பயனால் நாம் இவ்வுடம்புடன் பிறந்துள்ளோம். நம் வினை தீர்ந்தால் பிறகு நாம் ஒரு நொடியும் இருக்கமாட்டோம். நம்முடைய வினைப்பயனே நமக்கு நோயாக வருகின்றது. வினையை மூன்று வகையாகப் பிரித்துக் கூறுவர் ஆன்றோர். அவற்றுள் ஒன்று குவிந்துள்ள முன்வினை (சஞ்சிதம்) இது குருநாதன் திருவருளால் எரிக்கப்படுகிறது. மற்றொன்று வருவினை (ஆகாமியம்) இது அடியார்களைச் சூழாமல் குரு அருள் தடுத்துவிடுகிறது. மற்றொன்று அனுபவிக்க உள்ள வினை (பிராரப்தம்). அவ்வினைப்பயனை அனுபவித்துத் தீர்ப்பதுவே சரியான வழியாகும். அதனைத் தடுக்க முயல்வது நன்றன்று. தடுக்க முயன்றால் அது ஒன்றுக்குப் பலவாக வளர்ந்து அடுத்த பிறவியில் நம்மை அணுகி வாட்டுவது நிச்சயம்.

இனி பிறவா முத்தி நிலையை அடையவேண்டும் என்பது சட்டத்தின் குறிக்கோள் ஆதலால், அண்ணலார் இவ்வாறு சட்டத்தை வகுத்துள்ளனர்.

ஒரு பிணியைத் தவிர்க்க உட்கொளும் மருந்து அப்பிணியை நீக்காமலும் போகலாம். அல்லது பிறிதொரு பிணியினை உண்டாக்கவும் கூடும்.

இயற்கை நெறி மாறாமல் அருள் வாழ்வாற்றினால் நோயே வராது. அதற்கு மாறாக வாழ்வாற்றியதால் வரும் நோய்கள் மருந்தருந்தினாலும் தீரா. வைத்தியநாதன் என இறைவனுக்குப் பெயர் சூட்டி வழிபடும் நாமே வைத்தியம் செய்ய வேறொரு மருத்துவனை நாடுவது அறியாமையே ஆகும். வைத்தியனாலும் மருந்தினாலும் நோய் நீங்குமென்றால், வைத்தியனையும் மருந்துகளையும் படைத்த வள்ளலான இறைவனால் அந்நோயை நீக்க இயலாதா என்று சிந்தித்தல் வேண்டும்.

தீரா நோய் எனும் பிறவி நோயையும் தீர்த்தருளவல்ல இறைவன் ஆரா நல்லமுதாகி அகம் புறமும் இருந்து காத்தருளும் அருமையை அறிந்த பின்பும், நோயினை நீக்க ஒரு மருந்தையும் மருத்துவனையும் நாடுவதென்றால் இவ்வறியாமையை நீக்க யாரால் இயலும்? இறையருள்தான் அவர்களைத் திருத்தி ஆளவேண்டும் என அண்ணலார் அருளுவர்.

அருள் கோரும் நல்லார்வம் உண்டாகும்வரை மருந்துக் கலந்து நிற்பார். அருளும் முழு நம்பிக்கை உற்றதும் மருந்தைப் பற்றி அணுவளவும் சிந்திக்கமாட்டார். அருளை அடரப் பெறுவதற்குத் துணை புரியவரும் நோயை அகற்ற உன்னி அருளை மறந்து, மாய மருந்துகளை நாடுதல் அறிவுடைமையாகுமோ என்பர் அண்ணலார்.

உடம்பிலுறு நோயினை நீக்கும் சக்தி உடம்புக்குள் உள்ளதென்று அறிஞர் பலரும் ஆராய்ந்து தெளிவடைந்து செப்புகின்றனர். உடம்பை உயிருக்களித்து, உடம்பினுக்குள்ளே கோயில் கொண்டு உறையும் இறைவன், உடம்பின் ஒவ்வோர் அணுவினுளும் ஒளிர்ந்து, உறுநோய் அனைத்தையும் தீர்த்து உதவி புரிவான் என்பது திண்ணம் என அண்ணலார் அருளுவர்.

இறைவனிடம் உறுதியிருந்தால் மருந்தையும் மருத்துவனையும் நாடமாட்டார்கள். இறைவன் அருள் துணைகொண்டே எவ்விதப் பிணிகளையும் எவ்வித இன்னல்களையும், எத்தகைய சிக்கல்களையும் எளிதில் நீக்கிக்கொண்டு இன்பவாழ்வாற்றுவர். இறைதிருவருளில் திளைத்து உய்வுறுவர். வீட்டினிலும் ஊரினிலும் அவர் பெருமை விளக்கமுறும். அவருடைய ஒப்பற்ற உறுதியைக் கண்டு விண்ணவரும் வியந்து வாழ்த்துவர்.

7. பிணி வந்தால் செய்யவேண்டியவை

நோயுற்றபோது காலை மாலை இருவேளையும் பச்சை நீரில் மூழ்கித் திருநீறு பூசி, திருநீறும் துளசியும் இட்ட தீர்த்தம் அருந்தி, மனமுருகி இறையருளை நாடி அவனருள் துணையால் நோய் நீக்கம் பெற்றுப் பயனடைய வேண்டும். நோயுள்ள இடத்தில் திருவருளை நாடித் திருநீறு பூசலாம். தீர்த்தத்தில் திருநீற்றைக் கரைத்துத் தடவலாம். விநாயகர் திருக்கோயிலை வலம் வரலாம். நோயுற்றோரால் வலம்வர இயலாவிடின், அவருக்காக மற்றொருவர் பக்தியுடன் வலம் புரிந்து திருநீறு கொண்டுவந்து கொடுக்கலாம்.

விஷம் தீண்டிவிட்டால் உடனே நீராடித் திருநீறு அணிந்து தீர்த்தம் பருகவேண்டும். விஷம் தீண்டிய இடத்தில் திருநீறு பூச வேண்டும். விஷ ஜந்துக்களைக் கொல்லக்கூடாது.

வெட்டுரணம் ஏற்பட்டால், திருநீற்றைப் பயன்படுத்தி நலம் பெறலாம்.

மகப்பேறு காலத்தும் மருந்து எதுவும் பயன்படுத்தலாகாது. குழந்தை பிறந்தவுடனே தாய்க்கும் சேய்க்கும் தண்ணீராட்டித் திருநீறு பூசுவித்துத் தீர்த்தமும் தருதல் வேண்டும்.

தாயும் சேயும் நாள்தோறும் பச்சைநீரில் மூழ்கித் திருநீறும் தீர்த்தமும் கொள்ளுதல் வேண்டும். உடையவன்றன் திரு நாமத்தை உளமுருகிப் போற்றி உயர் பயன் பெறவேண்டும்.

தாய்க்கும் சேய்க்கும் நீராட்டுவிப்போர் முதலில் நீராடிப் பின்னர் அவர்கட்கு நீராட்டுவிக்க வேண்டும். தாய்க்கும் சேய்க் குப் திருநீறும் தீர்த்தமும் தந்த பின் சாத தீர்த்தம் (நீராகாரம்) தரவேண்டும். வேறு மருந்தோ, பத்தியமோ எதுவும் தேவை யில்லை. பசியின் நிலைமையறிந்து, உணவைப் பக்குவமாய், அள வோடு, முறையோடு தருதல் வேண்டும். சிசுவிற்கு செவ்வெண் ணெய், விளக்கெண்ணெய் முதலியன எதுவும் தரல் ஆகாது. இறைவன் நினைவுடன் அருள் திருநீறணிவித்து அருள் தீர்த்தம் சிறிது பருகுவித்தால் போதுமானது.

அச்சம் சிறிதுமின்றி அருட்சட்டம் மேற்கொள்ளும் அடியவர்க் குப் பிணியேதும் வாராது. அப்படி வரினும் இறைவனின் தூய பொற்சரணம் துணையென்ன உறுதியாகப் பற்றிப் போற்றின் பிணி யகலும்; விஷம் அகலும்; ரணம் குணமாகும்; நலிவனைத்தும் நீங்கி நலம் உண்டாகும். வினை பலவும் நீங்கி வியனருள் பெறலாம். இறைவன் திருவருள் அவரை அழகாக அற்புதமாக ஆளும் அருமையைக் கண்டு அமரரும் போற்றுவர்.

நம்போல் உயிரை நாடாமை

உலகிற் பிறந்துள்ள நாம் செம்மையாக வாழவேண்டுமானால், ஒருவர்க்கொருவரின் துணை புரிந்துகொள்ள வேண்டும். பெற்றார் உற்றார் ஊரார் ஆசிரியர் முதலியோரால் இகபர நலங்கள் எய்த வேண்டியவர்களா யுள்ளோம். ஆனால், நமக்கு முட்டுப்பாடான நிலை நேருங்கால் நம்மைப் போன்ற மனிதர்களை நம்மைக் காக்கும் கர்த்தர்கள் என நத்தி அவர்களை மகிழ்விப்பதிற் காலம் போக்க லாகாது. நமக்கு இன்ப துன்பங்கள் இறையருளால் உண்டா கின்றன. நமக்கு எத்தகைய சூழ்நிலை ஏற்படினும், நம் போன்ற உயிரை நாடாமல், இறையருளையே நாடிப் போற்றி நலம் பெற்று உய்தல்வேண்டும் என அருளினர் அண்ணலார்.

8. ஜோதிடம், மாந்த்ரிகம் தவிர்த்தல்

வைத்தியம், ஜோதிடம், மாந்த்ரிகம் இவைகளை நம்பி ஏமாறுமல், மருந்து, மணி, மந்த்ரம் முதலியன மருவாமல், 'எல்லாம் வல்ல கடவுளே கதி' என்ற பரிபூர்ண நம்பிக்கையோடு,

தளராத நெஞ்சத்துடன் இறைவன் திருவருள் நாடி, அனைத்து இடுக்கண்களையும் வென்று நற்பயன் பெறவேண்டும்.

9. பிரார்த்தனை செய்துகொள்ளாமை

இந்தத் தீது அகன்றால், இந்த நன்மை கைகூடினால், இன்னது செய்கின்றேன் என்று தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கத்தைக் கைவிட வேண்டும். எப்பொருளும் நமக்கருளி, எப்பொழுதும் நமைப் பேணும் இறைவன் நம்மிட மிருந்து எப்பொருளை எதிர்பார்க்கின்றான் என்றால், ஈடிணையில்லாத அன்பொன்றையே என உணரலாம். உண்மையன்பொன்றால் இறையருள் பெற்று உயர் செயல் புரிந்தோர் எண்ணிலராவர்.

எது பெற விரும்பினும் இறைவனிடம் கேட்டுப் பெறலாம். எதனை அவனுக்கு அர்ப்பணம் செய்ய எண்ணினும் செய்யலாம். இது புரிந்தால் இது தருவேன் என எண்ணுதல் அறியாமையாகும். ஆதலால், பிரார்த்தனை செய்துகொள்ளல் கூடாது என்றும், முன் செய்து கொண்ட பிரார்த்தனைகளைப் பூர்த்தி செயலாம் என்றும், மேலும் பிரார்த்தனை செய்து கொள்ளலாகாது என்றும் இறைவன் திருவடியே தஞ்சம் எனப் பற்றி உய்வது நன்றென்றும் அண்ணலார் அருளியுள்ளனர்.

10. வெள்ளி விரதம்

சட்ட நெறியில் விரதம் மிக்க அவசியமாகும். திட்டமுடன் விரதமிருப்போரின் உடம்பிலுள்ள பிணிகள் தீர்ந்து போகும். உள்ளம் தெளிவுற்று உயிர் உரம் பெற்றோங்கும். உறுபசி பொறுக்கும் ஒருவன் உலகில் நேரும் துன்பம் எதையும் பொறுத் துப் பிறர்க்குணவிட்டு உயர்நிலையெய்திச் சுகிப்பான். எத் தனையோ மண்டலங்கள் அண்ணலார் உணவின்றி இருந் துள்ளார்கள்.

அருட்சட்ட அடியார்கள் வெள்ளிக்கிழமை தோறும் ஒரு வேளை யாவது உணவைக் குறைத்துக்கொண்டு, விரதம் இருந்து பயில வேண்டும் எனச் சுவாமிகள் அருளியுள்ளார்கள். பகல் ஒரு வேளை உணவு கொண்டு, இரவில் பலகாரமோ, அல்லது பால் பழமோ அருந்தி விரதம் இருக்கலாம். பூர்ண உபவாசமாக ஏதும் அருந்தாது இறைவன் திருவடி தியானத்தோடு இருந்து, மறுநாள் காலை பாரணை செய்தால் முழுப்பயன் பெறலாம். இயலாதவர்கள் ஒருவேளை பலகாரமோ பால்பழமோ அருந்தி விரதம் இருக்கலாம்.

சைவர்களும் வைணவர்களும் வெள்ளிக்கிழமையை விரத நாளாகக் கொண்டுள்ளனர். இஸ்லாமியரும் கிறித்தவர்களும் கூட வெள்ளிக்கிழமையைச் சிறந்த நாளாகக் கருதுகின்றனர். ஆதலால் வெள்ளிக்கிழமையை, விரதநாளாக அண்ணலார் குறித்துள்ளனர்.

சட்ட நெறியில் தேர்ச்சியுற்ற அடியவர்களுக்கு அவரவர்களின் பக்குவத்திற்கேற்ற வகையில் பல திறமான விரதங்களை நிட்டை மூலமோ, கனவு மூலமோ அருட்குறிப்பால் உணர்த்தி, கடைப்பிடிக்கச் செய்து, கடைப்பிடிப்போர்க்கு உறுதுணையாயிருந்து ஊக்கமளித்துப் பேணி வருகின்றனர்.

இறைவன் திருநாமத்தோடு ஒன்றுதல்

இறைவனின் அருள் திருநாமங்கள் பலவற்றுள் ஒன்றை இதயத்திற்கொண்டு முறையோடு நாள்தோறும் இடையீடின்றி ஓதிக்கொண்டிருத்தல் வேண்டும். எண்ணம் அதனோடுறி இணைதல் வேண்டும். எச்செயலைச் செய்தாலும் எண்ணம் இறைவன் திருநாமத்தோடு இணைந்திருந்தால், அச்சம் அகன்றோடும்; அருட்பண்பு மிகுந்தோங்கும்; அமைதி தோன்றும்; இவ்வுலகிற் பெறத்தக்கன வேறெதுவும் இல்லையெனும் நிறைவுண்டாக்கும்; நிச்சயமாய் இறைவனடி சேர்ந்திடலாம் எனும் நம்பிக்கையும் உண்டாகும்.

இறைவன் அருள் திருநாமம் குறையனைத்தும் தீர்த்தருளி நலம் அனைத்தும் கூட்டுவிக்கும்; எவ்வுயிர்க்கும் பேரின்ப வாழ்வை அருளும்; எங்கெங்கும் மேவி வினையெலாம் நீக்கும்; ஒவ்வோர் அணுவுள்ளும் படர்ந்து, ஆசைகளை அகற்றி, அன்பொளியுண்டாக்கும்; பேரின்ப மயமாக்கும்.

11. ஞான நிட்டை

நாள்தோறும் இறைவன் திருவருளை வேண்டி, எந்தப் பிற எண்ணமும் இன்றி, அமைதியாக அமர்ந்து, அருள் நிட்டை பேணி, ஆனந்தம் எய்தப் பழக வேண்டும் என அண்ணலார் அருளியுள்ளனர்.

நாள் முழுவதும் உடல் வருந்த உழைப்பவர்களும், மனம், அறிவு இவைகொண்டு உழைப்பவர்களும், தம் செயல்களை மறந்து துயில் நாடி உறங்கலால், தினமும் புத்துணர்ச்சி கொண்டெழுந்து செயல்புரிவதைக் காண்கிறோம். மனம், வாக்கு, காயம் இவை

செயலின்றி அடங்குவதால் பயன் தெரிகிறது. மனத்தில் பலவித மான எண்ணங்கள் இருப்பதால் அமைதி கிடைப்பதில்லை. அனைத் தையும் மறந்திடில் எவ்வித அல்லலுமின்றி அமைதி கிடைக்கிறது. இவ்வுண்மையை உணர்த்தவே இறைவன் தினமும் உயிர்கட்கு உறக்கத்தை அருளுகின்றான்.

மனம் அறியாமையோடொன்றி உறங்குவதால் சக்தி மிகக் குறைகிறது. மனம் ஞானத்தோடொன்றி அடங்கினால் சக்தி வளர்ச்சியடைகிறது. மனம், வார்த்தை, செயல் அடங்கி ஞான முறுதல் நிட்டையென்றும், ஞானநிட்டையால் பிறவிப் பிணி நீங்குகிறதென்றும் மேலோர் கண்டனர்.

அருட்சட்ட அடியவர் நிட்டை பேணல் அவசியம் என அண்ணலார் அருளியுள்ளனர். இருட்படலம் விலகவும், ஞான வொளி வளரவும், இன்பநிலை மேவவும், பொருள் நலமும் அருள் நலமும் புவியின்மிசை யெய்தவும் புனித நிட்டை துணை புரியும் என்றனர்.

அருட்சட்ட அனுட்டானத்திற் சிறந்த அடியவர் சிலரைத் தேர்ந்தெடுத்து, நிட்டையிலமர்ந்து அருள்நலமெய்தும்படி அருளி யுள்ளனர். அருட்சட்டம் மேற்கொள்வோர் படிப்படியாக மற்ற திட்டங்களைக் கையாண்டு, முடிவாக அருள் நிட்டை மேற் கொள்ளவேண்டும் எனப் பணித்துள்ளனர். அருட்சட்ட அனுட்டானம் நித்திய நிட்டையின்றிப் பூர்ணம் ஆகாது. அருட் சட்டத்தை நன்றே அனுட்டிப்பதற்கும் முழுப் பயன் எய்துதற்கும் அருள் நிட்டை இன்றியமையாத் துணையாய் இருப்பதை அனு பவத்தில் உணர்ந்த அடியார்கள், அருள் நிட்டையை மிக மிகப் போற்றி அனுட்டித்து உய்வடைகின்றனர்.

அமரும் நேரம்

ஒவ்வொரு நாளும் அதிகாலை நீராடி முடிந்ததுமோ, இரவில் துயில்கொளற்கு முன்போ உடையவன் திருவடியை உள்ளத் துன்னிக் கண்மூடிச் செயல் அடங்கி அமர்ந்திருந்தால், எவ் வுயிர்க்கும் நலம் பயக்கும் இறைவனருள் பயனளிக்கும்; முத்தி யெனும் பிறவிப் பயன் அடையும் வழி இதுவே என்றார் அண்ணலார்.

அமரும் முறை

நிட்டை செய்ய இவ்வாறுதான் அமரவேண்டும் என்று அண்ணலார் அடியவர்க்கு நேரே காட்டிக் கொடுத்துள்ளனர்.

தனியாக இருக்கக்கூடிய இடம் நிட்டைக்குப் பொருத்தமான தாகும்.

நோக்கியமர் திசை குறித்தோ, பயன்படுத்தும் ஆசனம் குறித்தோ, அண்ணலார் ஏதும் நுவன்றிலர். ஆக்கமெலாம் அருளும் குருபரனுர் திருவுருவை உள்ளத்துன்னிச் சப்பணமிட்டு நிமிர்ந்துட்கார்ந்து, கண்மூடிச் செயலடங்கி மூல மந்திரமான ஓங்காரத்தோடொன்றியவண்ணம் அடியவர்கள் நிட்டை புரிந்து, அருட்பயனெய்தி வருகின்றனர்.

நிட்டையமரும் அடியார்கள் நிலமீது உட்காராமல், பலகையின்மீதோ, ஓலைத் தடுக்கின்மீதோ, துணி மடிப்பின்மீதோ, அமர்ந்து நிட்டை புரிதல் வேண்டும்; அவ்வாறன்றி, நிலத்தில் அமர்ந்து நிட்டை புரிந்தால், பயன் நிலத்திற்கேகுமென உணர்தல் வேண்டும்.

முறையிடும் முறை

நிட்டையமரும் இத்தருணமே இறைவனிடத்தில் வேண்டுவன வேண்டுதற்குத் தக்க தருணமாகும். சட்டத்தை அனுட்டிக்கும் போதுறும் இடர்கள், இயலாமைகள், வாழ்க்கையில் எய்தும் குறைகள் முதலியவற்றை இறைவனிடம் இயம்பி வழி கோரலாம். இவ்வாறு விண்ணப்பிப்பதைத் 'தாக்கல் செய்வது' என அண்ணலார் அருளுவர். எத்தகைய சிக்கல் ஏற்படினும் இறைவனிடம் விண்ணப்பித்தால், அதிசயிக்கத்தக்க முறையில் அச்சிக்கலை நீக்கி அருள் புரிவான்.

தூங்காமல் தூங்கும் நிலை

அருள் நிட்டையில் ஆழ்ந்து நிலைக்கையில் திருவருள் துணையால் தூங்காமல் தூங்கும் உயர்நிலையெய்தும். சுவாமிகளால் பழக்கப்பெற்றவர்க்கேயன்றி மற்ற சிறந்த அடியவர்க்கும் உடையவன் கருணையால் இந்நிலை வாய்க்கும். இது உடற்கும் உயிருக்கும் இன்பம் தரும் ஒப்பற்ற உயர் நிலையாகும்.

காட்சி

இந்நிலை கலையும் போது சிலஅருட்காட்சிகள் தோன்றும். எண்ணியமர் திருவுருவம் எதிர் தோன்றி அப்போதைக்கேற்ற அறிவுரை சொல்வது போலவோ, புண்ணியராம் ஒரு பெரியார் பேசுவது போலவோ தோன்றும். மற்றும் பல சிறந்த அருட்காட்சிகளும் தோன்றும். அடுத்தபடி நடப்பனவாய் அவை

யிருப்பதை அனுபவத்தால் அறியலாம். தடுத்தாண்ட இறைவன் அருள்வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்வதைத் தெளிவாக உணரலாம். உள்ளத் தெளிவும், அருளியல் ஞானமும், உலகியல் ஞானமும் அருளும் உயர்நிட்டை இதுவே.

இரண்டு மணி நேரம் நிட்டையமர்தல் வேண்டும் என அண்ணலார் அருளியுள்ளனர். முதலில் அதிற் கால் பங்கு நேரம் இனிதே அமர முயலுதல் வேண்டும். பின்னர், நாளுக்கு நாள் நேரத்தைக் கூட்டிவர வேண்டும். எப்போதும் இடைவிடாது நிட்டையில் நிலைத்தல் உயர்முத்தி நிலையாகும்.

நாள்தோறும் மூன்று முறை நிட்டையிலமர்ந்து பேரின்பம் துய்க்கும் அடியார்கள் பலர் உள்ளனர். ஆன்றமைந்த அடியவர் பலரை வரிசையாய் அமர்த்தி, அவர்கள் சிரமேல் திருக்கரம் சூட்டி, அவர்கள் உயர்நிலையெய்தும்படி அண்ணலார் அருள் புரிவார்கள், யான், எனதுஎன்பதை மறந்து அவ்வடியர்கள் தனிப்பரமானந்தம் துய்ப்பார்கள். அவ்வாறு அண்ணல் திருக்கரத்தால் தீண்டப் பெற்ற அடியவர் பலர் இன்றும் உள்ளனர். அவர்கள் இன்றும் அருள் நிட்டையில் தோய்ந்து பேரின்பம் எய்துகின்றனர். புதிதாகச் சட்டநெறியிற் சேரும் அடியவர்களும் நிட்டை பேணினல் திருவருள் பெறுவது உறுதியாகும்.

நிட்டையில் நிலைப்பதால் சக்தியொன்றும் வீணுக அழிவதில்லை; சக்தி மிக நிறையும்; பிணி நீங்கும். தீராத பல பிணிகளை நிட்டை மூலம் தீர்க்க முடியும் என்று இன்றைய விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். உடம்பு தூய்மையுறும்; சித்தி பல எய்தும்; இறைவனிடம் நேயம் கூடும்; அருள் ஞானம் வளர்ச்சியுறும்; ஆனந்த நிலை வாய்க்கும் என அண்ணலார் அருளியுள்ளனர்.

12. இறந்தவர்க்கு இரங்காமை

சட்ட அனுட்டானம் உள்ளவர்களில் யாருக்காவது உலகில் உலாவும் காலம் முடிந்து உயிர் அடக்கமாக நேர்ந்தால் அதற்காக வருந்தல் ஆகாது. நாம் முன் செய்த வினையை நுகர்ந்து முடிக்கும் படி இறைவன் நமக்கு உடம்பு கொடுத்துள்ளான். வினை முடிந்த வுடனே ஒரு கணமும் தாமதியாமல் உலக வாழ்வு முடிகின்றது. ஒவ்வோருயிர்க்கும் எவ்வெக் காலத்தில் எது செயல் நன்று என உணர்ந்து அருள் புரியும் இறைவன் திருவுளப்படி யாவும் நடைபெறுகின்றன.

இவ்வுண்மையை உணராமல், இறந்தவர்க்காக வருந்துதல் இறைவனின் பெருங்கருணையையும், அறநேர்மையையும் மறத்தல் போலாகும்.

சமாதி

உடையவன் ஆக்கிய உடலைத் தீயிட்டுச் சிதைக்க அண்ணலார் விரும்பவில்லை. உலகமாதாவின் திருவயிற்றின்கண் அடக்கம் செய்யவேண்டும் என்பது அண்ணலார் கருத்து. அவ்வாறே தம் அன்னையார் அடக்கமான போதும் சமாதி செய்வித்தனர். முன்னர் இப்பழக்கமில்லாத குடும்பத்தைச் சேர்ந்தவர் அருட்சட்டம் ஏற்றபின், அவர் அடக்கமாக நேர்ந்தால் அப்போதும் இவ்வாறே சமாதி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்ய அவர்தம் குடும்பத்தவரோ, ஊரார், உறவினரோ தடை கூறுவராயின், அவ்வமயம் அருட்சட்ட அடியவர்கள் உடனிருந்து அண்ணலின் கருத்தை அவர்கட்கு விளக்கிக் கூறி, சமாதி செய்ய ஆவன புரிந்து உதவவேண்டும்.

தவத்திற் சிறந்த அடியார்கள் உடம்பில் உயிர் அடங்கி விளங்கும். அவர்களை அடக்கம் செய்யுமிடத்தில் உலக மக்களின் துயரைத் தவிர்க்கும் தவக்கனலும், சுடர்விட்டோங்கும் மெய்ஞ் ஞானப் பொலிவும் சூழ்ந்து எல்லா உயிர்க்கும் இகபர நலங்களை ஊட்டிப் பேணும். பயன் மிகநல்கும் அத்தூய உடம்பை எரித்தல் மிகப் பாவமாகும். இவ்வுண்மையை உணர்த்தவே அண்ணலார் சமாதியை வற்புறுத்தினர். (திருவருட் பிரகாச வள்ளலாரான இராமலிங்க சுவாமிகளின் கொள்கையும் இதுவே யாகும்.)

13. அறமன்றம் அணுகாமை

உலக விவகாரங்களில் சிக்கல்கள் நேரும்போது, அறக் கடலாகிய இறைவனின் அருள்துணை நாடி, அற முடிவைப் பெற முயல வேண்டுமேயன்றி, அறமன்றம் நாடி விவகாரங்களை விபரீதமாக வளர்த்துக்கொள்ளுதல் கூடாது. இறைவனிடம் உறுதி வளர்ந்திட இவ்வழி துணைபுரியும்.

சச்சரவு செய்யும் எதிரி நம்மை மீறி, அறமன்றம் சார்ந்து அங்கு ஈர்த்தால், அச்சமயத்து உடையவன்றன் குறிப்பறிந்து சென்று, உள்ளது உரைத்தல் வேண்டும். நாம் எதிர்பாரா வகையில் பிறர் அவர்களின் விவகாரத்தில் நம்மைச் சாட்சியாகப் போட்டுக்கொண்டு அறமன்றங்களுக்கீர்த்தாலும், இதுவும் உடையவன் சம்மதம் போலும் எனச் சென்று, தீமை ஏதும் நினையாமல், நடந்தபடி கூறிவிட்டுத் திரும்பவேண்டும் என அண்ணலார் கூறுவர்.

14. உடல் பொருள் ஆவியை ஒப்படைத்து வாழ்தல்

''சட்டம்'' என்ருல் என்ன? ஒரே ஒரு வார்த்தை தான்; உடல் பொருள் ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம் என உடையவன் திருவடியில் ஒப்படைக்கவேண்டும்; அவ்வளவுதான்'' என அண்ணலார் கூறுவர். அவ்வார்த்தையைக் கேட்கும்போது மிக எளிதாய்த் தோன்றும். எல்லாப் பெருமையும் அதன்கண் உளது எனும் உண்மை அருட்சட்ட வாழ்வினிற் பின்னரே விளங்கும்.

இறைவன், உயிர்கள் உய்யும் பொருட்டு உலகமெல்லாம் உண்டாக்கி, உயிர்களுக்கு உடம்பு கொடுத்து, கருவி கரணங்கள் யாவும் கொடுத்து, ஒவ்வோர் அணுவுள்ளும் கலந்து நின்று உயர்வுறுமாறு ஊக்கிப் புனிதமாக்கி வளர்த்துக் காத்து எச் செயலும் செய்விக்கின்ருன். மடம் படும் உயிரை முத்தி நிலைக்கு உயர்த்துகின்ருன். ஆதலால், உடம்பு பொருள் உயிர் அனைத்தும் இறைவனுக்கே உரியனவாகும்.

இந்த உண்மையை உணராதவர்கள் வினைப் பொதியைச் சுமக்கின்றனர். இவ்வுண்மையை உணர்ந்து அனைத்தையும் இறைவனிடம் ஒப்புவிப்போர் வினை நீங்கிப் பொலிவார்கள். மடமையற்று, ஞானமுற்று, துன்பமற்று, இன்ப மயமாய் விளங்குவார்கள்.

அவர்கள் 'எனக்கொன்றும் வேண்டாம் நின் பதமல்லாமல் வேறு' என்ற இதயத்தோடும், எண்ணம், மொழி, செயல் அனைத்தையும் இறைவன் அருளில் தோய்வித்து, பிறப்பு இறப்பைக் கடந்த பெருநிலையில் நிலைத்து, நினைப்பினில் நீங்காத அவன் செய்ந்நன்றி யாவும் நினைந்து உருகிய வண்ணம் திகழ்வார்கள்.

எவ்வுயிர் பாலும் இரங்கும் கருணை மயமாகி, எவ்வுயிர்க்கும் உறுதுயர் தவிர்க்கும் இதயமுள்ளோராய், எவ்வுயிர்க்கும் நல்லனவே செய்ய இனிதெண்ணும் நாட்டமுள்ளோராய், எவ்வுயிரும் இன்பமுற எஞ்ஞான்றும் தவம் செய்வோராய் இலங்குவார்கள்.

உடல் பொருள் ஆவியை இறைவற்கு ஒப்புவித்தல் சட்டம் என உரைத்தார் அண்ணல்; உடல் பொருள் ஆவியை இறைவற்கு ஒப்புவித்தேன் என உரைத்துத் தொடங்குதல் சட்டம்; உடல் பொருள் ஆவியை இறைவற்கு ஒப்புவிக்கும் செயலை நிறை

வேற்றல் சட்டம்; உடல் பொருள் ஆவியை முழுதும் ஒப்படைத்த போது சட்டம் முழுமையாகும்.

ஜாதிமத பேதமில்லை; எவரும் சட்டம் ஏற்கலாம்

எந்நாட்டை, எவ்வினத்தை, எம்மதத்தைச் சார்ந்தவரா யினும், எம்மொழியைப் பேசுபவராயினும், கற்றவரும் கல்லாரும், செல்வர்களும் வறிஞர்களும், இளைஞர்களும் முதியவரும் சேய் களும், எவ்வகைப் பழக்கமுடையவரும் சற்றும் அச்சமின்றி சட்டத்தை ஏற்கலாம். நல்வகையான பழக்கம் அவர்க்கு இனி தெய்தும்; நலி தீரும்; நலங்கள் உண்டாகும்.

வான்பொருள் வழி காட்டும்

நல்வினைப் பயனுல் துணிந்து சட்டம் ஏற்றிட முன் வருவோரை உடையவன் கருணை ஒவ்வொரு கணமும் இனிது காத்தருளும்; பன்னருந் துணையாய்ப் பக்கமிருந்து வழி காட்டிச் செல்லும்; உறுதியையும் அமைதியையும் வழங்கிப் பேணும்; புன்செயல் எல்லாம் நீக்கி, இடர்ப்பாடெல்லாம் தவிர்த்துப் புனிதம் செய்து, ஒளித்திரு மேனியும், நிறைந்த செல்வமும், மிகுந்த புகழும், விளக்கமும நல்கி, உயர் நிலையில் விளங்கச் செய்யும்.

15. சட்டம் மீறினுல் தண்டனை

அடியவர்கள் சட்ட நெறியினின்று தவறுகையில் அறி வுறுத்தித் திருத்தியும், இத்தகைய மறதியும், ஊக்கமின்மையும் கூடாதென உணர்த்தியும், இவ்வாறு நடவாமல் இவ்வாறு நடந்தது தீதெனக் காட்டியும் நம்மைத் தண்டித்துத் திருத்துதல் இறைவனின் அருட்செயலேயாகும்.

திடீரென்று கையைத் திருப்ப முடியாமலோ விரலை மடக்க இயலாமலோ இருக்கும்; வயிற்றிற் கோளாறு தோன்றும்; தேள் கொட்டும்; மனிதரால் இடையூறு நேரும். இப்படி யேதேனும் நேர்ந்தால், நம் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கோரி வணங்கி னுல் தண்டனை நீங்கி நலமுண்டாகும்.

அவனியிற் சிறந்தது அருட்சட்டம்

எல்லாரும் எளிது ஏற்கத் தக்கதுவாய், பொருட் செல வில்லாத ஒன்ருய், நல்லாற்றில் நடத்துவதாய், தவறிடின்

தண்டனை தந்து திருத்துவதாய், எல்லா நலமும் ஈந்தருளும் இந்த அருட்சட்டம் பூவுலகில் மிகச் சிறந்த ஒன்றாகும்.

சட்டத்தின் பயன்

16. வேலைக்கு ஏற்ற கூலி

உயிர்கள் யாவும் சட்டம் முழுவதையும் பேணி முழுப்பயன் பெற வேண்டும் என்பதே அண்ணலின் திருவுள்ளம் ஆகும். அவ்வாறு நடக்க இயலாவண்ணம் உயிர்களின் வினை தடுப்பதை அண்ணலார் அறிவர். உயிர்கள் தம்மால் முடிந்தவரை சட்டத்தின் அம்சங்களைப் பின்பற்றி நடந்து வந்தால், உடையவன்பால் உறுதியுடன் உருகி முறையிட்டு வந்தால், ஒவ்வொன்றாகச் சட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் அநுட்டித்து முழுப் பயன்பெற உடையவன் திருவருள் கூட்டுவிக்கும் என அருளுவர். உழைப்புக் கேற்ற ஊதியம் உண்டு எனப் புன்சிரிப்போடும் கூறியருள்வர்.

தூய நல்வாழ்வு

அருட்சட்ட நெறியைப் பூர்ண அன்புடன், தளராத உறுதியுடன் அநுட்டிக்கும் அடியவர்கள் முதலில் அவர் குடும்பத்திற்கு ஒளி விளக்காய், ஊருக்கு மணி விளக்காய், நாடு முழுதுக்கும் அருட்ஜோதியாய் மிளிர்ந்து நலம் புரிவார்கள். பீடுபெற நனி பற்று மற்றோர்க்கும் பெருந்துணையாய், எல்லோர்க்கும் இனியவராய், விளக்கம் கோரின் நலம் அருளும் விழுப்பொருளாய், வழி விளக்கும் மாண்பினராய், வாழ்வில் சற்றேனும் அச்சமும் ஐயமுமின்றிச் சாந்தமுற்றோராய், உடையவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்த உளத்தோராய், இனி பிறவா முத்தி நிலையை எய்தினோராய் விளங்குவர்.

உடையவனிடம் உறுதி

அருட்சட்ட அநுட்டானத்திற் சிறந்தவர் எய்தும் மூன்றாவது பெரும் பயன் உடையவனிடம் தளராத உறுதியாகும். இது வேறெந்த வகையிலும் பெற இயலாத அரும்பெரும் பொருளாகும்.

"உலகம் வணங்கும்படி உயர்த்தி வைத்தாலும், உடனே இகழும்படி தாழ்த்திவிட்டாலும், கலகப்படுத்தி யென்றன் சிரசைக் கொய்தாலும், கையும் காலும் வெட்டித் தறித்தாலும் உனை விடேன்" என்று அண்ணலார் அருளியுள்ள அருட்பாடலின் கருத்துக்கேற்ப, ஒப்பற்ற உறுதி உண்டாகிவிடும்.

இப்பொருள் சொந்தமாகிவிட்டால், இகத்தினிலோ, பரத்தினிலோ எய்தத்தக்க மெய்ப்பொருள் வேறென்ன உளது? இப்பொருளே புனிதமான மெய்ப்பொருளை உணர்த்தி, அருள் வழி காட்டி, உண்மையின்பம் அடையச் செய்யும்.

வழி காட்டும வளமை

நாணமுற்றுத் தலைகுனிந்து நடக்க அறியாத மணமகளின் கரத்தை மகிழ்வுடன் பற்றிப் புதுமணப் பந்தருட் போந்து மணந்து மகிழ்வு மிக நல்கும் மணமகன் போல், உடையவன் நம கையை அருளாற் பற்றி அருள் மணம் புரிந்து சத்தியமாகப் பேரின்ப முத்தியை ஈந்தருளுவன்.

சட்டமெனும் செந்நெறியாகத் திகழ்பவனும், சட்டத்தைத் தந்தருளும் குருபரனும் சட்ட நெறியிற் செல்லச் சக்தியளித்து வழி காட்டுபவனும், சட்டநெறி நடப்பவர்க்கு முழுப்பயனையும் தந்தருள்பவனும் இறைவனேயாவன். எல்லா உயிரும் பேரின்பம் எய்த வேண்டும் என்ற மாபெருங் கருணையால் இத்தனையும் அவன் செய்தருளுகின்றான்.

சட்ட அனுபவம் ரகசியம்

அருட்சட்ட அடியவர் எவரும் பிறர் தம்மைக் கண்டு பெருமை கொள்ளத் தாம் சட்டத்திற் சேர்ந்திருப்பதாக வெளிப் படுத்திக் கொள்ளக்கூடாது. தமக்கெய்தும் இடர்களையும், தருணம் அறிந்து இறைவன் அவ்விடர் நீக்கிக் கரையேற்றுவதை யும் யாரிடமும் இயம்பலாகாது.

நாம் மேன்மையடையும் வண்ணம் வழி காட்டிச் செல்லும் செம்மையையும் மனமுறக் கொண்டு இனிது போற்றுதல் வேண்டுமேயன்றி, மற்றெவர்பாலும் உரைக்கலாகாது. இப்படிக் கூறிக்கொள்வதனால், தற்பெருமை தோன்றவும் வளர வும் கூடும்; உடையவன் கணக்கை அறிந்து நடக்கும் வழி தடைப் படவும் கூடும். அப்படி ஏற்படின் அடியவர் தவிப்பரே என்று அஞ்சிய அண்ணல் சட்ட அனுபவங்களை எண்ணிக் கர்வப்படுத லும், பிறரிடத்து இயம்பலும் கூடாது என்றனர்.

ஒவ்வோர் கணத்தும் சட்ட அடியார்கள் உடையவனால் எய்தும் நன்மையையும், இன்பத்தையும் எவ்வுரை கொண்டு இயம்பலாகும்? எம்மொழி கொண்டு எழுத இயலும்? அடியவர் அடையும் பேரானந்தத்தை அடியவர் உணர்வார்; ஆண்டவர் அறிவார்.

முதல் சீடனைத் தேர்ந்தெடுத்தல்

ஆந்திர நன்னாட்டில், வேங்கடத்திற்கு வடக்கில் நாற் காதத் தொலைவில் நந்தி கொண்ட என்னும் பதிக்கண் செல்க, என உடையவன் தண்ணருள் உணர்த்த, அருள் வடிவாயொளிரும் அண்ணலார் அப்பதி அடைந்தனர்.

விநாயகர் உபாசனை உடைய மூப்பக்கவுண்டலு என்பவர் உண்மை, அன்பு, ஒழுக்கம், பக்தி—இவற்றிற் சிறந்து அவ்வூரில் வாழ்வாற்றி வந்தனர். உழவுத் தொழிலை மேற்கொண்டிருந்த அவர், முத்திப் பேற்றில் நாட்டம் மிக்குடையராய், உடையவன் அருட்குருவாய்த் தோன்றி உயர் தவ நெறியை உபதேசித் தருளும் நன்னாளைப் பேரார்வமோடும் எதிர்பார்த்திருந்தனர்.

ஒரு நாள் விடியற்காலை அவர் ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தபோது விநாயகப் பெருமான் அவர் கனவில் தோன்றி, அண்ணலைக் காட்டி, "இந்த நற்றவப் பெரியார் உருவில் நாம் போந்து உன்னை ஆட்கொள்வோம்" எனக் கூறி யருளினர். மூப்பக்கவுண்டலு தாம் அடைய உள்ள பேற்றினை எண்ணி பெருமகிழ்வுறுகையில்,

"தக்க பக்குவம் சால் அடியர் இங்குள்ளார்; சார்க" எனத் தண்ணருள் உணர்த்த, அண்ணலார் அங்கு வந்து கருணை வடிவில் காட்சியருளினர். கண் விழித்ததும் எதிரினில் நிற்கும் அண்ண லாரைக் கண்ட தொண்டனர் ஆனந்தக் கடலில் அமிழ்ந்து கரை காணாதவராயினர். உரையறியாமல் வாய் குழற, விழிகளில் நீர் துளிப்ப, குறைகள் யாவும் அகல, பரமானந்தம் உள்ளத்தில் நிறைய, தொண்டனர் எழுந்து துள்ளினர்; ஆடினர்; பாடினர்; தொழுதார்; அண்ணலார் அடிமலரிற் பணிந்தார்.

பல பிறவிகளிற் செய்த பெருந்தவம் குருவடிவிற் போந்துளது. ஐங்கரனர் உரைத்தவண்ணம் நமக்கு ஞானவிழிப்பருளக் குரு நாதர் எழுந்தருளியுள்ளார் என மகிழ்ந்து, அண்ணலாரின் கருணைத் திருமேனியையும், சாந்தமார் விழிகளையும் கண்டு, அவ் விழி மலர்கள் பொழியும் அருள் தேனை அருந்தினர். இருவரும் அடைந்த இன்பம் இயம்பரிதாகும்.

வெயில் தாங்காப் புழுப்போல் வருந்தி ஞான குருநாதரை ஆர்வமுடன் நாடியிருந்த சீடர், அண்ணலைக் கயிற்றுக் கட்டிலில் அமர்த்தி மு முறை வலம் வந்து, எனைக் கடைத்தேற்றும் இனிய

நல் தெய்வம் தாங்களே என்று பணிந்தேத்தி, இவ்வுடம்பினைக் கோயிலாக்கி, உள்ளமர்ந்து, தவவொளி வளர்த்து, புடம்படு பொன்னுக்கிப் பேரின்பப் பொலிவருள வேண்டும்; உடல் பொருள் ஆவி அனைத்தும் தேவரீருடைய திருவடி மலர்களில் அர்ப்பணித்துவிட்டேன் எனத் தொழுதுருகிப் போற்றினர்.

அவருடைய இதய பக்குவத்தை உணர்ந்த அண்ணல் அவரது முன்னை வினைகளின் முடிச்சையறுத்து, மேலும் நண்ணிடா திருக்க அருட்சட்ட நெறியை உபதேசித்தருளினர். அண்ண லாருக்குத் தக்கவொரு நற்சீடர் கிடைத்துவிட்டார் என அமரர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

அடியவர் விரும்பிய வண்ணம் அண்ணலார் அங்கு தங்கி மறு நாள் அதிகாலை தம் அருள் திருக்கரங்களால் சித நீராட்டி, எடுத்த சட்டத்தை என்றும் விடாமல் இனிது போற்றி உயர் நிலை பலவும் எய்திக் கருணை மயமாகுக என்று அருளாசி அருளினர்.

அடியவரை நிட்டையில் அமர்த்தி, தம் அருள் திருக்கரத்தை அவர் சிரமேற் சூட்டி, இன்னருளாற்றல் உள்ளும் புறமும் மேவுக எனக் கருணை செய்து, பிறவிப் பிணி சூழாவண்ணம் அருள் புரிந்து, பேரின்ப மயமாக்கினர்.

அருளண்ணல் கருணையினுல் அடியவர் பேரானந்த நிலையில் திளைத்தெழுந்து பெருமான் மலரடி போற்றித் துதித்தனர்.

அண்ணலார் தமிழ்நாடடைதல்

இவ்வண்ணம் அடியவர்க்கு அருள்புரிந்த அண்ணலார் இன் னும் எவ்விடத்தில் எவ்வடியார்க்கு அருள் புரிய வேண்டும் என்னும் எண்ணத்தோடும், இலக்கணச் சிறப்பும், அன்பெனும் பண்பும், அருள் திருமணமும் எங்கணும் பரப்பும் செந்தமிழ் நாட்டில் வந்து சேர்ந்தனர்.

அடியவர் ஆர்வம்

அண்ணலை முன்னே தரிசித்த அடியவர்கள் குருநாதர் தரிசனம் எப்போது கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர். அவரைக் கண்டறியாத அன்பர்கள் இறைவன் குருவாய்த் தோன்றி அருள் புரியும் நன்னுள் எந்நாளோ என உருகி வேண்டிய வண்ணம் இருந்தனர்.

7. அருளுலாச் செய்தலும், அடியயரைத் தேர்தலும்

மேன்மையெல்லாம் தரவல்ல மெய்ஞ்ஞான அண்ணலார் ஆன்மப்பசி மிகுந்திருந்த அடியவர்பால், அன்புருவாய்ச் சென்று, அருளமுதூட்டினர். ஏதும் சங்கற்பமின்றி அருள் செலுத்திச் சென்றவழி சென்றனர். தமக்கென்னச் சகமெதுவும் விழைந்திலர். தமக்கு அணுவளவும் பொருள் சேர்த்துக்கொள்ள விழைந்திலர். பிறர்க்கென்னவே என்றும் வாழ்ந்தனர். இன்றும் அருந்தவம் புரிகின்றனர்.

அண்ணலாரின் அருளியல்பு

அண்ணலாரின் அருள் மணம் கமழும் தெய்வீகத் தோற்றமும், ஞான ஒளி வீசும் திருவிழிகளும், தவத்தின் ஆற்றலைக் காட்டும் திருமுடியும், நீண்ட தாடியும், உயர்நெறி கூறும் திருவாயும், ஏனுனக்கு இந்த வாட்டம்? என அபயம் அளிக்கும் திருக்கரங்களும், தம்மை நாடிவரும் உயிர்களைக் கரையேற்றும் திருவடிகளும் அனைவரையும் தம்பால் ஈர்க்கும் தன்மையுடையன.

அருளண்ணல் இயக்கம் நடனமிடு மயிலின் இயக்கம் எனத் தோன்றும். சேய்மையினில் தோன்றும்போதே அண்ணலின் தோற்றம் ஆனந்தமளிக்கும். அண்மையிற் பழகுங்கால் சிறு குழந்தையின் குணம் தோன்றும். "நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்ற குறட்பாவிற்கு இலக்கணமாய் அமைந்தவர் சுவாமிகள்.

உயிர்க்கு உறுதி பயக்கும் அருள் உபதேசங்களை உரைக்கும்போது எளிய மக்களும் புரிந்துகொள்ளும்படி அமைந்து திகழும். குயிலின் குரலும் குழைவும் பொருந்திய மொழிகள் திருவாசகத்திற்கு ஒப்பாகும். சுவாமிகளைக் கண்டவுடனேயே அடியார் பெருமக்கள் அகமகிழ்வு கொள்வர். திருவார்த்தைகளைக் கேட்டதுமே உளம் குழைவர். சுவாமிகளின் திருவடிகளைத் தீண்டியதும் அன்புருவமாவர். பார்த்தாலும், நினைத்தாலும் என்றும் தித்திக்கும் இன்சுவைக் கரும்பு நம் சுவாமிகள் என்பதை அடியவர் உணர்வர். கருணையே உருவான அண்ணல் நல்லாசிரியர்க்குரிய இலக்கணம் யாவும் அமைந்தவராவர். இன்றும் அவர்தம் இன்னருட் குணங்களை எண்ணி எண்ணி நெக்குருகுவர் இன்னடியார்கள்.

இக்குருநாதர் மூலம் பயன்பெற வேண்டும் என்றே காத்துக் கிடக்கும் உயிர்களைக் கரையேற்ற வந்த அண்ணலார் யாரிட

மிருந்தும் எத்தகைய கைம்மாறும் எதிர்பார்த்தாரல்லர். அவசியமின்றிப் பணம் செலவழித்த லாகாது என்று அடியார் களுக்கு அறிவுரை கூறுவர். காணிக்கை என்று எந்த வகையிலும் பணம் வாங்குவது என்பது சுவாமிகளுக்குச் சற்றும் பிடிக்காத செயல் என்பதை உடன் பழகிய அடியார்கள் அறிவர். (இன்றும் சுவாமிகள் திருக்கோயிலில் உண்டி கிடையாது.)

அண்ணலார் அடியவர் இல்லங்களில் தங்கி அருள் பாவிக்கும் காலங்களில் அடியார்களின் உள்ளன்பை நோக்குவாரே யன்றி, பிற ஆடம்பரங்களை அணுவளவும் விரும்ப மாட்டார். மீறி அடியார்கள் ஆடம்பரம் செய்தால், அண்ணலார் சினம் கொள் வார். குணமெனும் குன்றேறி நின்ருர் வெகுளி தாங்க லரிது என்ற உண்மையை அடியவர் உணர்வார்கள்.

அண்ணலார் அணிந்திருக்கும் வேட்டியும் மேல் வேட்டியும் தவிர, மற்றோர் ஜதை பொட்டணத்தில் வைத்திருப்பார். வேறு பொருள் ஏதும் அதனுள் இரா. அண்ணலார் ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குப் புறப்படுங்கால், அப்பொட்டணத்தைக் கொணர்ந்து தம் எதிரே அவிழ்த்து உதறும்படி கூறுவார்: "சாமி சொத்தை யாராவது எடுத்துக் கொண்டார்களோ" என்று பார்க் கிறது என வேடிக்கையாகக் கூறுவார். உண்மையென்னவென்ருல், அன்பு மிகுதியால் அடியார்கள் பணம் ஏதேனும் வைத்துவிடப் போகின்ருர்களே என்பதுதான். பணத்தாசை பிடித்து அலையும் இக்கலி காலத்தில், சல்லிக்காசு வேண்டாமலும், அடியார் களுக்குச் சல்லிக்காசு செலவின்றியும், உயர்ந்த நெறியைக் கூறி யருளி, உயர்துணையாயிருந்து பேணும் ஒரு குருநாதரைக் காண முடியுமா?

கடையேற்றும் உறுதி

உயர்சட்ட நெறியை உபதேசித்து உயிர்களைக் கரையேற்ற வந்த குருநாதர், அருட்சட்ட நெறியை மேற்கொண்டவர் யாவ ராயினும், இறவாப் பெருநிலை அடைவது உறுதி என்று திண்ண மாகக் கூறுவர். தேர் வடத்தை நாம் கையிற் பிடித்துவிட்டால், உள்ளே அமர்ந்திருக்கும் உடையவன் தேரை 'இழு, இழு' என்று ஊக்கம் ஊட்டிச் செலுத்தி விரைவில் கரை சேர்த்துவிடுவான் என்பது சுவாமிகளின் கருத்து.

சுவாமிகள் சிறு சிறு வெண் கூழாங்கற்களை வைத்துக்கொண்டு ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றிக் கொண்டே இருப் பார். இரவில் தம் தலையணையின் கீழ் வைத்திருப்பார். நீராடச்

செல்லும் நேரங்களில் அருகுள்ள அடியார்களிடம் அக்கற்களைக் கொடுத்து 'பத்திரம், நழுவிவிடப் போகிறது; இது தான் சாமிக்குச் சொத்து' என்று கூறுவார். நெருக்கமான ஓரடியார் ஒருநாள் சுவாமிகளிடம் சென்று, மெதுவாக, 'சுவாமீ! எதற்காக இந்த மணிகளை எண்ணி எண்ணிக் கொட்டுகிறீர்கள்?' என்று கேட்டார். எப்போதும் போல் புன்னகை தவழும் முகத்துடன், 'ஓ! இதுவா! இதைக் கொண்டுதான் உடையவன் கணக்கெடுக்குது' என்று அண்ணலார் கூறியருளினார். அது என்ன கணக்கோ? அதை எப்படிச் சுவாமிகள் அறிந்துகொள்ளுகின்றார்களோ? உடைய வனுக்கும் சுவாமிகளுக்கும்தான் தெரியும்.

சுவாமிகள் உடன் இருந்துவிட்டால், அடியார்களுக்கு எவ்வித அச்சமும் தோன்றுவதில்லை. வாழ்வில் எத்தகைய சிக்கல் ஏற்பட்டாலும் எவ்விதப் பிணி வந்தாலும் அணுவளவும் அஞ்சாது இருப்பர். வருகின்ற துன்பங்களை ஒரு நொடியில் தீர்த்து வைக்கும் பெருங்கருணையாளர் குருநாதர் ஆதலால்; 'தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை' என்ற குறட்பாவுக்கேற்றபடி அடியவர்கள் அணுவும் அச்சமின்றி இருப்பார்கள்.

அருட்சட்டத்தில் தேர்ச்சியுற்ற அடியவர்கள் சாமி விழி யெதிரில் இல்லாவிட்டாலும், தம் உள்ளக் கமலத்தில் அமர்ந்து அருளாட்சி புரிவதை உணர்வர். அவர்கள் தமக்கோ பிறர்க்கோ ஏதேனும் இடுக்கண் நேரிட்டால், ஒரு சிறிதும் அஞ்சாமல் 'உடையவன் இருக்கப் பயமேன்?' என்று உறுதியாக இருந்து துன்பம் நீங்கி நலம் பெறுவர். அனைவரும் அதிசயிப்பர்.

சுவாமிகள் அடியார்களுக்கு அருளுபதேசம் செய்யும்போது "நீங்கள் தவமான அருட்சட்ட நெறியை மேற்கொண்டு ஒழுகி வந்தால், பவமான பிறவிப்பிணி தீர்ந்து இறவாப் பெருநிலை அடைவது உறுதி. இதில் ஐயம் சிறிதும் இல்லை' என்று அருள் செய்வார்கள்.

அற்புத அருளாட்சி

நாட்டின் பல பாகங்களிலும் பக்குவமுற்ற அடியார்களை ஆட்கொண்ட வண்ணம் திருவுலாச் செய்து வந்த அண்ணல் இவ் வுலகில் நடத்தும் அருளாட்சியின் சிறப்பு ஏட்டிலும் எழுத்திலும் அடங்குவதன்று. விரைந்து அருள் புரியும் விநாயகப் பெரு மானின் ஆலயங்கள் பலவற்றைப் புதிதாகக் கட்டச் செய்தனர். பல விநாயகர் திருக்கோயில்களைப் பழுது பார்த்துச் செப்பு

னிட்டுத் திருப்பணி செய்வித்தனர். அத்திருக்கோயில்கள் மூலம் உலக மக்கள் அருள் பெற்று உய்ய வழி வகுத்தனர்.

சுவாமிகளால் நடைபெற்ற அருள் அற்புதங்கள் எண்ணற்றன வாகும். அவற்றுள் வெளிக்குத் தெரிந்தன சிலவே. அவை அனைத்தையும் கூறுவதென்றால் அதுவும் இயலாத தாகும். ஓரளவு விரிவாகக் கூறப்பெற்றுள்ள 'வழிகாட்டும் வான்பொருள்', 'கருணை மிகு வள்ளல் அருள் நிறை சரிதம்' முதலிய நூல்களைப் படித்தும், அடியவர்கள் மூலம் கேட்டறிந்தும் இன்புறலாகும். சுவாமிகள் சென்று அடியவர்களை ஆட்கொண்டு அருள் புரிந்த ஒருசில ஊர்களை மட்டும் இப்போது காண்போம்.

மதுரை

தான தர்மங்கள் மிகுந்த செட்டி நாட்டில் நுழைந்த அண்ணலார் கண்டரமாணிக்கம் கீழச்சீவல்பட்டி முதலிய ஊர் களில் தங்கி அடியவர்க்கு அருள்பாலித்து வரும் செய்தி கேட்ட மதுரை மக்கள், செட்டி நாடு சென்று அண்ணலாரைக் கண்டு போற்றி மதுரை மாநகர்க்கு எழுந்தளுருமாறு கேட்டுக் கொண்டனர்.

உடையவன் திருவுளம் இருந்தபடி உணர்ந்த அண்ணலார் மதுரை சேர்ந்து பரிபூர்ணர் திருக்கோயில், அங்கயற்கண்ணி ஆலயம், அடியவர் இல்லம் முதலிய இடங்களில் அமர்ந்து ஆர்வ மிக்க அடியவர்க்கு அருளுபதேசங்கள் அருளினர். விநாயகர் பெருமையை விளக்கிக் கூறினர்.

இருடியர் பட்டி

அண்ணலார் மதுரை வந்திருப்பதறிந்த இருடியர் பட்டி மக்கள் மதுரை சென்று தரிசித்து, தாம் ஏற்கனவே புரிந்த பிழை யினை மன்னிக்குமாறு பிரார்த்தித்து இரெட்டியப்பட்டிக்கு எழுந் தருளுமாறு வேண்டினர். அண்ணலார் எழுந்தருளி அருள் பாலித்தனர். அவ்வூர் மக்கள் அண்ணலார்க்குத் திருவடிப் பூசை ஆற்றினர். திருமண மாகாதிருந்த அம்பலம் பொன்னையாப் பிள்ளைக்குத் திருமணம் விரைவில் நடக்க அருள் புரிந்தனர்.

மற்றொரு சமயம் திருக்குற்றாலம் சென்றிருந்த அண்ணலார் அடியவர் பலருடன் இரெட்டியப்பட்டிக்குச் சென்று சேர்ந்தனர். அவ்வூர் மக்கள் அன்புடன் வரவேற்று உபசரித்துப் போற்றினர். அண்ணலார் அருளால் பல அற்புதங்கள் நடைபெறுவதையும்,

அண்ணலாரின் அருட்புகழ் உலகெலாம் பரவுவதையும் உணர்ந்த அவ்வூர் மக்கள் அண்ணலாருக்கு ஒரு உத்ஸவம் நடத்த எண்ணினர். 11-4-1902ல் அண்ணலார்க்குக் காலேயில் அபிடேக ஆராதனை நடத்தி, மாலேயில் சப்பரத்தில் எழுந்தருளச்செய்து, மலர்மாலே சூட்டி அலங்காரம் செய்வித்து, திருவீதி உலா நடத்தினர். அடியவர் அன்பர்கள் அரஹரா என ஒலி முழக்கி ஆனந்தித்தனர். அவரவர் இல்லங்களின் முன்னுறும் போது மலர் மாலே சூட்டியும், பனிநீர் தெளித்தும், தேங்காய் உடைத்தும் கனிவ்கை படைத்தும், விநியோகங்கள் வழங்கி நுகர்வித்தும், மண்டகப் படிகள் நடத்தியும், குரவையிட்டுப் போற்றியும், கும்மி கோலாட்டம் நடத்தியும் குதூகலித்துப் போற்றினர்.

வீதி உலா முடிந்தபின் அண்ணலாரைச் சப்பரத்தினின்று இல்லிற் சேர்த்து ஆசனத்திற் குலவச் செய்து வலம்வந்து பணிந்தேத்தி வணங்கித் துதித்து மகிழ்ந்தனர்.

திருச்சிராப்பள்ளி

சிறப்பு மிகும் காவிரியின் தென்கரையில் அமைந்த திருச்சிராப்பள்ளி இயற்கை அன்னேயின் திருவோலக்கம் எனத் திகழும். உச்சிப்பிள்ளேயார் கோயிலும், தாயுமானேசுவரர் திருக்கோயிலும் அந்நகருக்கு உயிர்நாடியாக விளங்கும். அவ்வூரில் வாழும் மக்கள் பக்தியிற் சிறந்து பொலிவர். அவர்களுள் அன்புசால் அண்ணுசாமி என்பவரின் உள்ளப் பக்குவத்தை அறிந்த சுவாமிகள் திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளினுர்கள்.

சுவாமிகளின் பெருமையை உணர்ந்த திருச்சிராப்பள்ளி மக்கள் நகரை அலங்காரம் செய்து, பூர்ணகும்பம் ஏந்தி, உண்மையன்போடும் அண்ணலாரை வரவேற்றனர். சுவாமிகள் அடியவர் புடை சூழ உச்சிப் பிள்ளேயார் கோவிலுக்கு எழுந்தருளினுர்கள். ஆங்கு அருள் நிட்டையில் ஆழ்ந்தார்கள் உடன்சென்றவர்கள் சுவாமிகளின் தெய்விகப் பொலிவைக் கண்டு வியந்தனர். அவ்வூரில் சுவாமிகள் தங்கிப் பல அற்புதங்களே ஆற்றினர். அருளுபதேசங்களே அருளினர். புதிய பல அடியவர்கள் அருட்சட்ட நெறியை மேற்கொண்டு அரும்பயன் எய்தினர்.

திருச்சிராப்பள்ளி மக்கள் சுவாமிகளுக்கு உத்ஸவம் நடத்த எண்ணினர். அண்ணலாரின் இசைவு பெற்று அனேத்து ஆயத்தங்களும் செய்தனர். சோழவள நாட்டின் செல்வச் சிறப்புக்கேற்ப உத்ஸவம் 31-12-1906 ல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 20-12-1907-ல் மீண்டும் ஒரு முறை திருச்சிராப்பள்ளி மக்கள் அண்ணலார்க்குச் சிறப்பான முறையில் அருளுலா நடத்தினர்,

அண்மையில் உள்ள திருவரங்க மக்களும் சுவாமிகளுக்கு உத்ஸவம் நடத்த எண்ணினர். அண்ணலாரின் அருட் சம்மதத் தின்பேரில் திருவரங்கத்தில் 6-2-1908-ல் அண்ணலாருக்கு அருளுலா ஆனந்தமாக நிகழ்ந்தது.

சுவாமிகள் மீண்டும் திருச்சிராப்பள்ளிக்குப் பலமுறை எழுந் தருளி அடியார்களை ஆட்கொண்டு அருள்பாலித்திருக்கின்றனர்கள்.

மேல் இலந்தைக்குளம்

அடியார்களைத் தெருட்டி அருட் சட்டப் பெருமையை இவ்வவனிக் குணர்த்தும் பொருட்டு அருளுலாச் செய்து வந்த சுவாமிகள் தமிழ்நாடெங்கணும் சென்றனரேனும், முக்கியமான சில இடங்களுக்கு அடிக்கடி சென்று அருள்பாலித்துள்ளனர். அத்தகைய இடங்களில் இன்றும் அவர்தம் அருந்தவ மகிமை விளங்கி வருவது கண்கூடு.

அவ்வாறு பேறு பெற்ற இடங்களில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மேல் இலந்தைக்குளம் எனும் ஊரும் ஒன்றாகும். இவ்வூருக்குச் சுவாமிகள் மக்களின் அன்பழைப்பிற் கிணங்கி, முதன்முதல் எழுந்தருளினர்கள்.

ஊர்மக்கள் பேராவலுடன் ஊரை அலங்கரித்து, தம் உள்ளப் பண்பிற்கேற்ப உயர் உபசாரம் புரிந்து வரவேற்றனர். மங்கல வாத்தியம் முழங்க, பூர்ணகும்பம் ஏந்தி, 'குருநாதர் வாழ்க' எனும் வாழ்த்தொலியோடு வரவேற்றனர். யானை இரு பக்கமும் கவரி வீசியது. வானம் நுண் துளி தூவி வரவேற்றது.

விநாயகர் கோயிலுக்குச் சென்று, அங்கு ஆராதனைகள் முடிந்தபின், சுவாமிகள் சீனிவாசப் பிள்ளை அவர்களின் இல்லம் சேர்ந்தனர். அருட்சட்டச் செந்நெறியின் சிறப்பினை அன்பர் கட்கு விளக்கிக் கூறினர். இதுவரை இத்தகைய உயர்நெறியை அறியாமற் போனோமே என வருந்திய பலர் இச்செந்நெறியைக் கைக்கொண்டு சீடராயினர்.

பல ஆண்டுகள் சென்றன. மீண்டும் சுவாமிகள் 1908-ஆம் ஆண்டில் இவ்வூருக்கு எழுந்தருளினர்கள். இரெட்டியப்பட்டி, திருச்சி, ஸ்ரீரங்கம் முதலிய ஊர்களில் சிறப்பாகச் சுவாமிகளுக்கு உத்ஸவம் நடைபெற்றதை அறிந்த இலந்தைக் குளமக்கள், தங்கள் ஊரிலும் ஓர் உத்ஸவம் நடத்த உன்னி, அண்ணலிடம் அனுமதி பெற்றனர்.

ஊரை நனி அலங்கரித்து விழாவிற்கான ஆயத்தம் செய் தனர். 31-7-1908-ல் மேடைமீது சுவாமிகளை நாற்காலியில்

அமர்த்தி, திருமஞ்சனம் புரிந்து, புத்தாடை சாத்தி. மலர்மாலைகள் சூட்டி, நைவேத்தியம் செய்தனர். அடியவர் அன்பர்கட்கு உண்மையன்போடும் அமுது படைத்து உபசரித்தனர். குழுமியிருந்த மக்கள் கடைத்தேறும் வண்ணம் அண்ணலார் அருளுரை கூறி ஆனந்தமுட்டினர்.

மாலையில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற சப்பரத்தில் சுவாமிகளை எழுந்தருளுவித்து, வீதியுலா நடத்தினர். திருமஞ்சனம் செய்யும்போதும், வீதியுலா நடைபெறும் போதும், சுவாமிகளின் தோற்றம் தெய்வத் திருத்தோற்றமாக இலங்கும். சற்றேனும் அசையாது அருள்மயமாக அமர்ந்திருப்பர். அவ்வருட்பொலிவை நேரில் கண்டவர்களே உணர்வர்.

இத்திருத்தலம் பன்முறை சுவாமிகளின் திருவடிகளைத் தாங்கும் பேறு பெற்றுள்ளது. இவண் வாழும் மக்கள் சுவாமிகளின் பெருவிழாவை ஒன்பது முறை காணும் பெரும்பேறு பெற்றனர். ஒவ்வொரு உத்ஸவமும், ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததாய், வெவ்வேறு சிறப்புடையதாய், அருட்சட்டத் திருநெறியின் பெருமையை அவனி மக்கள் உணர வாய்ப்பு அளிப்பதாய் அமைந்தன.

இவ்வூரின்கண் சுவாமிகள் பல சித்துக்களை ஆற்றியுள்ளனர். உடல்நலம் இல்லாத குழந்தைக்குச் சுவாமிகள் நீறுபூசி நலம் அருளியதாகக் குழந்தையின் தந்தையார் நிட்டையில் அருட்காட்சி கண்டனர். உடனே குழந்தையின் நோய் நீங்கியது. பசியோடு உறங்கிய குழந்தைகட்குப் பழம் அளித்துப் பசி போக்கினர். விடியல் பூசைக்குப்பழம் மலர் முதலியன வாங்கி வைக்க மறந்து, சுவாமிகள் நினைவிலேயே தோய்ந்திருந்த அடியார்களுக்குப் பூசை நேரத்தில் பூ பழம் முதலியன தந்து அருள் புரிந்துள்ளனர். தண்ணீரால் விளக்கெரித்துள்ளனர். இவற்றிற்கெல்லாம் சிகரமாக, இவ்வூரில் இரண்டரை ஆண்டு நிர்விகற்பத்தில் அமர்ந்து, தவத்தின் பெருமையை உலகுக்குணர்த்தியுள்ளனர்.

இவ்வூரையடுத்த அவனுப்பேரியில் உள்ள அருட்சட்ட அடியார் உயர்திரு. காந்திமதிநாதம் பிள்ளை அவர்கள், 12-8-1912 திங்கட்கிழமையன்றும் 11-9-1914 வெள்ளிக்கிழமை யன்றும் சுவாமிகட்குச் சிறப்பான முறையில் உத்ஸவம் நடத்தி அன்பர் குழாத்திற்கு அகமகிழ்வூட்டிப் பேரின்பமெய்தி யுள்ளனர்.

பாளையங்கோட்டை அன்பர்கள் சுவாமிகட்குத் திருவடிப் பூசை சிறப்பான முறையில் நடத்தி அருட்பேறு பெற்றுள்ளனர்.

வேளூர்

காவிரியாறு வளம் பல கொழிக்கும் சோழ நன்னாட்டில், செழித்தோங்கும் தஞ்சை மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டிக் கடுத்த 'வேளூர்' என்ற தலமும் சுவாமிகளின் பெருமையை விளக்கும் தலமாகும். இவ்வூரில் வாழ்ந்த திருமிகு. கமலப்பிள்ளை -ஞானம்பாள் எனும் தம்பதிகள், சுவாமிகள் கும்பகோணத்தில் ஆற்றும் அற்புதங்களைக் கேள்வியுற்று, தம்மூருக்கும் சுவாமிகளை அழைக்க விரும்பிக் கும்பகோணம் சென்றனர். அண்ணலாரின் இசைவுபெற்று, அளவற்ற மகிழ்வோடு, தமதில்லத்தை மணமனை போல் அலங்கரித்துப் பூர்ணகும்பம் தாங்கிச் சுவாமிகளை வரவேற்றனர். சுவாமிகளின் திருவடியை விளக்கிய தீர்த்தத்தைச் சிரமீது தெளித்துக்கொண்டும், உள்ளுக்குப் பருகியும் பிறவிப் பெரும் பயன் பெற்றனர்.

திரளான மக்கள் வந்து, சுவாமிகளைச் சேவித்துக் குறை தீர்ந்து நலமுற்றனர், விடம் தீர்ந்தது, பிணிகள் நீங்கின. இவ்வூரின்கண் அண்ணலார் பலமுறை எழுந்தருளிப் பற்பல அற்புதங்களை ஆற்றியுள்ளனர். கமலப்பிள்ளையும், அவர்தம் இல்லத்தரசியாரும் கொண்டிருந்த உள்ளன்பின் திறம் உணர்ந்த சுவாமிகள் பேரருள் புரிந்தார்கள். இங்கும் சில நாள் தவநிலையில் அமர்ந்து உயர்ந்த அருளனுபவத்தில் தோய்ந்து திகழ்ந்தனர். அடியவர் பலரும் அன்புடன் தரிசித்து ஆனந்தமுற்றனர்.

அண்ணலாரின் அருளாணைப்படி இன்றும் அங்கு ஆண்டு தோறும் தை மீ கடைசி வெள்ளியில் சிறப்பான விழா நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு சேவித்துத் திருவருள் பெறுகின்றனர்.

திருச்சாத்தனூர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்று 'பித்தா பிறைசூடீ' எனத் தேவாரம் பாடிப் போற்றிய திருவெண்ணெய்நல்லூருக்கு வடபால் நான்கு மைல் தொலைவில் திருச்சாத்தனூர் என்னும் திருத்தலம் உளது. பசுமை நிறைந்த வயல்களால் சூழப்பெற்ற அவ்வூர் இருடியர் ஆச்சிரமம் போல இலங்கும். அங்கு பக்தியிற் சிறந்த முத்துராம ரெட்டியார் என்பவர் செல்வ வளத்துடன் திகழ்ந்து வந்தார்.

வீராரெட்டிப்பாளையம் என்னும் ஊரில் அண்ணலாரைத் தரிசித்து வணங்கிப் போற்றி அருட்சட்டமேற்றூர். அண்ண

லாரைத் தம் ஊருக்கு எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டார். இரெட்டியாரின் இதய பக்குவத்தை உணர்ந்த அண்ணலார் திருச்சாத்தனூருக்கு எழுந்தருளி அருள் செய்துள்ளனர். பண்ணுருட்டிக்கு மேற்கில் ஆறு மைல் தொலைவிலுள்ள ஆனத்தூரில் உள்ள அடியாரான இராமலிங்கா ரெட்டியாருக்கு அருள் செய்யச் செல்லும்போது அங்கிருந்து திருச்சாத்தனூருக்குச் செல்வதுண்டு.

சுவாமிகள் திருச்சாத்தனூர்க்குச் சென்று தங்கும் போதெல்லாம் அங்கு திருவருட் பேரொளி சிறந்து விளங்கும். மங்கள வாத்தியம் முழங்கியவண்ணம் இருக்கும். சுவாமிகட்குத் திருவடிப்பூசை மிகச்சிறப்புடன் பக்தி சிரத்தையுடன் நடைபெறும். சுற்றுப்புறத்திலுள்ள அன்பர்கள் பலரும் வந்து சுவாமிகளைச் சேவித்து, அருள் உரைகளைக் கேட்டு ஆனந்த பரவசராகி, அருட் சட்டமேற்று அரும்பயன் எய்துவர்.

பேய் பிசாசு பிடித்தவர்கள் அங்கு வந்து நீராடி அண்ணலைச் சேவித்து அத்துன்பம் நீங்கியவராய், அண்ணலின் அருளாசிகள் பெற்று நல்ல முறையில் இல்லம் சேர்வர்.

அண்ணலார் அருட்சட்ட நெறியிற் சிறந்து பக்குவமுற்றவரை அழைத்துச் சென்று மாடியின்மீது வரிசையாகத் தியானத்தில் அமரச்செய்து, அவர்கள் சிரமிசை தம் வலத் திருக்கரத்தைச் சூட்டி அவர்கள் நிட்டையில் உயர்நிலை பெறுமாறு நல்லாசியருளுவர். அவர்களும் அவ்வாறே நன்று நிட்டையில் தோய்ந்து பழகி, அருள் நிலை யெய்துவர்.

அத்திருத்தலத்தில் அண்ணலார் அருளால் நடந்த அற்புதங்கள் அநேகமாகும். "இங்கு உடையவன் அருட்கொடி நாட்டப் பெற்றுள்ளது" என்று சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதற்கேற்ப 1—10—1936-ல் சுவாமிகளின் அருட்கொடி யேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. திரு. முத்துராம ரெட்டியார் அவர்கள் ஸ்ரீ அருட்கொடி சுவாமிகள் என அடியவர் அன்பரால் போற்றப் பெற்றனர்.

அவ்வருட்கொடி நீழலில் ஸ்ரீ அருட்கொடி சுவாமிகள், பிள்ளையார் குப்பம் ஸ்ரீ அருட்சக்தி அன்னையார், மழவராயநல்லூர் திரு. ஆ. நரசிம்மலு நாயுடு சுவாமிகள் ஆகியோர் அமர்ந்து சுவாமிகளைப்பற்றியும், அருட்சட்டச் செந்நெறி பற்றியும் குறிப்புகள் தர அவற்றைத் துணைகொண்டு, சுவாமிகளின் பெருங்கருணையால் 'வழிகாட்டும் வான் பொருள்' என்ற நூலை

'செந்தமிழ் விளக்க வள்ளலார்' ஆட்சிச் சொற்காவலர், திரு. கி. இராமலிங்கனர், எம். ஏ. அவர்கள் இனிது வரைந்தருளினர்.

அந்நூலைப் படித்து அருட்சட்டம் மேற்கொண்டு, அருட் பேறு பெற்றுவரும் அடியார்கள் எண்ணிலராவர்.

அவ்வூருக்குத் தெற்கில் நான்கு மைல் தொலைவில் உள்ள அருள்நகர் என்னும் இடத்தில் சுவாமிகள் திருப்பெயரால் சங்கமும், பள்ளியும், மாணவர் விடுதியும் அமைந்துள்ளன.

அடியார்களே சிறந்த உறவினர் என்பது அருட்கொடி சுவாமியின் கொள்கையாகும். அடியவர்களைப்;பார்த்துவிட்டால் அவர் அளவு கடந்த ஆனந்தமடைவார். அண்ணலார் பேசுவது போல் பேசியும் நடப்பதுபோல் நடந்து காட்டியும் அகமகிழ் விப்பார். அடியவர்கள் அருட்சட்ட நெறியிற் சிறந்து திகழ வேண்டும் என்னும் பேரார்வமுடன் பேசி ஊக்கமிக ஊட்டி யருள்வார். அவர் அடியவர்க்கு உபசரிக்கும் முறையை நோக்கி ஞல் எத்தகையவரும் வியப்புமிக உறுவர்; உளம் உருகிப் போற்றுவர். தம் தம் ஊர் சென்ற பின்பும் பலமுறை எண்ணி எண்ணி இதயம் மகிழ்ந்து பாராட்டுவர்.

அருட்கொடி சுவாமிகளுக்கு அமைந்த மனைவியாராகிய திருமதி. பங்கஜவல்லி யம்மையாரும் பர்த்தாவிற்கேற்ற பதி விரதையாகத் திகழ்ந்தனர். அவர்களுக்கிருந்த அண்ணலார் பக்தியும், பதிபக்தியும், அடியார் பக்தியும் நேரிற் கண்ட அடியார் பெருமக்களே அறிவார்கள். அம்மையார் தினந்தோறும் அதி காலை நீராடி, முன்னவனர் குருபரனர் பூஜையாற்றி, விநாயக புராணம், வழிகாட்டும் வான்பொருள் ஆகிய இரு நூல்களையும் பாராயணம் செய்து, கணவனுரை வணங்கி உபசரித்த பின்னரே ஆகாரம் அருந்துவர்.

1956-ல் திருவிடைமருதூர் அடியவரான சாமிநாத அய்யரின் தலைமையில் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அடியவர்கள் இரெட்டியப்பட்டித் திருத்தலத்திற்குச் செல்லும் முதல் பாத யாத்திரை திருச்சாத்தனூரில் தொடங்கப் பெற்றது. அப்போது அருட்கொடி சுவாமிகள் குருநாதரின் அருட்கொடியை எடுத்துக் கொடுத்து ஆசியருளிய சிறப்பும், ஆட்சிக் சொற் காவலர்—திரு. கி. இராமலிங்கனர் அவர்கள் அண்ணலார் அருள் துணை கொண்டு யாத்திரையைத் தொடங்கி வைத்த சிறப்பும், யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பி வந்த அடியார்களை அருட்கொடி சுவாமிகளும் அவர்தம் வாழ்வரசியாரும் அன்புடன் வரவேற்று, பரமனும் பார்வதியும் போல் தெய்விகப் பொலி



20—12—1907ல் திருச்சிராப்பள்ளியில் சுவாமிகளுக்கு நடந்த உத்ஸவ ஊர்வலம்

(பக்கம் 65 பார்க்க)

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருக்கோயில் (1960—1972)
அடியார் பெருமக்களால் விரிவாக்கப்பட்டு, அமைக்கப்பெற்ற
திருக்கோயிலின் ராஜ கோபுரம் (பக்கம் 75 பார்க்க)

வுடன் நின்று அருட்கொடியை ஏற்றுக்கொண்ட சிறப்பும் எண்ணி எண்ணி இன்புறற்பாலனவாம்.

பிள்ளையார் குப்பம்

திருநாவுக்கரசு நாயனர் சிவபெருமான் திருவருளால் கடலி னின்றுக ரையேறி வந்து 'ஈன்றளுமாய் எனக்கு எந்தையுமாய்' என்னும்தேவாரம் பாடிப்போற்றிய திருத்தலமாகிய திருப்பாதிரிப் புலியூரிலிருந்து ஆறு மைல் தொலைவில் பிள்ளையார் குப்பம் என்னும் திருத்தலம் திகழ்கிறது.

திருச்சாத்தனூரர் திரு. முத்துராம ரெட்டியார் அவர்கள் திரு. முத்துவீரா ரெட்டியார் அவர்களின் முதல் மனைவியாராகிய திருமதி கோகிலாம்பாள் அம்மையின் குமாரர் ஆவர். திரு. முத்து வீரா ரெட்டியார் அவர்களின் இரண்டாம் மனைவியாரான திருமதி குயிலம்மையார் அவர்கள் வடலூர் திரு. இராமலிங்க சுவாமிகள் திருவருளால் தோன்றியவர். அவர்தம் திருவயிற்றில் தோன்றிய திருமதி சொர்ணம்பாள் அம்மையார் பிள்ளையார் குப்பம் மணியம் திரு. பாபு ரெட்டியார் அவர்கள் குமாரர் திரு. வெங்கடபதி ரெட் டியார் அவர்களை மணந்துகொண்டு இல்லறம் நடத்தி வந்தனர்.

இவர் சிறு வயதிலிருந்தே தெய்விகம் மிகுந்தவராகத் திகழ்ந்து வந்தார். இவரது விளையாட்டுகளும் தெய்விகப் பொலிவுடையனவாகவே விளங்கும். பள்ளியிற் படிக்கும்போதே பாடத்தில், கணக்குகளில் சந்தேகம் வந்தால், தாம் வளர்ந்து வந்த பாக்கத்தில் உள்ள அம்மன் கோயிலிற் சென்று அம்மனைக் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொள்வார்.

இவர் தெலுங்கிற் பாகவதம், பக்த விஜயம் போன்ற நூல் களைப் படித்துப் பக்தியிற்சிறந்து விளங்கினர். தினமும் கண்ணன் பூஜை, துளசி பூஜை, கருட தரிசனம் செய்த பின்பே உணவு அருந்துவார்.

எந்தத் திருத்தலங்களுக்குச் சென்றாலும், அங்குள்ள மூர்த்தியை மனமுருகி வணங்கிப் போற்றி, பிறவி நோய் நீங்க வேண்டும் எனப் பிரார்த்திப்பார். அன்றிரவு அம்மூர்த்தி இவ்வம் மையின் கனவில் காட்சியளித்து அருள்புரிவது வழக்கம்.

தம் தமையனர் திரு. முத்துராம ரெட்டியார் வற்புறுத்தலின் பேரில் அண்ணலாரைத் தரிசித்து அருட்சட்டம் ஏற்றார். உடை யவன் திருவருளால் நம் குருநாதர் விநாயகப் பெருமானின் திரு அவதாரம் என்பதை உணர்ந்தபின் அண்ணலிடம் அதிகமான பக்தி விசுவாசத்துடன் விளங்கினர்.

அண்ணலார் பிள்ளையார் குப்பத்திற்கு அடிக்கடி எழுந்தருளி அருள்பாலித்துள்ளார். அம்மையார் விரதம் மிகப்பேணி அருள் நிலையில் உயர்ந்தார். சுவாமிகளுக்கு வாணியம்பாடியில் நடை பெற்ற உத்ஸவத்திற்குச் சென்று தரிசித்து வந்தார். அங்கு சுவாமிகளின் திருக்கரங்களால் விபூதி மூட்டை தரப் பெற்று உயர்நிலையெய்தி ஆனந்தமடைந்தார்.

இவர் ஒருவருக்கும் தெரியாமல் தினமும் மூன்று வேளை, மொத்தம் ஆறு மணி நேரம் நிட்டையில் அமர்ந்து பேரருள் பெறுவார். சுவாமிகள் இவர்களது உயர்நிலை அறிந்து 'சட்டத் திற்குச் சட்டாம்பிள்ளை' எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். அண்ணலார்க்கு இவர்கள்பால் உள்ள பெருங்கருணை அள விடற்கரியது.

அண்ணலார் அடக்கத்திற்குப் பின் இவர்கள் சில அடியவருடன் இரெட்டியப்பட்டி சென்று சேவித்து வந்தனர். இவர்களை உயர்தவ நிலையில் அமர்த்த வேண்டும் எனத் திருவுளம் கொண்ட அண்ணலார் சில அருட்குறிப்புகளை அருளினர். அதுகண்ட அன்னையார் அச்சமிக உற்றனர். செய்வது அறியாமல் தவித்தனர்.

ஒருநாள் அன்னையார் பூஜை அறையிலிருந்து வெளி வருகை யில், 'வெளிச் செல்லலாகாது' என அருளாணை பிறந்தது. அன்னையார்க்கு ஒன்றும் புரியாமல் 'குருநாதா' என நின்றனர். "நிருவிகற்ப சமாதியிற் புகு நிட்டை தந்தருள் அற்புதா" என்னும் அண்ணலார் அருட்பாடலின் திருவாக்கு செவியின்கண் அருளால் ஒலித்தது. அன்னையார் அண்ணலின் அடிமலர் போற்றி நிட்டை யில் அமர்ந்தனர்.

அண்ணலார் அன்னையாரைப் படிப்படியாகத் தவநிலையில் உயர்த்திப் பக்குவம் செய்தனர். உயர்ந்த நிர்விகற்ப சமாதியில் நாள் கணக்கில் மாதக் கணக்கில் திகழச் செய்தனர். ஒருமுறை இரண்டரை ஆண்டுக் காலம் தொடர்ந்து இருக்கச் செய்தனர். வந்து சேவித்த அடியார்களும் அன்னையாரின் உறவினரும் எய்திய அச்சமும் வருத்தமும் அளவிடற்கரிது.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்—சுடச்சுட நோற்கிற் பவர்க்கு' என்னும் பொய்யாமறைக்கேற்ப அன்னையார் சுடர்விட்டொளிரும் சொக்கத் தங்கம் போல் ஜொலித்தனர். அருட்சித்திகள் பலவும் அன்னையார்க்கு எய்தின. ஆயினும் அன்னையார் சிறிதும் வெளிக் காட்டிக்கொள்ளாமல் ஆடம்பரம் ஏதுமில்லாமல் அண்ணலார் அருளைப் போற்றிய வண்ணம் அடக் கத்துடன் திகழ்ந்தனர்.

அடியவரும் அன்பரும் கூட்டம் கூட்டமாக வந்து போற்றிக் குறைகள் தவிர்ந்து நலங்கள் மிகுந்தனர். அடியவர்கள்பால் அன்னையார்க்கிருந்த பெருங்கருணை ஏட்டிலும் எழுத்திலும்

அடங்குவதன்று. அடியவர்களைக் கண்டுவிட்டால் அவர்கள் எய்தும் மகிழ்ச்சியும், அடியவர்களுக்கு அவர்கள் புரியும் உபசாரங்களும், அவர்களுக்கு அருள் சுரந்து நல்கும் அருளாசியும் என்றும் அடியவர் இதயம் விட்டகலா.

அடியவர்கட்கு எந்நோய் வரினும், எத்துயர் வரினும் அன்னையார்க்கு ஒரு கடிதம் எழுதி அஞ்சற் பெட்டியில் சேர்த்துவிட்டால், உடனே அப்பிணியும் துயரும் போன இடம் தெரியாமல் நீங்கிவிடும். பிறகு அன்னையிடமிருந்து அருட் பிரஸாதம் வந்து சேரும்.

இப்படி அன்னையாரைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த அருட்சக்தி அன்னையார் (13-8-1980) ரௌத்திரி ஆண்டு ஆடிப்பூரத் திருநாளில் அருளடக்கமாயினர். பிள்ளையார் குப்பத்தில் அவர்கள் அடக்கமாகியுள்ள இடத்தில் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி சிறந்த முறையில் நடந்து வருகிறது. அன்னையார் அவர்கள் பூதேவியின் திருவயிற்றில் அமர்ந்து, அடியவர்க்கு அருள்பாலித்து வருகிறார்கள்.

வாணியம்பாடி

வடாற்காடு மாவட்டத்தில் இயற்கை வளம் மிகுந்திலங்கும் வாணியம்பாடி எனும் ஊரில் பக்திப் பண்பு மிகுந்த முனியப்ப செட்டியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் வியாபாரத்திற்காகத் திண்டிவனம் சென்றிருந்தார். அன்றிரவு அங்கு தங்க நேர்ந்தது. மறுநாள் அதிகாலை 4 மணிக்கு நீராடி, முன்னவனூர் கோயில் வலம் வந்து திருநீறு தீர்த்தம் அருந்தி வழிபாடு புரியும் அடியார்களைக் கண்டார். விவரம் கூறுமாறு கேட்டு, அண்ணலாரைப்பற்றியும், அருட்சட்ட நெறி பற்றியும் உணர்ந்து மகிழ்ந்தார். தாமும் அருட்சட்ட அடியாரானார்.

இவரது பழக்கவழக்கங்களையும், பக்திப் பண்பையும் குறைகள் தவிர்ந்து நலங்கள் எய்தும் சிறப்பையும் அறிந்த வாணியம்பாடி அன்பர்கள் பலர் அருட்சட்ட அடியவராயினர். அண்ணலார் திண்டிவனம், வெள்ளிமேடு பேட்டை முதலிய இடங்களில் உள்ள அடியவர்க்கு அருள் வழங்க எழுந்தருளிய போது, இவர்கள் சென்று வணங்கித் தங்களூர்க்கு எழுந்தருளுமாறு வேண்டினர். அண்ணலார் அவர்கள் அன்பை உணர்ந்து பலமுறை சென்று அருள்பாலித்துள்ளனர். அண்ணலார் சில முக்கிய அடியார்களுடன் காசி யாத்திரை சென்று திரும்புகையில், நந்தி கொண்ட எனும் ஊரில் உள்ள மூப்பக்கவுண்டலு என்னும் அடியார்க்கு அருள்பாலித்தபின், வாணியம்பாடி வந்து அங்குள்ள அடியவர்களுக்குக் கருணை புரிந்தனர்.

11-8-1922-ல் நாராயணன் செட்டியார், முனியப்பச் செட்டியார் முதலிய ஒன்பது அடியவர்கள் சேர்ந்து, அண்ணலார்க்குத் திருமஞ்சனம் நிகழ்த்தி, முத்துப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து, திருவீதியுலா நடத்தி, அடியார்களுக்குத் திருவமுதருத்தி அருட்பேறு பெற்றுள்ளனர். அவ்வூர் அடியவர் அன்பர்கள் அண்ணலாரிடம் கொண்டுள்ள பக்திப் பெருக்கையும், அடியவர்பால் கொண்டுள்ள பேரன்பையும் உணர்ந்த அண்ணலார் பெருங் கருணை பாலித்து வரலாயினர்.

உடையவன் திருவுளம் இருந்தவண்ணம் அண்ணலார் எண்ணற்ற ஊர்களுக்கு எழுந்தருளி, அருட்சட்ட நெறியைப் பரப்பியுள்ளார்கள். அடியவர் குழாத்தைத் திரட்டி, அருள் நலம் புகட்டி, இம்மை மறுமை நலங்களை அருளியுள்ளார்கள். அற்புதம் பல நிகழ்த்தியும், ஆபத்தில் அருந்துணையாய்த் தோன்றியும், வினை பிணி வறுமை முதலியன நீக்கியும், பொருள் வளத்திலும் அருள் நிலையிலும் உயர்த்தியும், பேரானந்த முத்தியெய்தும் வகையில் பக்குவப்படுத்தியும் அருள்பாலித்துள்ளார்கள். அவைகளை யெல்லாம் அறிந்துரைக்க எவராலும் இயலாது. ஆங்காங்குள்ள அனுபவம் மிக்க அடியவர் மூலம் கேட்டு ஒருசிலவற்றைத் தெரிந்துகொள்ளலாம். அருட்சட்டம் மேற்கொண்டு உண்மையன்போடும் பாடுபட்டால், அண்ணலாரின் அருள் திறத்தை அனுபவ மூலம் உணர்ந்து ஆனந்தமுறலாம்.

8. அண்ணலார் அடக்கமும், ஆலய அமைப்பும்

அருளடக்கம்

இகபர நலங்களை எல்லா உயிர்க்கும் இனிதருளப் போந்த நம் குருபெருமான், அடியவர் பொருட்டு, முடிவில்லாப் பெருந்தவத்தை மேற்கொள்ள, பூதேவியின் திருவயிற்றில் அமரப் போகும் தருணம் நெருங்கியதுணர்ந்தனர்.

மிக நெருங்கிய அடியார்களுக்கு இச்செய்தியை நிட்டைக் குறிப்பிலும், கனவின் மூலமும் உணர்த்தினர். "சாமி தங்கியிருக்க இடம் வேண்டும்; இச்சாமி கொடுத்திடுமோ?" என்று வினவுவார்கள். பின்னர் "சாமிக்கு இடம் கிடைத்துவிட்டது" என்று கூறுவார்கள். 'எதுவும் யாரிடமும் வேண்டாத சாமிக்கு இடம ஏன்?' என்று எண்ணியும், சாமி அடங்கப்போகும் காலம் நெருங்கியதோ என்று வருந்தியும், சாமி மறைந்தால் நாம் என்ன செய்வோம் என ஏக்கமுற்றும் அடியவர் தவித்தனர். நாம் சோர்வுற்றிருந்த சமயம, சுவாமி நம்மைப் பார்த்து, "ஏன் வாட்டமுற்றிருக்க வேண்டும்? இந்தச் சாமி அடைந்துவிட்டால்,

பிறகு யார் துணை என்று ஏக்கமோ? இந்தச் சாமி அடைய வந்த சாமியல்ல; எப்போதும் இருக்கும்; அச்சமே வேண்டாம்'' என்று தைரியம் ஊட்டினார்களே என எண்ணி ஒருவாறு ஆறுதல் அடைவர்.

அண்ணலார் இரெட்டியப்பட்டி ஊர் மக்களை அழைத்து, ''சாமி அடங்கினால் இந்த இடத்தில்தான் அடக்கம் செய்ய வேண்டும்'' என்று தம் இல்லத்தில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினர். அந்த இடத்தில்தான் சுவாமிகள் தம் தாயார் வயிற்றினின்றும் திருஅவதாரம் செய்தனர். அதே இடத்தில்தான் இளமையில் விநாயகரை வைத்துப் பூசை செய்தார்கள். அங்குதான் வேலினை வைத்து வழிபட்டுள்ளனர்.

இவ்வாறு சுட்டிக் காட்டிய பின்னர், கி. பி. 1923, ஜனவரியில், துந்துபி வருடம் மார்கழி மீ 28-ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஏகாதசி திதி அனுட நன்னாளில், அண்ணற்பெருமான், உயிர்கட்கெல்லாம் அருள் நலம் பாலித்து, மேல்நிலைக்கண் உய்க்க, உள்ளடக்கமாயினர்.

செய்தியறிந்த அடியார்கள் இடியோசை கேட்ட நாகமெனக் கலங்கினர். ''வழி காட்ட வந்த கருணாமூர்த்தியே! கடைத்தேற்ற வந்த ஞானமாமலையே! அருளாளர் கூறிய உண்மைகளையெல்லாம் அருட்சட்டமாக்கி இவ்வவனிக்களித்த தெய்வ மாமணியே! ஊர் தொறும் நடந்து, உயர் அடியார்களைத் தேர்ந்து, அருளுபதேசம் புரிந்த அருட்கற்பகமே! இனி நாங்கள் யாரை நத்துவோம்? எங்கள் குறைகளை யாரிடம் கூறுவோம்?'' என நைந்துருகி இரெட்டியப்பட்டிக்கு வந்தனர்.

அகமிக நெகிழ்ந்து அன்பினால் உருகி, ஆற்றாது வந்த அடியார்களும், ஊரார்களும், சுவாமிகள் அடக்கமான ஐந்தாம் நாள் அதாவது தை மீ மூன்றாம் தேதி செவ்வாய்க்கிழமை அமாவாசை திதி பூராட நட்சத்திரம் மாலை ஆறுமணிக்கு மகா அபிடேக அலங்கார ஆராதனைகளுடன் திருக்காப்புச் செய்தனர்.

திருக்கோயில் அமைப்பு

தலைசிறந்த அடியார் பெருமக்கள் சிலர் சுவாமிகளுக்குத் திருக்கோயில் அமைக்க எண்ணினர். சுவாமிகள் அடக்கமாகிய இடம், சுற்றிலும் வீதிகள் திகழ, ஊர் நடுவே அமைந்துள்ளது. அங்கு அடியார்கள் முயற்சியாலும், ஆண்டவர் அருளாலும் அழகான கருங்கல் கோயில் ஒன்று அமைந்தது. பின்னர் இக்கோயில் விரிவடைந்து கொடிக்கம்பம், ராஜகோபுரம், உத்ஸவர் மண்டபம், பிராகார மண்டபம் முதலியவற்றோடு விசாலமாக

அமைந்து, பல மக்களுக்கும் சிறந்த வழிபடு தலமாக விளங்கி வருகின்றது.

மூலத்திருவுருவம் கருஞ்சலவைக்கல்லினுலும், உத்ஸவ மூர்த்திகள் உயர் பஞ்சலோகத்தினுலும், மிக அழகிய முறையில் அமைக்கப்பெற்றுள்ளன. சுவாமிகளை நேரில் காணும் வாய்ப்புப் பெருதவர்கள், இத்திருவுருவங்கள் மூலம் சுவாமிகளைத் தரிசித்துப் பேறு பெறும் வகையில் மூர்த்திகள் அமைந்துள்ளன.

நாள்தோறும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று கால பூஜை நடை பெறுகிறது. வெள்ளிதோறும் சிறப்புப் பூசையும் அண்ணலாரின் அவதாரத் திருநாளான இரேவதி விண்மீனில் சிறப்பு வழிபாடும் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் புரட்டாசி இரேவதியில் ஜயந்தி விழாவும், மார்கழி அனுடத்தில் குருபூஜை விழாவும், சித்திரை மீ மூன்ருவது வெள்ளியில் வசந்த விழாவும் அடியார் பெருமக்களால் திருவருள் துணை கொண்டு சிறப்பாக நடத்தப்பெறுகின்றன.

9. சர்வ சமய சமரசம்

சமயங்களின் பொதுத் தன்மை

எண்ணற்ற பல உலகங்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் செய்கின்ற தலைவன் ஒருவன் உளன். அவன் அருளால் உயிர்கள் எலாம் நிலமேல் தோன்றி உலவுவன ஆகும். அவன் அருள் விளையாட்டால் அனைத்தும் செய்வான் மனித அறிவால் அவன் பேரருளியல்பை அளந்தறிதற்கியலாது. எங்கும் எந்தப் பொருளுள்ளும் கலந்தும் கடந்தும் பொலியும் அவன் இயல்பு சொல்லுக்கும் நினைவிற்கும் அடங்காததாகும். அவன் துணையின்றி வாழத்தக்க ஆற்றல் எவ்வுயிர்க்குமில்லை.

அவனேடு கலந்து அவன் இயல்படைந்து வாழவும் நமக்கு ஆற்றலில்லை; அவனின்றி வாழவும் இயலாது. உயிரினங்கள் தம் தந்தை எத்தகையன் என உணர்ந்தாலன்ரே அவன் சேய்களாக நன்று வாழ இயலும்? என மேலோர் உணர்ந்தனர்

முன்னேர் அருளிய நூல்களைக்கொண்டு உணர்வுன்னிச் சில உயிர்கள் முனைந்து முயலும். பன்னுளும் கண்டும் உண்மையை உணரும் ஆற்றலின்றி நாம் என்ன செய்ய இயலும் எனச் சில உயிர்கள் திகைத்து நிற்கும். வீணே வாழ்நாள் கடத்தி உண்டுறங்கிப் பல உயிர்கள் மயற்குள் அமிழும்

இவ்வாறு உயிர்கள் படும் இன்னலைக் கண்டு இரக்கமுற்ற அருட்சான்ரேர்கள், எவ்வாருயினும் இவர்கட்கு இறையருள்

ஊட்டுதல் வேண்டும் எனும் பேரன்பால், மெய்ந்நெறி பற்றித் தாம் பெற்ற இன்ப அனுபவங்களைச் செப்பினர். அவ்வாறு பல மேலோர் பல காலத்து உரைத்த அனுபவங்களே சமயங்களாக அமைந்தன.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு கொள்கை தலைசிறந்து விளங்கும். அவ்வப்போது வாழும் மக்களைச் சீர்திருத்திப் பயன் மிக அருளும். மற்றொரு கொள்கை மற்றொரு சமயத்தில் தோன்றிச் சிறப்புண்டாக்கும். ஒவ்வொரு நற்சமயமும் உலக உயிர்கட்கு உயர்வூட்டல் உண்மையாகும்.

அருளாளர் கொள்கைகள் எக்காலத்துக்கும் பொருத்த மாயிருக்கும். அவை எல்லாம் முடிவில் ஓரிடத்திற்கே அழைத்துச் செல்லும். அவை அனைத்துமே ஆன்ம வர்க்கத்தின் அல்லல் தீர்த்து உண்மையான பேரின்பத்தை அருளும்.

ஒரு மலையில் ஏறுதற்குப் பல வழிகள் இருத்தல் போலும், ஒரு பொருளை அடைவதற்குப் பல மதங்கள் பல வழிகளைக் கூறு கின்றன. ஒரு பொருளைப் பலமொழியிற் பல பேரிட்டுக் குறித்தல் போல, ஒரு பொருளைப் பல சமய மக்கள் பல பேரிட்டுப் போற்றிப் பயன் பெறுகிறார்கள். ஒரு நெறியை நாம் பற்றிப் பயனுறுவோம். உலகில் உள்ள பிற திருநெறியை மனத்தாலும் நிந்திக்காது அருளெய்திச் சிறந்து வாழ்வோம்.

எல்லாச் சமயமும் ஒரு பரம்பொருளையே குறிக்கோளாகக் கொள்ளும். பக்தி, ஞானம் வேண்டும் என்றும், தீய பழக்கங்களை நீக்கி, நல்ல பழக்கங்களை மேற்கொண்டு பரமானந்தம் பெற வேண்டும் என்றும் எல்லாச் சமயமும் ஒப்புக்கொள்ளும்.

சைவமும் வைணவமும் இருகண்களெனத் தாரணியில் திகழ்வன ஆகும். உய்வழி நன்றே உணர்ந்து வாழ்வாற வேண்டும் என இஸ்லாமியம் ஓதும். செய்வதனைத்தும் திருத்த முறச் செய்தல் வேண்டும் எனக் கிறிஸ்தவ சமயம் இயம்பும். இவை நான்கும் சொல்லும் சாரத்தைச் சற்றுச் சிந்தித்து உணர்வோம்.

சைவம்

பிற ஒன்றன் உதவியின்றித் தானே அறியும் முற்றறிவுடையவன் இறைவன். அறிவித்தால் அறியும்; அறிவிக்காவிடில் அறியமாட்டாது ஜீவன். அறிவித்தாலும் அறியமாட்டாது சடம். ஆகிய முப்பொருள் உண்டு என அறிவு, அன்பு, அருள் இவற்றிற் சிறந்த பெரியோர்கள் அனுபவத்தால் உணர்ந்து உரைத்தனர்—பதி, பசு, பாசம் என இம்மூன்றையும் பகர்ந்தனர். இவை மூன்றும் என்றும் இருப்பதனால் அனாதி யென்றனர்.

பதி தனியாய்த் தூயவராய்த் திகழ்வர். உயிர்மேல் பாசம் படிந்து நிற்கும். பாசம் நீங்கினால்தான் உயிர் தூய்மையெய்தி இன்பமுறலாகும். உயிர்மீ தொன்றியுள்ள பாசத்தை உயிரே நீக்கிக்கொள்ள இயலாது. உயிர்கள்பால் இரக்கமுற்ற இறைவன் பாசத்தினை நீக்கித் தூய்மை புரிவன். அப்போது முகில் விலகியதும் கதிரோன் ஒளி தோன்றுதல்போல் ஆன்மா விளங்கும்.

ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலத்தால் கட்டுண்ட உயிர் பதியருளால் மலநீக்கம் பெற்றபின்னர், பேரின்ப நிலையடைய இறைவன் திருவருள் செய்கிறான். மாபெருங் கருணையால் இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழில் புரிகிறான். உயிர்களுக்குத் தனுகரணபுவன போகங்களை அருள்கிறான். மாயைக்குள் உயிர்களை ஆழ்த்திப் பக்குவம் செய்தருள்கிறான். உயிர்மேற் படிந்துள்ள பாசம் வினைப்போகத்தால் வலிமை குன்றும். இதனை மலபரிபாகம் என ஆன்றோர் கூறுவர். நல்வினையும் தீவினையும் சமமாக உணரும் காலம் இருவினையொப்பாம். இந்நிலையில் சக்தியருள் படியும். பாசத்தின் வலிமையினைக் கடவுள் குறைத்தருள்கிறார். எஞ்சியுள்ள பாசத்தை வாசனாமலம் என்பர். ஆக்கை ஆசற்று நீங்குகையில் அவ்வாசனாமலமும் அகன்று நீங்கும். மாசற்ற அவ்வுயிரை மலரடியிற் சேர்த்து முத்தியருள்வான் ஈசன்.

'சிவம்' என்றால் அன்பு எனத் திருமூலர் போன்ற ஆன்றோர் பொருள் கொள்வர். எவ்வுயிரிடத்தும் அன்பு புரிந்து, எல்லா உயிரையும் சிவனாகக் காணும் தவநெறியே முத்திபெறும் நெறியென்பது சைவ சமயத்தின் கொள்கை. மும்மல பாசம் அகல இறையருளே துணையாகும்.

இறையருள் பெறற்கு ஆன்மா தனதியல்பை உள்ளபடி உணர வேண்டும். இறைவனுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தத்தினை அறிந்துகொள்ள வேண்டும். உடலுக்குள் உயிர் உறைவதையும், உயிருக்குள் இறை ஒளிர்வதையும் உணர்தல்வேண்டும். உயிரின் இருப்பிற்கும் செயல்களுக்கும் இறைவனே காரணம் எனும் உண்மையை உணர்தல் வேண்டும்.

கதிரொளி நம் கண்ணொளியிற் கலக்கும் போதே நம் கண் பொருளைக் காணும். முதல்வனருள் ஆன்ம அறிவொடு கலந்து நின்று அதனை நன்று ஒளிரச் செய்கிறது. முதல்வனின் இச்சை கிரியைகளைச் சார்ந்து உயிரின் இச்சை செயல்கள் உண்டாகின்றன. இதனை அனுபவபூர்வமாக உணர்வதே முத்தி நெறியாகும்.

முத்தி நெறியைக் கடைப்பிடிப்போர்க்குப் பழவினைகள் முழுதும் தீரும். சித்தமலம் அற்றுவிடும். சிவமாய்ச் சிவானந்த

மெய்துவார்கள். பக்தியுடன் இறைவன் அடியவரை வழி பட்டால் முத்தியெய்தலாம். உத்தம சற்குருவுக்கு உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்து இன்பமெய்தல் மேலானதாகும்.

வைணவம்

எங்கும் நிறைந்து விளங்கும் இறைவனுக்கு அன்பு வழிபாடு செய்து அகமும் புறமும் தூய்மையுற்று ஆனந்த வாழ்வாற்ற வேண்டும் என வைணவம் சாற்றுகிறது. இறைவனிடம் சரணாகதி யடைதல் சிறப்புடையது. நானெனும் அகங்காரத்தை ஒழித்தல் முத்திக்குறு நெறியாகும். இறைவன் உதவியின்றி யான் ஏதும் செய்ய இயலாது; அவன் என்னை ஆட்டுவிப்பவன்; யான் அவன் கைக்கருவி; அவன் குறிப்பின்றி அணுவும் அசையாது என்பதை உணரவேண்டும்.

இவ்வண்ணம் எண்ணி எண்ணி 'யான்' என்பதைத் தேய்த்துக் கொண்டே போனால், இதன் முடிவில், செப்பற்கரிய பேரின்பம் எய்தும். ஒவ்வொரு கணத்திலும் நம் சக்தியின்மையை உணர்ந்து இறைவன் சரணம் பற்றும் 'ப்ரபத்தி' நெறியே சிறந்த நெறியென வைணவம் விளக்குகின்றது.

எல்லாமும் இறைவன் செயல் என்று உன்னி, இறைவனுக்கே அடிமையாகி, எல்லா உயிர்களும் 'இறைவன் வசப்பட்டு ஒழுகும் இயல்புடையோம்' என்பதைப் பலவகையாலும் உணர்ந்து, அவன் திருவடியே தஞ்சம் எனப் பற்றித் தூய்மைமிக்க சொல், நினைவு, செயல்களால் போற்றின், துயர் நீங்கி இன்பம் எய்தும்.

எல்லாமும் அவன் அருளே எனப் பற்றித் தன் செயல் எல்லாம் இழந்து, பரபோதம் தலைசிறந்து தோன்றப்பெற்ற நல்லாரை வழி படலும், ஞானாசாரியரை வழிபட்டுத் தொண்டு புரிதலும் பரமபதம் பெறற்குரிய நன்னெறியாகும்.

குருநாதர்க்குச் சேவை செய்து, அவர் சொற்படி நடந்து, பரஞான உருவான பகவான் அவரே எனும் உறுதி பூண்டு, அவர் திருவடி பேணுதலே பேரின்பம் என்று வாழ்வோர் முத்திப் பேறடைதல் உறுதி என ஆன்றோர் அருளியுள்ளனர்.

இஸ்லாமியம்

நன்முறையில் வாழ்வதற்கு மக்களைத் திருத்தி, ஒழுக்க நெறியினை உணர்த்தி, உலகினில் வாழ்வாங்கு வாழச் செய்யும் மேலான நல்ல சமயம் இஸ்லாமியமாகும். பக்தியே அதன் உயிர். கடவுளுக்காக வாழ்வாற்ற வேண்டும் என்று அந்தச் சமயம் கூறும். 'இஸ்லாம்' எனும் சொல்லுக்கு அமைதி என்றும் முத்தி என்றும் பொருளுண்டு என்பர். தூய மனத்தோடு செய்யும் வணக்கம்

இறைவன் ஒருவனுக்கே உரியது என்றும், தூய அமைதி அருளும் இறைவனின் திருத்தூதரே முகம்மது நபி என்றும் நம்பி, நாள் தோறும் ஐந்து முறை தொழுதல் வேண்டும்.

இறைவனிடத்து அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்வோன் தீது எண்ணமாட்டான். இறைவனிடத்து உள்ளத்தை ஒப்புக் கொடுத்தோன்பால் தூய்மையெய்தும். முறையோடு நோன்பு ஆற்றினுல் உடல் உளம் உயிர் யாவும் உயர் தூய்மை யடைதல் திண்ணம். யாண்டும் குறிக்கோளுடனும் செயல்செய் திறனும், பேசும் திறனும் எய்துதல் வேண்டும்.

அன்னியரின் பொன், பெண். மண்மீது ஆசை அடியோடும் அகற்றல் வேண்டும். செல்வமும், உடல் வலிமையும் வறிஞரைக் காப்பாற்றற்கென்றே இறைவன் வழங்கியுளான் என்றுணர்ந்து வாழ்வாற்ற வேண்டும்.

கிறித்தவம்

அன்பு என்னும் அடிப்படையில் அமைந்தது கிறித்தவ சமயம். உன் பக்கல் உள்ளவனை நீ சகோதரன் என நேசித்தால்தான் இறைவன் உன்னைத் தன் மகனுக ஏற்றுக்கொள்வான்; அன்புள்ள ஒருவனையே அனைவரும் நேசிப்பர்;

ஏழைகளுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குச் செய்வதென எண்ணவேண்டும்; வாழ்வதற்கு என்று ஏதொன்றும் சேர்த்து வைத்துக்கொள்வது நற்பழக்க மன்று; பறவைகளைப் பார்; எவ்வளவு மகிழ்வோடும் அவை துலங்குகின்றன! இறைவன்பால் விஸ்வாசம் உள்ளோர்க்கு இயற்கை அடிபணியும்;

இறைவன் தியானத்தினுல் பிணிகளைத் தவிர்த்துக்கொள்ள லாம்; பிறவியில் நாம் இயற்றும் நலம் தீங்குகட்கு ஒருநாள் தீர்ப்பு உண்டு என்பது உண்மை; இறைவனிடத்தில் பூர்ண நம்பிக்கை வைப்பின் நிச்சயம் வெற்றியே கிடைக்கும்; அற நெறியில் அன்போடு வாழ்வாற்ற வேண்டும் என்பன இயேசு நாதரின் அருள்மொழிகளாகும்.

நம்பிக்கை உள்ள இடத்து அன்புண்டாகும்; அன்புள்ள இடத்தில் அமைதியுண்டாகும்; அமைதியுள்ள இடத்தில் அருளுண்டாகும்; அருளுள்ள இடத்தில் இறைவன் வாழ்வான்;

இளம் குழந்தை போலக் கள்ளம் கபடில்லா உள்ளம் நமக் கெய்தினுல், எல்லா வளமும் இறைவன் அருளுவான்; இறைவனின் அருட்காட்சி நிச்சயமாய்க் கிடைக்கும்; எல்லாம் வல்ல இறைவன் அனைத்துயிர்களின் அகத்தும் புறத்தும் விளங்கிப் பெருங்காவல் புரிந்து இனிதியக்கும் வியன் காட்சி எங்கணும் தோன்றும்;

உலகின்கண் எத்தகைய சூழ்நிலைகள் ஏற்படினும், அவையனைத்தும் இறைவன் திருவருளால் நடைபெறுவது என்னும் உயர்ந்த நம்பிக்கையோடும் சகிப்புத் தன்மையோடும், இறைவனிடம் பக்தி விசுவாசத்தினேடும் திகழும் நிலை வாய்த்து விட்டால், அதனினும் சிறந்த பேறு உலகினில் இல்லை என்பன இயேசுநாதரின் அருள்மொழிகளாகும்.

அண்ணலாரின் அருட்கருத்துகள்

எல்லாச் சமயங்களின் சாரத்தை அண்ணலார் அருட்சட்டமாக அருளியுள்ளார்கள்.

1. தெய்வ நம்பிக்கை

'புந்தி வட்டத்திடை புக்கு நின்ருனையும் பொய் என்பனே, என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். 'பொய்யோ மெய்யோ என்று புகலாதே—மெய்யை—அகலாதே—தெய்வம்—விலகாதே—பதம்—பொருந்த அருந்தவங்கள் செய்ய நினைப்பாய்' என்பது அண்ணலார் அருட்பாடல்.

2. இறைவன் ஒருவனே

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது திருமூலர் திருமந்திரம். . 'தெய்வம் ஒன்றே என்று முடிவாய்—கண்டு—தேவதா பிரார்த்தனை விடுவாய்' என்பது அண்ணலார் அருட்பாடல்.

3. இறைவன் உயிர்தொறும் திகழ்கிருன்

'எவ்வுயிர்க்கும் பின்னமற நின்ற பெருமானே' என்பது குமரகுருபர சுவாமிகள் திருவாக்கு.

'இமைப்பொழும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்பது மணிவாசகர் திருவாசகம்.

'உன்னைப் படைத்தவன் ஆரு—உனக்—குள்ளே இருக்கிருன் பாரு' என்பதும், 'பிரம்மம்—அகத்திற் குடியிருப்ப தறியாமல்—மனமே—அலையாதே'—என்பதும் அண்ணலார் அருட்பாடல்.

4. நிலையாமையை உணர வேண்டும்.

'நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறி வாண்மை கடை' என்பது வள்ளுவர் வாய்மொழி. 'நித்தியம் ஒன்றேயிருக்க அநித்தியம், சத்தியமென்று நினைத்தது தப்பிதம்' என்பது அண்ணலார் அருட்பாடல்.

5. ஆனந்த நடனம் நம்முள் காணல்

'யார்க்கும் அண்மையதாய் அம்பலத்துள் ஆடியருள் பேரொளி' என்பது திருவிளையாடற்புராணம். 'ஆடுகின்ற

கூத்தை அறிவார் ஒருவரில்லை, என்பதும், 'ஆத்தாளுடன் கூடி அன்புடனே வாதாடி, கூத்தாடி நின்றனடி' என்பதும் அண்ணலார் அருட்பாடல்.

6. 'உணர்த்த உணரும் தன்மை'

'உணர்த்த உணரும் தன்மை உயிர்க்குரியது' என்பது மெய் கண்ட தேவரின் சிவஞான போதம். 'தாரணியோர் செயலதனை நீயறிவாய்; யானறியச் சக்தியுண்டோ' என்பது அண்ணலார் அருட்பாடல்.

7. அன்பு நெறி

சிவன், நெருப்பு மயமானவன். மாயை அணுவளவும் எக் காலத்தும் அவனிடத்தில் படிவதில்லை. சலனமற்ற நிர்க்குணமாய் அவன் திகழ்வான். அவனை அணுகிடும் உயிர்கள் ஆணவ மாயா கன்மம் அழிக்கப்பெற்றுச் சிவமயமாய்த் திகழும் எனச் சைவ சமயம் கூறுகிறது.

'அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே'—என்பர் திருமூலர். அன்புநெறியே அருட்சட்ட நெறியாகும். 'அன்பினைப் பெறு வாயாகில் அதர்மங்கள் அனைத்தும் நீங்கி, துன்பமும் தவிர்ந்து போகும்' என்பது அண்ணலார் அருட்பாடல்.

8. குருவைப் பணிதல்

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுருச் சிந்திப்ப தாமே'

என்பது திருமந்திரம்.

'ஆணவம் மாயைகன்மம் அகற்றும் சற்குருபாதம், காணவுருகி நாடிக் கண்டால் தெளிவு வரும்' என்பது அண்ணலார் அருட் பாடல்.

9. அடியார் தொண்டு

'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்ப நிலை தானேவந் தெய்தும் பராபரமே' என்பது தாயு மானவர் திருவாக்கு.

'தொண்டர் பணி செய்பவர்கள் சூக்மாதி சூக்மமெல்லாம்' கண்டு தெளிவாரடி—ஏகுயிலே—கீர்ஞத காட்சி யெல்லாம், என்பதும், 'நிருவிகற்ப சமாதி பெற்றிடும் அடியர் பொற்பதமே பிடித்திடு—நிட்டைநிலை பூரணமதாகுமே'— என்பதும் அண்ண லார் அருட்பாடல்,

10. பரிபூர்ண சரணுகதி

சரணுகதி தத்துவத்தை வைணவ சமயம் வற்புறுத்துகிறது. 'மனம் வாக்குக் காயங்கள் யாவும் உன்னிடமாக, வைத்த நாள் முதலாக வருகின்ற செயல் எல்லாம், உனக்கே பொறுப்பல்லாமல் எனக்கினிச் சுமையேது' என்பதும், 'தமியேன் உடல் பொருள் ஆவி மூன்றும் திறை தந்தேன் தந்தேன் மெய்யனே' என்பதும், அண்ணலார் அருட்பாடல்.

11. அகங்காரத்தை அழித்தல்

இறைவன் பெருமையையும், நம் சிறுமையையும் எண்ணி அகங்காரத்தை அழிக்கவேண்டும் என்பது மேலோர் கருத்து. 'கெட்டிக்காரத்தனங்கள் ஏது?' என்பது அண்ணலார் அருட் பாடல்.

12. ஏழைகட்கு இரங்கல், உண்மை வாணிபம்

இவ்விரண்டும் இஸ்லாமிய சமயத்தின் முக்ய கொள்கைகள் ஆகும். அண்ணலார் ஏழைகட்கு இரங்கியே இரெட்டியப்பட்டியில் இளம் வயதில் கொள்விலேக்கே பொருள்களே வழங்கி உண்மை வாணிபம் புரிந்தார்; எளிய முறையில் அருட்சட்ட நெறியை வகுத்தருளியுள்ளார் என்பன குறிப்பிடற்பாலன.

13. தொழுகையும் தவருமையும்

இவை இஸ்லாமிய சமயத்தின் இன்றியமையாத கடமைகள் ஆகும்! 'நித்தியகர்மங்களேக் கல்லு; அதன் நெறிகள் தவறலாமோ விள்ளு' என்பதும், 'நேம நிட்டை தவருதிருப்பவர்கள் துணை யாகும்' என்பதும் அண்ணலார் அருட்பாடல்.

14. விரதம்

'சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடில் ஒருவன் துன்னு நற்றவ மெலாம் சுருங்கி, ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்' என்பது இராமலிங்க சுவாமிகள் திருவாக்கு. 'காப்பது விரதம்' என்பது அவ்வைப் பிராட்டியார் அருள்வாக்கு. 'ஆறு சுவையொடு நீ புசியாதிரு, அத்தன் திருவடி காணும்—யோக—சித்திகளும் பல தோணும்' என்பது அண்ணலார் அருட்பாடல்.

15. பொறுமை, அன்புநெறி, மன்னிப்பு எல்லாச் செயல்களேயும் பரம பிதாவுக்கு ஒப்புவித்தல்

இவையாவும் கிறித்தவ சமயத்தின் சிறந்த கொள்கைகள் ஆகும். இவை அனேத்தும் அண்ணலார் அருளிய அருட்சட்ட நெறியின் இன்றியமையாத அம்சங்களாகத் திகழ்கின்றன.

அண்ணலார் வரலாற்றில் உள்ள தனிச்சிறப்புகள்

1. சுவாமிகட்கு அருட்காட்சி யளித்த ஸ்ரீ பரிபூர்ணப் பெருமான் நிரந்தரமாக நிலைத்து நின்று, எல்லா உயிர்க்கும் அருள்பாலித்து வருகின்றனர்.

2. இல்லறத்தாரும் அந்நிலையிலிருந்தே முத்திப் பேற்றையும் அடைய சுவாமிகள் வழிகாட்டியருள்கின்றனர்.

3. இம்மையில் தூய அருள்வாழ்வாற்றி, பரகதியாகிய முத்திப் பேற்றையும் அடையத்தக்க அருள் நெறியை இனம், மொழி, மதம், நாடு, வயது, அறிவு, செல்வம் என்ற எவ்வகையான பேதமுமின்றி எக்காலத்துக்கும் ஏற்ற முறையில், அனைத்துயிர்க்கும் பொதுவாகச் சுவாமிகள் வகுத்துத் தந்துள்ளனர். 'சட்டம்' மீறினால் தண்டனை தந்து திருத்தியருள்கின்றனர்.

4. அடியவர்க்கும் அன்பர்கட்கும் அரும்பெருந்துணையாயிருந்து ஊக்கி, இன்னல் நீக்கி இன்பம் ஊட்டிப் பேணுகின்றனர்.

5. அவதாரமான அதே இடத்தில் அடக்கமாகித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளனர்.

6. அடக்கமான பின்பும், முன்னிலும் பன்மடங்கு பெருங் கருணையோடு என்றும் வழிகாட்டிப் பேணிப் புரக்கும் இன்னருட் பெருமானாக இலங்குகின்றனர்.

இவையனைத்தும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் வரலாற்றில் காணும் தனிப்பெருஞ் சிறப்புகளாகும்.

10. அடியவர் இலக்கணம்

அடியவரின் உதார குணம் கடலினை நிகர்க்கும். அன்பு, கதிரவனை நிகர்க்கும்; பணிவு, பூமியை நிகர்க்கும். அவர்கள் பல்லாயிரங்கோடி அண்டங்களையும் படைத்துக் காத்து அருளாட்சி புரியும் சக்கரவர்த்திக்கு அடிமையென எண்ணிச் சதா காலமும் அப்பெருமானின் திருவடிக்கு அகத்தின்கண்ணே அருட்பூசை நிகழ்த்தி உய்வர்.

தேக இச்சை துறந்தவராய், பரம்பொருள் துணை எப்போதும் உளது எனும் உறுதியுடையவராய், இறைவன் உளத்தில் நிரம்பியிருத்தலால், அவனைத் தவிர வேறு எண்ணமும் இச்சையும் இல்லாதவராய், இறைவனுக்காகவே வாழ்வாற்றுபவராய், எத்தகைய சூழ்நிலையிலும் இறைவன் திருவடியை விடாது பற்றும் பேருறுதி உடையவராய், இறைவன் திருவடிமலர்கள் தம் சென்னி மிசை திகழுதல் கண்டு சிந்தை மிக மகிழ்ந்தவராய், எண்ணம்

உரை மூச்சு செயல் அத்தனையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்தவராய், ஞானம், பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் இவை செறிந்தவராய்,மண்ணுலக மாயையை வென்று, இறைவன் அருள் மயமாய் வாழ்கின்றவராய், விண்ணமுதும் கைப்ப உயர் பேரின்பம் அனுபவிப்பவராய் விளங்குவர்.

குருபரனர் திருநாமம் கேட்டதும் அன்பினல் உள்ளம் உருகி இருவிழியும் நீர் பெருக்க இதயம் அனலிடு மெழுகாய் உருகுவர். தும்பறுத்துக்கொண்டு தாய் அருகு ஓடும் இளங்கன்று போலக் குருபரனர் திருவுருக் காணின் கடிதோடி அவர் பதங்கள் சிரமேற் கொண்டு இன்புறுவர்.

அவர்களின் அருள் உபதேசங்கள் உயர்மறைகளாகும். அண்டங்களில் நடைபெறும் அனைத்தும் இறை திருவருளால் அவரது அகத்துள் தோன்றும். இறைவனின் அருளுருவம் பலவும் நிறைதவம் மிக்க அவர்பால் தோன்றும்.

தாம் இனிது பெற்ற அருட்பயன் அனைத்தும் தரணியோர் எய்தி உய்ய எப்போதும் உழைப்பர். பிறர் துயர் கண்டால் அணுவும் பொறுக்க இயலாராய், விரைந்து சென்று துயர் துடைத்து அருள் சுரப்பர்.

அண்ணல் யார்க்கேனும் கடிதம் எழுதப் பணித்தால், 'அடியவர் பாத தூளிகட்கு அநேக வணக்கம்' என்று எழுதும்படி பணிப்பார்கள் என்ருல், அடியவர் சிறப்பினைச் சொல்ல யாரால் இயலும்? அருளடியார் திருவடி மலர்கட்கு அன்பு வணக்கம் செய்வோமாக.

11. அடியவர்தம் அளப்பரும் பெருமை

அடியவர்கள் திருமேனியும் அவர்களின் பேச்சும் மூச்சும் பிரணவமயமேயாகும். அவர்கள் எல்லா உலகையும் படைத்துக் காக்க வல்ல ஆற்றலோடு இலங்குவர். உலகுக்கு அருட்கண்ணுக வும் ஆசானுகவும், ஆருயிராகவும், அருட்ஜோதியாகவும் விளங்குவர்.

அவர்களின் உள்ளத்திலும், திருவாயிலும், நாட்டத்திலும், செயல்களிலும் உண்மையே திகழும். அவர்களின் திருவுளம் அன்பினை வளர்க்கும்; அறத்தினில் நிலைக்கும்; அருளொளி பெருக் கும்; ஆனந்தமாக்கும்.

அவர்களின் திருவுளப்படியே அனைத்தும் உண்டாகி இயங்கும். அவர்களின் மேனி ஞான விண்ணுகும்; உள்ளம் அன்பு வீடாகும்; செய்கை அருட்செயலாகும்; நினைவெலாம் அருள் நினைவாகும்.

அடியவர் தன்மை மலையினும் உயர்வாம்; கருணை, கடலினும் பெரிதாம்; ஞானம், கதிரினும் ஒளியுடைத்தாம்; அவர்களின் பெருமையை அருமறை கூறும்; அருள் நூல் பகரும்.

எல்லா உலகும் அவர் புகழ் கூறும்; ஒண்பதம் போற்றும்; உற்ற தொண்டாற்றும். அமரரும் முனிவரும் அடியரைப் புகழ்வர்; அன்புடன் தொழுவர்; அவர் உரை கேட்பர்; அவர் பணி புரிவர்.

அடியவர்க்காகவே கதிர், ஒளி யருளும்; மதி, நிலவருளும்; முகில், மழை பொழியும்; பூமி, விளைவருளும். அடியவர்க்காகவே அனைத்துமிங்காகும்.

அடியவர் சிறப்பை அடியவர் உணர்வர்; ஆண்டவன் அறிவான். அவனியோர் அறியார்; அடியவர் சிறப்பே அனைத்திலு ம்பெரிதாம். "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஒளவைப்பிராட்டியார் அருள்வாக்காகும்.

12. அடியவர் உறவு

குலத்திற் சிறந்தது அடியவர் குலம். உறவிற் சிறந்தது அடியவர் உறவு. நெறியிற் சிறந்தது அடியவர் செந்நெறி. பக்தியிற் சிறந்தது அடியவர் பக்தி.

அடியர் வாழிடத்தில் அருள் மழை பொழியும்; அருளெழில் மிளிரும்; அருள் மணம் கமழும்; ஆதலால் அடியர் வாழிடம் நாடி நாம் உய்வோம். அடியவர் நமக்கு அருள்நெறி விளக்குவர். அருளினில் உயர்த்துவர். ஆருயிர்க்கு அமுதமாவர்; அடியவர் நேயம் அல்லலை அகற்றும்; அன்பினை வளர்க்கும், அருள் நலம் விளைக்கும் ஆனந்தமாக்கும்.

அடியவர் அருட்கொடி நாட்டுவர்; அருளரசாளுவர். அருளமுதூட்டுவர்; அருள் மயமாக்குவர். அடியவர் உருவில் ஆண்டவன் வருவான்; ஆதலால், அடியவரை ஆண்டவனுகக் கொள்வதே முறையாகும். அடியவர்க்குத் தொண்டாற்றி, அவர்தம் திருவடிமலரை முடிமிசை புனைவோம்.

பரிபூர்ணர் வாழ்க! குருநாதர் வாழ்க!

அருட்சட்டம் வாழ்க! அடியார்கள் வாழ்க!

ஓம் ஓம் ஓம்.

சுவாமிகளின் உபதேசங்கள்

1. ஆவி ஒடுங்கு முன்னே ஈசன் திருவடியை அறிந்து தேடிக் கொள்வாய்,

2. நல்லார் இருப்பிடத்தை நாடி நாடி நீ நலத்தைத் தேடிக்கொள்வாய்.

3. கண்ணுடி போல் தெளிவு காண்பாய்.

4. சிந்தை தெளிந்து பார்த்தாயானுல் தெரிசனங்கள் தோன்றும்.

5. பரமே உறவென்று உலக இச்சைகளைந் துறந்திடில் பவமானது வெந்து தணிந்திடும்.

6. நேசம் வைத்து நமை ஆதரித்திடுவர் பெருமான்.

7. பல்லுயிர்க் கெல்லாம் பரமனே இருக்கப் பஞ்சமும் உண்டோ? ப்யம் நமக்கேது?

8. பஞ்ச பூதப் பொறிகள் பரவும் புலன்க ளற்றுக் குஞ்சித பாதமதைக் கூடிச் சுகித்திடுவாய்.

9. மும்மலங்களைப் போக்கு—பிராரத்வ கன்மம்—முழுதும் புசித்து நீக்கு—நின்மலன் அடி தாக்கு—நிஷ்களங்க மாய்—நிஷ்டானுபூதி நோக்கு.

ஆசிரியரின் பிற நூல்கள்

குருபர வணக்கம்

சற்குரு நாதர் திருவடிப் புகழ்ச்சி

சற்குரு நாமாவளி

மதுரைப் பரிபூர்ண விநாயகர் திருவெம்பாவை,
திருப்பள்ளியெழுச்சி, திருப்பல்லாண்டு

திருக்கோயில் திருப்பணி முறையீடு

இருடியர்பட்டி குருநாதர் அர்ச்சனை

அருட் ப்ரஸாதம்

குருநாதர் பிள்ளைத்தமிழ்

குருஅருள் திருவுந்தியார்

பேரின்ப வேட்கை

குருஅருள் வேட்டல்

அருள்மணிப் பெட்டகம்

அருள்நெறி மாலை

அன்பின் ஒளி

அருட்சட்ட வழிபாட்டு முறை

அருட்சக்தி அன்னை வரலாறு

கருணைமிகு வள்ளல் அருள் நிறை சரிதம்
மற்றும் பல